டிராஃபிக் டிக்கெட்
டிராஃபிக் டிக்கெட்டால் சட்ட பிரச்சனையா?
Small Claims Court இல் வழக்கு உள்ளதா?
வீட்டில் வாடகைக்கு வசிப்போருடன் சட்டப்பிரச்சனையா?
இது போன்ற சட்டப் பிரச்சனைகளுக்கும் அழையுங்கள்
"டிராஃபிக்" குமார் எனும்
வினோத் குமார்
Mobile: 647-667-6034
Landline: 1-866-541-3966
Precision

30 ஆவது ஆண்டில்
விளம்பரம்
VLAMBARAM™
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 30 | பாலம்: 04 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | FEBRUARY 15, 2020

# கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த கனடா உதவி!

கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ தனது எதியோப்பியா நாட்டிற்கான பிரயாணத்தை முடித்துக் கொண்டு எதியோப்பியாவின் தலைநகரான அடிஸ் அபாபா இல் 2020 பெப்பிரவரி 09இல் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீன அரசின் வேண்டுகோளுக்கு இணங்கி கனேடிய அரசு ஏற்கனவே முகமூடிகள் (Face masks), பாதுகாப்பு அங்கிகள் (Protective gear) உட்பட பல மருத்துவ உபகரணங்களை சீனாவிற்கு அனுப்பி வைத்துள்ளது. இந்தப் புதிய நொவல் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த சீனா மேலும் உதவி கேட்டால் கனடா கொடுக்கத் தயாராக உள்ளது. உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் எங்களது கனேடிய மருத்துவ அதிகாரியின் பரிந்துரையின்படி எமது நாட்டில் நாங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் மிகவும் பயனுள்ளதாகவே தற்போது வரை இருக்கின்றன. இதனால் இந்த நொவல் கொரோனா வைரஸ் கனடாவில் பரவுவதற்கான சாத்தியக் கூறுகள் மிகவும் குறைவாகவே உள்ளன.

சர்வதேச அளவில் நிலைமைகளை நாங்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். ஏனைய நாடுகளுடன் சேர்ந்து அதுவும் குறிப்பாக உலக சுகாதார அமைப்புடன் இணைந்து கனேடியர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் கனேடிய அரசு எடுத்து வருகின்றது. இவ்வாறு கனேடியப் பிரதமர் ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.




சீனாவில் கொரோனா வைரஸ் ஆல் பாதிக்கப்பட்டதை உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 43 ஆயிரத்தை தாண்டியும் அதனால் பாதிக்கப்பட்டு இறந்தோரின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டியுள்ள நிலையில் உலக சுகாதார அமைப்பு இந்த வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஆராயப் பல சர்வதேச நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்றை சீனாவிற்கு அனுப்பியுள்ளது. இக் குழுவுக்குக் கனடாவின் பிரபல தொற்று நோயியல் (Epidemilogist) அவசரகால சேவை (Emergencies expert) நிபுணரான Dr. Bruce Aylward தலைமை தாங்கிச் சென்றுள்ளார். இவர் WHOஇல் பலகாலமாகச் சேவையாற்றிவரும் வைத்தியர். உலக சுகாதார அமைப்பு 2020 ஜனவரி 30இல் கொரோனா வைரஸ் பரவலை சர்வதேச பொதுச் சுகாதார அவசர நிலை எனப் பிரகடனப்படுத்தியது.

இதுவரை 99%ஆன நொவல் கொரோனா வைரஸ்இன் பரவல் சீனாவிற்கு உள்ளேயே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. WHOஇன் தக

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

Lexus of Richmond Hill
LEXUS
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
11552 Yonge Street
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com
Kumar Jegasothy
Sales Consultant

BUY & SELL REAL ESTATE..
Pat Pushpakanthan
Full Time Broker
416 894-1187
19 Years exp
Listing Deal!!
HALL OF FAME
Century 21
416-290 1200

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com

DENTAL OFFICE
3351 Markham Road, Unit #129
Markham& Steeles
Tel: 416.609.2022
3150 Eglinton Ave East, Unit #5
Markham & Eglinton
Tel: 416.264.3232
Dentistry for children, adults and seniors
Dr.Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS(Glasg.)
Dental Surgeon

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Sukumar Selvaratnam
Realtor
416.624.4803
suku07@hotmail.com
HOMELIFE

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Toll Free: 1-844-878-2721 Fax: 647-351-3099
mortgage@nesan.ca www.nesan.ca
1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC.


உவகை
மணமக்கள் இணைப்பு
Uvakai
Marriage Broker
Valvai Zagara
647.885.6104

OPEN 7 DAYS A WEEK
Free Cleaning
For New Patients " Limited Time Only "
(647) 340 8878
5200 Finch Ave E
Scarborough, ON
M1S 4Z3
(Middlefield&Finch)
MY DENTIST
@MIDDLEFIELD
www.My-Dentist.ca

வீடு வாடகைக்கு...
வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Dir: 647.839.0079


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
1286 Kennedy Rd Scarborough Ont M1P 2L5
Thas Thirunavukkarasu Dip-in-Eng(Hons)
Sales Representative
416.388.4333
thasremax@gmail.com www.soldbythas.com
Kennedy / Hwy 401
$499,000
Condo Apt. - 2BR + 2WR
Neilson Rd / Sheppard
$320,000
Condo Apt. - 2BR + 2WR
9th Line / Hwy 7 - Markham
$524,999
Townhouse - 2BR + 2WR
Hwy 7/ Pine Valley Dr -Vaughan
$528,800
Condo Apt. - 2BR + 1WR
Eglinton & Danforth - Toronto
$539,000
Condo Apt. - 2BR + 1WR
Finch & Birchmount - Toronto
$559,000
2-Storey Townhouse - 3BR + 3WR
108 Corporate Dr.- Toronto
$230,000
Commercial
582 Danforth Rd -Toronto
$34,000
Retail/ Office/ Food


New condo VIP PRIORITY ACCESS
BUY & SELL HOMES,BUSINESS,CONDO, LANDS..
Commitment Reliability Professionalism
PAT WILL BEAT any DEAL
VAUGHAN METROPOLITAN CENTRE
MASTER PLANNED TOWERS
NEXT TO SUBWAY
CALL FOR FIRST ACCESS TO GET THE DEAL!!
NEW CONDO OPENING
VVIP PlatinumACCESS
DON'T MISS
Hall of fame
CENTURION AWARDS
Pat Pushpakanthan
BROKER
416 894 1187
Century 21
Off 416-290 1200
WWW.PATPUSH.COM
AJAX
$789K
4 BEDROOM. 3 WASHROOM
MARKHAM N 16 TH AVE
$479K
GOSTATION LUXURY
1+1 BEDROOM NEAR GO STATION
Scarborough Elsemere
$878,999
3 bm 3 warm bsmnt sep. entrance
Warden/ellesmere
$699K
3 bedroom
Hwy12 and hwy 169
$120k
Vacant land
7 acre
Near Orilia
BIRCHMOUNT/ELLESMERE
$568K
2 BM 2 WSRM SWIM POOL
RENTAL CORNER
1, 2, BEDROOM CONDO RENTAL FROM $1700.00
HOUSES RENTAL FROM $1900/-
NEW CONDO ASSIGNEMENT SALE AND RESALE CONDO FOR SALE
NEEDED PL CALL ME
416-894-1187
Kings Cres./Harwood Ave.
$819k AJAX
3 BEDROOM. 3 WASHROOM 2 garage
scarborough
$329,999
2 BEDROOM 2 washroom
Kennedy/401
$398,999
1parking
1 locker
BRAND NEW
LUXURY
1 BEDROOM 1 Wm, 1 parking
Oshawa
$699,999
4 bed, 4 washroom



அம்மா



Amma Pawn Broker

தங்க நகை அடைவு மாடம்

1.5% முதல் 2.0% வட்டி மட்டுமே

(per month)

கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி
செய்யப்பட்ட முதன்மையான அடைவுச்சேவை



உங்கள் பழைய நகைகளை
அதியுயர் பெறுமானத்திற்கு
எம்மிடம் விற்றுக்கொள்ளலாம்

416-757-0034
416-994-3861

உங்கள் நகைகளுக்கு அதிகூடிய பெறுமதியையும்
மிகக்க குறைந்த வட்டி வீதத்தையும் பெற்றுக்கொள்ள
நகரின் மத்தியில் ஒரே நிறுவனம்

எவ்வளவு தொகையானாலும்
மிகக் குறைந்த வட்டியுடன்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

105A - 2425 Eglinton Ave. E, Scarborough
ammapawnbroker@gmail.com
கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத் தரிப்பிடங்கள்
Shankar& Co. வுக்கு அருகாமையில் உண்டு

நம்பிக்கை · நாணயம் · உத்தரவாதம்

அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!

முற்றிலும் இலவசமான சேவை!

12வருடத்திற்கு மேற்பட்ட
உங்கள் Gas Furnace இற்கான CO அளவீடு
வீட்டிற்கு வந்து பரிசோதிக்கப்படும்.



AATEK HEATING & COOLING

$2100 Rebate Available Now
call us 416-414-2280



- FREE Inspection in GTA
- Over 10 yrs in Business Experience
- Flat Rate Pricing
- Parts and Labour guarantee
- Guaranteed Repairs
- Professional Service
- Fully Insured

Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install

10 வருடங்களுக்கு மேலாக ரொரன்டோவின்
முன்னணி நிறுவனங்களில் பணியாற்றிய
அனுபவத்துடன்

Licensed Technician | ELENGO THIYAGARAJAH

ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com

We Are Specialists in customs homes Ductwork System

We Are Professional trouble shooters for all major gas appliances

416.414.2280

# நாமும் நமது இல்லமும் 552

## குறிப்பிட்ட நாளில் ஆதனம் கைமாறாமல் போனால்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

ஆதனத்தை ஒரு சாரார் விற்று மற்றைய சாரார் வாங்குவதற்காக இரு சாரார்களும் குறிப்பிட்ட பத்திரத்தில் ஒப்பமிடுவர். இந்தப் பத்திரம் கனடாவில் குறிப்பாக ஒன்ராறியோவில் ஒரு சட்ட ஆவணமாகக் கருதப்படும்.

பொதுவாக இந்தச் சட்ட ஆவணம், ஆதன வியாபாரத்தில் கொள்முதல் மற்றும் விற்பனை ஒப்பந்தம் (Agreement of purchase and sale) என அழைக்கப்படும். இந்த ஒப்பந்தத்தில் ஒப்பமிடுவோர் அனைவரும் ஒப்பந்த நிபந்தனைகளுக்கேற்ப நடந்துகொள்ள வேண்டும். அதனை மீறுவது சட்டப்படி குற்றமாகும். குறிப்பாக வாங்கும் / விற்கும் ஒப்பந்தத்தில் ஒப்பம் இடும்போது ஒரு குறிப்பிட்ட திகதியில் குறிப்பிட்ட ஆதனம் கைமாறப்படும் என்பது குறிக்கப்பட்டு இருக்கும். இந்தத் திகதியை நிறைவு திகதி (completion date) என அழைக்கப்படும். சில சந்தர்ப்பங்களில் நிறைவு திகதியில் குறிப்பிட்ட ஒப்பந்தம் நிறைவு செய்யாத சந்தர்ப்பங்களில் எவ்வாறான நிகழ்வுகள் நடைபெறும் என்பதனைப் பற்றி பார்க்கலாம்.

குறிப்பிட்ட நிறைவு திகதியில் மாலை 6 மணிவரை இந்த ஒப்பந்தம் செல்லுபடியாகும். மாலை 6 மணியைத் தாண்டியதும் இந்த ஒப்பந்தம் பெறுமதியற்றதாகும். அதற்கப்பால் இரு பகுதி சட்டத்தரணிகளும் தகுந்த நடவடிக்கைகளை எடுப்பர். அனேகமான சந்தர்ப்பங்களில் வாங்குபவரிற்குரிய அடமானக் கடனில் பணம் குறிப்பிட்ட நேரத்திற்குள் வாங்குபவரின் சட்டத்தரணிக்குக் கிடைக்காமல் போனால் விற்கும் சாராரின் சட்டத்தரணியின் ஆலோசனையில் குறிப்பிட்ட ஆதனத்தை விற்கும் சாரார் மீண்டும் சந்தைப் படுத்தலாம் அல்லது இரு பகுதி சட்டத்தரணிகளும் இருசாராரிற்கும் ஏற்ப ஒரு பொதுவான நிலைப்பாட்டை ஏற்படுத்தலாம். இன்றைய காலகட்டத்தில் அடமானக்கடன் பெறுவதில் மிகுந்த நெருக்கடி இருப்பதனால் அடமானக் கடன் பெறுவதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகளை கடைசிவரை பொறுத்திருக்காமல் மிக விரைவாகத் தொடங்குவது சிறப்பாகும். கடைசி நேரத்தில் ஏற்படும் தேவையற்ற மன உளைச்சல், மேலதிக செலவுகளைத் தவிர்க்கலாம். சில சந்தர்ப்பங்களில் ஆரம்ப முதலீட்டையும் (Down Payment) இழப்பதுடன் மேலதிக நஷ்டஈட்டையும் விற்றவருக்கும் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம். அத்துடன் இந்த வருட (2020) ஆரம்பத்திலிருந்து விலையில் ஏற்படும் விலை அதிகரிப்பு, விற்பவரின் மனத்தையும் மாற்றக் கூடிய





சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தலாம். எனவே முன்னேற்பாடு சிறந்தது. 2017 - 2018 மற்றும் 2019இன் முற்பகுதியில் ஏற்பட்ட விலை இறக்கம் இன்றைய காலகட்டத்தில் ரொறொன்ரோ பெரும் பாகத்தின் சில பகுதிகளில் மெல்ல மெல்ல அதிகரிக்கின்ற போதிலும் ரொறொன்ரோவில் இந்நிலைமை மிக விரைவாக மாறி வருவதனைக் காணக் கூடியதாக உள்ளது.

பொதுவாக வருடத்தின் ஆரம்பத்தில் (குளிர் காலப் பகுதியில்) ஆதன வியாபாரம் மந்தமாகக் காணப்படும். ஆனால் இவ்வருடம் நிலைமை முற்றாக மாறியுள்ளது. அண்மையில் மேற்கு ரொறொன்ரோவில் ஒரு தனிவீட்டிற்கு 79 வாங்குவோர் (Offers) போட்டியிட்டதனைக் காணக்கூடியதாக இருந்தது. இந்நிலைமை தொடருமா? என்பதனை இளவேனிற் காலம் (Spring) வரை பொறுத்திருந்து பார்க்கலாம்.

அத்துடன் Corona virusஇன் பாதிப்பு எவ்வாறு ஆதனச் சந்தையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதனையும் சில மாதங்களில் அறியக் கூடியதாக இருக்கும். ஒவ்வொரு நாட்களும் பலவிதமான செய்திகள் வருகின்றன. உண்மைகளும் மறைக்கப்படுகின்றன. வதந்திகளும் பரவுகின்றன.

- 2020இல் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஆதனங்களில் எண்ணிக்கை 32,000. இந்த வருட இறுதிக்குள் கொள்முதல் செய்வோரின் கைகளிற்கு மாற்றப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.
- 2019இல் விற்கப்பட்டவை அடுக்குமனை ஆதனம் 27,000. தனியான குடும்பம் வாழும் ஆதனம் 9,500.
- 2006 - 2016 வரை ரொறொன்ரோ பெரும்பாகம் மற்றும் ஹமில்ரன் பகுதியில் (GTHA) சனத்தொகை 14%இனால் அதிகரித்துள்ளது.
- 2040இல் இந்தப் பகுதியின் சனத்தொகை 10 மில்லியனாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது. (இந்தப்பகுதியின் இன்றைய சனத்தொகை 6.7 மில்லியன்)



Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth

## வாழும் திறன்

இயற்கையுடன் இணைந்து இன்புற்று வாழ்தலுக்கான சிறப்பு வகுப்புக்கள் பிரபல்யமான இந்திய சமய சாஸ்த்திர நிபுணர் வி. கனேஷ் அவர்களால் Middlefield & Mcnicoll சந்திப்புக்கு அருகாமையில் நடைபெறுகின்றது. ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றலாம்.

வி. கணேஷ்: 416.816.2563 மகேன்: 416.893.1222
ஆறுமுகம் (AGR): 416.832.9467


## குடும்ப தினம்

ஊன் உறக்கமின்றி உற்ற துணையுடன் கூடி
உறவாட நேரமின்றி இரவுபகலாய் ஓடிஓடி
ஓய்வின்றி உழைப்பவர்கள் தன் குடும்பத்தோடு
ஒன்றாய் கூடிக் குலாவிக் குதூகலத்துடன்
கொண்டாட விடுமுறையோடு கூடிய உகந்த
நாளே குடும்பதினம்




குடும்பத்தில் தினம் தினம் நடைபெறுகின்ற
குறை நிறைகளைக் கேட்டு அறிந்துகொள்ள
ஒருவருக்கு ஒருவர் வெளியாக வாய்விட்டுப்பேசி
ஒரு நல்ல வழி முறைகளைக் கண்டறிந்து
தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள உகந்த
நாளே குடும்பதினம்

இடம்விட்டு இடம் சென்று வாழும் எம்
இன சனங்களுடன் இணைந்து பேசிப்பழகவும்
பெற்றோர் உற்றார் உடன் பிறந்தோரோடு
உறவுகொண்டு ஒன்று கூடி அமர்ந்து இருந்து
அகம் மகிழ உணவுண்டு பானம் அருந்தி
ஆசை தீர ஆடியும் பாடியும் கொண்டாட
உன்னதமான ஒரு நல்ல இத்தினமே
குடும்ப தினம்.



கவிநாதம் பரந்தாமன்

# MORTGAGE

**MORTGAGE IN ANY SITUATION**

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட் (HELOC)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- ⇒ Private 1st Mortgage (No Income Verification)
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்
- ⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC



Cell : 416-624- 4843



www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை

MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3 Corp office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto ON M2J 5B4




# ‘வறுமை கல்விக்குத் தடையல்ல’

## நெல்லியடி சமூக அறக்கொடை அமைப்பின் பாராட்டுக்குரிய பணி

நெல்லியடி சமூக அறக்கொடை அமைப்பின் (Nelliady Community Charity -NCC) பரிசளிப்பு நிகழ்வு பெப்ரவரி 08, 2020 சனிக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரிக் கலையரங்கில் நடைபெற்றது. கனடா உள்ளிட்ட புலம்பெயர் நாடுகளிலும் உள்ளூரிலும் வாழும் தமிழ் உறவுகளின் நிதிப் பங்களிப்பில் இந்த அமைப்பு இயங்கி வருகின்றது.

அன்றைய தினம் புலமைப் பரிசில் திட்டத்தில் இணைந்துள்ள மாணவர்களுக்கான விசேட பரிசளிப்பு நிகழ்வும், வருடாந்த ஒன்றுகூடலும் இடம்பெற்றது. தெல்லிப்பளை பிரதேச செயலர் திரு. ச.சிவசிரீ தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் திரு.இ. இளங்கோவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக: வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.யோ. ரவீந்திரன், ஓய்வுநிலை அதிபர் கலாநிதி செ. சேதுராஜா, நெல்லியடி கொமர்சல் வங்கி முகாமையாளர் திருமதி. தபோதினி கஜரூபன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் திரு. க.கிருஷ்ணகுமாரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் ‘தமிழ்வணக்கம்.கொம்’ மற்றும், கனடாவிலிருந்து வெளிவரும் ‘விளம்பரம்’ ஆகிய ஊடகங்கள் சார்பில் ஒரு பார்வையாளனாகக் கலந்து கொண்டேன்.

நிகழ்வில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகியுள்ள வசதி குறைந்த மாணவர்களுக்கு மடிக் கணினிகள் மற்றும், வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சைக்கிள்கள், பணம் என்பன வழங்கப்பட்டன. இந்த அறக்கொடை அமைப்பு ஊர், பிரதேசம் என்பனவற்றைக் கடந்து அதன் சேவையை மேற்கொண்டு வருகின்றமையினையும் நிகழ்வில் கலந்துகொண்ட போது அறிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

நெல்லியடி சமூக அறக்கொடை அமைப்பு என்ற பெயரை வைத்து இது நெல்லியடி பகுதியிலுள்ள மாணவர்களுக்கு மட்டும் உதவிகளை புரிகின்ற அமைப்பு என்ற எண்ணம் பலருக்கும் ஏற்படலாம். ஆனால், அவ்வாறு இல்லை. வசதி குறைந்த - வறுமை நிலைப்பட்ட திறமையான மாணவர்கள் அனைவருக்கும் உதவி புரிகின்ற அமைப்பாக இது திகழ்கின்றது.

இந்த பரிசளிப்பு நிகழ்வில் வடக்கின் பல மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களும் வந்து கலந்துகொண்டு பரிசில்களைப் பெற்றனர். குறிப்பாகப் போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் கல்வி பயிலும் மாணவர்களும் வருகை தந்து பரிசில்களைப் பெற்றதனைக் காணக்கூடியதாக இருந்தது.




வறிய குடும்பங்களிலிருந்து பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களுக்கு மாதாந்த உதவித் தொகையை இந்த அமைப்பு வழங்கி வருகின்றது. இந்த உதவித் தொகையும் பல பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் வழங்கப்படுகின்றது. மலையகத்திலிருந்து யாழ். பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ள மாணவி ஒருவருக்கும் இந்த உதவித் தொகை வழங்கப்படுவதாக அறிய முடிந்தது.

பரிசளிப்பு நிகழ்வு நிறைவு பெற்றவுடன் இந்த அமைப்பின் உறுப்பினர்களிடம் இவ் அமைப்புத் தொடர்பான விபரங்களை அறிந்துகொள்ளலாம் என்றிருந்தேன். ஆனால், அந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய கல்வி சார்ந்த பிரமுகர்கள் மற்றும் மாணவர்களின் கருத்துக்களிலிருந்து பல விடயங்களை அறிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. கல்விக்கு வறுமை ஒரு தடையாக இருக்கக் கூடாது என்கின்ற குறிக்கோளுடன் இந்த அறக்கொடை அமைப்பு செயற்பட்டு வருகின்றமை மிகவும் பாராட்டத்தக்கது.

மாணவர்களின் கல்விக்குத் தடையாகவிருக்கும் பிரச்சினைகளை கண்டறிந்து அதனை நீக்குவதன் மூலம் மாணவர்களின் எதிர்காலத்தை வளமாக்க முடியும் என்ற நோக்கத்துடன் பல்வேறு பணிகளை NCC அமைப்பு மேற்கொண்டு வருகின்றமையினை மாணவர்களிடமிருந்தே அறிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. வறிய குடும்பங்களின் வீடுகள் பலவற்றில் மின்சார வசதிகள் இல்லாத சூழ்நிலையில் அந்தக் குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் படிப்பதற்கு ஏதுவாக மின்சார வசதிகளைக் கூட இந்த அமைப்பு ஏற்படுத்திக் கொடுத்திருப்பதாக நிகழ்வில் உரையாற்றிய மாணவி ஒருவர் தெரிவித்தார்.

புலம்பெயர்ந்து வாழும் உறவுகளினதும், உள்ளூர் கொடையாளிகளினதும் நன்கொடையாளிகளினதும் நிதியுதவியுடன் இயங்கினாலும் கூட அந்த நிதி சரியான வகையில் உரியவர்களுக்குப் பயன்படுகின்றதா என்பது தொடர்பில் முறையான கண்காணிப்புடனேயே இந்த அமைப்பு செயற்படுகின்றது. அத்துடன் அரசியல் சார்பற்ற அமைப்பாகவும் இது செயற்படுகின்றது. இதன் நிகழ்வுகளில் எந்தவொரு அரசியல்வாதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படுவதில்லை என்ற தகவலையும் அங்கு அறிய முடிந்தது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் திரு.இ. இளங்கோவன் இந்த அமைப்பின் பணிகளைப் பாராட்டிப் பேசியதுடன் தாயகத்தில் உள்ள வறிய மாணவர்களுக்குப் புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ் சிறார்கள் உண்டியல் மூலம் சிறிது சிறிதாகப் பணத்தை சேகரித்திருப்பது வரவேற்கத்தக்க விடயம் என்பதைக் குறிப்பிட்டார். (இது தொடர்பான காணொளி நிகழ்வில் காண்பிக்கப்பட்டது) இது தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் வாழும் இளைய தலைமுறையினரிடையில் ஓர் உறவுப் பாலத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். இவ்வாறான செயற்பாடுகள் உறவுப் பாலமாக மட்டுமல்லாமல் ஓர் உணர்வுப் பாலமாகவும் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தின் பின்னர் வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் வெளியேறத் தொடங்கியுள்ளன. இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் கூட தாங்கள் வழங்கும் உதவிகளை சரியான மதிப்பீடுகளின் அடிப்படையில் வழங்கினவா என்பதும் விமர்சனத்திற்குரியதே.

போரினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவவென பல சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் செயற்பட்ட போதும் அந் நிறுவனங்களின் நிர்வாகச் செலவுகளுக்கே பெருமளவு நிதி பயன்படுத்தப்பட்டது. உதவிகள் கூட சரியான வழிமுறையில் வழங்கப்பட்டதாகக் கூற முடியாது. கால்நடை வளர்ப்பில் எவ்வித அனுபவமுமற்றவர்களுக்கு ஆடு, மாடுகள் போன்றவை வழங்கப்பட்டன. தையல் பயிற்சி இல்லாதோருக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இது சரியான பயனைத் தரவில்லை. முதலில் தொழில் சார் பயிற்சியளிக்கும் பொறிமுறையொன்றை ஏற்படுத்திவிட்டு தொழிலுக்

(தொடர்ச்சி 24ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் - 67



குரு அரவிந்தன்

அருணகிரிநாதரால் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் திருப்புகழ் பாடப் பெற்ற, இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் இந்துக்களின் புனித தலமான கதிர்காமக் கந்தன் ஆலயம் இருக்கின்றது. பெரும் பான்மை இனத்தவரின் கைக்குள் சிக்கிக் கொண்டதால், இங்கே உள்ள முருகன் ஆலயத்தை இப்போது 'றூகுனு தேவாலய' என்று பெயரை மாற்றி அழைக்கின்றனர். 'மணி தரளம் வீசி அணி அருவி சூழ மருவு கதிர்காமப் பெருமாள் காண்!' 'கதிர காம வெற்பில் உறை வோனே' என்று அருணகிரிநாதர் திருப் புகழ் பாடப்பெற்ற திருத்தலம் இதுவாகும்.

இங்கு காலாகாலமாய் இந்துக்களால் மாணிக்க கங்கையில் நடத்தப்பட்ட தீர்த்த உற்சவம் என்று அழைக்கப்பட்ட, தீர்த்தத்திருவிழாவை இப்போது 'நீர்வெட்டு' என ஆலய நிர்வாகத்தினால் மாற்றப் பட்டிருக்கின்றது. பஞ்சாங்கப்படி ஆடி அமாவாசை தினத்தில் கொடியேற்றமும் ஆடி பௌர்ணமி தினத்தில் தீர்த்தமும் நடைபெறவேண்டும். இதுவரை காலமும் வடபகுதியில் உள்ள புராதன ஆலயமான மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் தீர்த்தத்திருவிழா அன்று தான் கதிர்காமம் முருகன் ஆலயத்தில் கொடியேற்றம் நடைபெற்று வந்தது. காலாகாலமாய் இதுதான் தொடர்ந்து நடந்தது, ஆனால் இப்போது தங்கள் வசதிக்கு ஏற்றமாதிரி திருவிழாக்களை முந்தியும், அல்லது பிந்தியும் வைக்கத் தொடங்கி விட்டனர். காலமும் கடந்து போகும் என்பதால், திட்டமிட்ட ஏதோ பெரிய மாற்றங்களைச் செய்வதற்கான மறைமுகச் செயற்திட்டங் களுக்கான அறிகுறியாகவும் இது இருக்கலாம்.

கதிர்காமத்தில் கந்தனை வழிபட்டபின் நடந்து செல்வோர் குறுக்குப் பாதை வழியாக செல்வக்கதிர்காமத்தை அடைந்து வழிபடுவர். சிலர் இதை செல்லக்கதிர்காமம் என்றும் சொல்வர். நாங்கள் கதிர்காமம் சென்றபோது கதிர்காமக் கந்தனை வழிபட்டபின், செல்லக்கதிர்காமம் சென்றோம். அங்கு செல்லும் குறுக்குப் பாதையைத் தடுத்து இலந்தை முட்களைப் பாதை நெடுகலும் போட்டிருந்தனர். திருவிழாக் காலங்களில் இப்படி அவர்கள் செய்வதாகச் சொன்னார்கள். எப்படி எல்லாம் தமிழரின் வருகையைத் தடை செய்ய முடியுமோ அதை எல்லாம் செய்கின்றனர். சில விடயங்கள் நேரடியாகவும், சில விடயங்கள் மறைமுகமாகவும் நடைபெறுகின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால் இப்பகுதியில் நீண்ட காலம் வாழ்ந்த தமிழர் சிலர் தேவை கருதி மதம் மாறிப் பௌத்தர் ஆகிவிட்டனர். தங்களைப் பெரும்பான்மை இனத்தவருக்கு நல்லவர்களாகக் காட்டிக் கொள்ளத்தான் அவர்கள் இப்படிச் செய்வதாகச் சொன்னார்கள். சுற்றம் சூழலுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொண்டனர்.

இவரை காலமும் பாதயாத்திரைக் குழுவினர் வடபகுதியில் உள்ள செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து புறப்பட்டுக் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் ஊடாகத் திருகோணமலைக்குச் சென்று அங்கிருந்து கதிர்காமம் செல்வது வழக்கமாக இருந்தது. இப்போது அவர்களை வராமல் செய்வதற்காகத் திருவிழாத் தினங்களை முன்னுக்கும் பின்னுக்கும் தள்ளுவதால், அவர்களது வருகையை நிறுத்திவிடலாம் என்றே திடீர் மாற்றங்களைக் கொண்டு வருகின்றனர் என்றே எண்ணத் தோன்றுகின்றது. அதுமட்டுமல்ல, அவர்கள் செல்லும் காட்டுப் பாதைகளைப் பாதுகாப்புக் காரணங்களைச் சொல்லி தடைசெய்யவும் திட்டங்கள் தீட்டி இருப்பது தெரியவந்திருக்கிறது.

யுத்தம் நடந்த காலங்களில் பாதுகாப்பிற்காகப் பாதைகளைத் தடை செய்து வைத்திருந்தனர். யுத்தம் முடிந்து சமாதான மானதும் அப்போதிருந்த அரசு பாதையைத் திறந்து விட்டிருந்தது. இலங்கையின் தெற்குப் பகுதியில் இருந்த இந்துக்களின் புனித தலமான கந்தன் குடியிருக்கும் கதிர்காமம் பறி போனது போலவே தென் மேற்கு முனையில் இருந்த இந்துக்களின் புனிததலமான தொண்டீஸ்வரமும் பறி போய்விட்டது. இந்த இரண்டு ஆலயங்களையும் சுற்றிவர இருந்தோரில் அனேகர் தொடக்கத்தில் இந்துக்களாகவே இருந்தனர். அகழ் ஆய்வுகளின்போது இப் பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓடுகளில் தமிழ் எழுத்துக்கள் இருந்திருக்கின்றன. எங்கள் இனத்துக்குச் சொந்தமான ஒவ்வொன்றும் எங்கள் அலட்சியத்தால் எங்களிடம் இருந்து பறிபோய்க் கொண்டிருக்கின்றன. இந்த இரண்டு ஆலயங்களையும் நேரடியாகச் சென்று சமீபத்தில் தரிசித்த விபரங்களை எனது பயணக் கட்டுரையில் விரிவாக எழுதியிருந்தேன்.

நீண்ட காலத்தின் முன் சுனாமி என்று சொல்லப்படுகின்ற ஆழிப்பேரலையால் ஏற்பட்ட பெரியதொரு அனர்த்தத்தால் இந்தியக் கண்டத்தின் தென் பகுதியில் இருந்து தமிழர் வாழும் இலங்கை தீவு இந்து சமுத்திரத்தால் பிரிக்கப்பட்டிருக்கலாம் என்பதே ஆய்வாளர்களின் ஆணித்தரமான கருத்தாகும். எங்கள் காலத்தில் அப்படி ஓர் ஆழிப்பேரலை ஏற்பட்டதால் தான் எங்களால் கடலலைகளின் அந்தப் பயங்கர நகர்வை நம்பமுடிகின்றது, கண் மூடி முழிக்குமுன் அத்தனையும் இயற்கையால் கொள்ளை அடிக்கப்பட்டது, உடமைகள் மட்டுமல்ல உறவுகளின் உயிர்களும் தான். எங்கள் காலத்தில் இப்படி ஓர் அனர்த்தம் நடந்ததால் ஆழிப் பேரலை என்பதை நம்புகின்றோம். இல்லாவிட்டால் இதெல்லாம் வெறும் கற்பனை என்றுதான் சொல்லியிருப்போம்.

சங்க இலக்கிய காலத்திலும் கடல்கொண்ட சங்கம் என்ற குறிப்புக்கள் இருப்பதால் இதை ஏற்றுக்கொள்ள முடியும். மற்றும் இலக்கியத்தில் அடிக்கடி குறிப்பிடப்பட்ட தென்குமரிமலை இப்போது எங்கே என்ற கேள்வியும் எழுந்திருக்கிறது. அதுதான் புவியதிர்வால் தெற்கே தள்ளப்பட்டிருக்கலாம் என்றும் அந்த மலையையே கீரிமலை என்ற பெயரோடு பெரிய மலைத் தொடராக நாகநாட்டின் வடபகுதியில் இருந்ததாகவும் நம்ப இடமுண்டு. அந்த மலைத் தொடரில் இருந்துதான் வழுக்கியாறு உற்பத்தியாகி தெற்கு நோக்கி ஓடியதாகவும் ஐதிகக் கதைகள் உண்டு. இலங்கைத் தீவைப் பிரித்த அந்தக் கடல்தான் பாக்குநீரணை என்ற பெயரோடு இப்பொழுது இருக்கின்றது. வரலாற்றில் வரும் இராமர் அணையும் இந்தப் பாக்கு நீரணையின் தொடரில் மன்னார் பக்கத்தில்தான் இருக்கின்றது.




திருக்கேதீஸ்வரத்தைப் பற்றி 'மத்த யானையை மறுகிட உரிசெய்து போர்த்தவர் மாதோட்டத்து அத்தர் மன்னுபாலாவியின் கரையிற்கே தீச்சரம் அடைமினே' என்று திஞானசம்பந்தர் பாடியிருக்கின்றார். இதே திருக்கேதீஸ்வரத்தைப் பற்றி 'நத்தார் படைஞானன் பசு' என்று தொடங்கி, 'பாலாவியின் கரைமேல் செத்தார் எலும்பு அணிவான் திருக்கேதீச்சரத்தானே' என்று சுந்தரர் பாடியிருக்கின்றார். இரண்டு நாயன்மார்களின் பாடல் பெற்ற தலம் இதுவாகும். சேக்கிழார் பெருமானின் பெரியபுராணத்திலும் இத்திருத்தலம் பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. புனித பாலாவித் தீர்த்தம் இங்கேதான் இருக்கின்றது.

சமயகுரவர்களான திருஞானசம்பந்தர் 7ஆம் நூற்றாண்டிலும், சுந்தரர் 8ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் முதற் குடியினரான நாகர்களது முக்கிய வழிபாட்டுத் தலமாக இருக்கும் இத்திருக் கோயிலுக்கு 'நாகநாதர்' எனவும் பெயர் வழங்கி வந்துள்ளது. சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்கள் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்குத் திருப்பணிகள் செய்திருக்கின்றனர். மாணவனாக இருந்த காலத்தில் திருக்கேதீஸ்வரத்தில் நடக்கும் மகாஜனக் கல்லூரித் திருவிழாவுக்கு நாங்களும் தனியார் பேருந்தில் சென்று பங்குபற்றி இருக்கின்றோம். இதுபோன்ற கல்லூரிகள், கோயில் திருவிழாக்களை முன்னின்று செய்வதால் மாணவ சமூகத்திற்கு எமது வரலாற்றை அறிந்துகொள்ள மேலும் பல வாய்ப்புக்கள் கிடைக்கும். மகாஜனக் கல்லூரி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலிலும் திருவிழா செய்வது குறிப்பிடத் தக்கது. மாருதப்புரவீக வல்லியைப் பற்றிய வரலாற்றை அறிந்து கொள்ள இந்தத் திருவிழா எனக்கு வழிகாட்டியதால் தான் 'மா-விட்ட-புரம்' என்ற சரித்திர நாவலை எழுத முடிந்தது. தென்னிந்திய அரசர்கள் மட்டுமல்ல, வன்னி, யாழ்ப்பாண அரசர்களும் திருக்கேதீஸ்வரத் திருப்பணிகளைச் செய்ததாக வரலாறு கூறுகின்றது. நீண்ட கால வரலாற்றைக் கொண்ட சிவதலங்களான இந்தப் பஞ்சாஸ்வரங்கள் எல்லாம் இலங்கையின் நாலாதிசைகளிலும் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



# கொள்கைக் கூட்டணியா தேர்தல் கூட்டணியா?

**- விகிர்தன் -**

தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்றான அணி என்று அறிவித்து புதிய கூட்டணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள்ளிருந்து முரண்பட்டுப் பிரிந்தோர் இணைந்து இவ்வாறு ஒரு கூட்டணியை அமைத்துள்ளனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் அரசியலுக்கு அழைத்து வரப்பட்டு, வடமாகாண சபைத் தேர்தலில் அமோக வெற்றிபெற்று முதலமைச்சரான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் இந்தக் கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி என்ற பெயரிலான இதன் புரிந்துணர்வு ஒப்பந்தம் சில தினங்களுக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்டது. விக்னேஸ்வரனின் கட்சிக்கு பெயர் 'தமிழ் மக்கள் கூட்டணி'. ஏனைய சில கட்சிகள் இதனுடன் இணைந்து அது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியாகி உள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பீ.ஆர்.எல்.எப், ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம், தமிழ் தேசியக் கட்சி ஆகிய நான்கு கட்சிகளுக்கிடையே இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த நான்கு கட்சிகளில் சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பீ.ஆர்.எல்.எப் மட்டுமே பழைய கட்சியாகும். விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி, அனந்தி சசிதரனின் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம், சிறீகாந்தா, சிவாஜிலிங்கம் ஆகியோரால் உருவாக்கப்பட்டுள்ள தமிழ் தேசியக் கட்சி என்பன அண்மைக் காலத்தில் உருவாக்கப்பட்டவை ஆகும்.

தமிழரசுக் கட்சியுடனும் தமிழ் தேசியக் கூட்டமைப்புடனும் கடுமையான முரண்பாடுகளைக் கொண்டிருந்தோர் நீண்ட காலமாக மாற்று அணி குறித்து கருத்துக்களை வெளியிட்டு வந்தனர். இந்த மாற்று அணி வடக்கின் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலேயே அமைய வேண்டும் என்பதும் அவர்களின் நோக்கமாக இருந்தது. தனது தலைமையில் மாற்று அணியொன்று அமைக்கப்பட்டால் அதில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இணைய வேண்டும் என்பதில் அதிக விருப்பம் கொண்டவராக இருந்தார் விக்னேஸ்வரன்.



ஆனால், ஈ.பீ.ஆர்.எல்.எப் புதிய கூட்டணியில் இணைவதை கஜேந்திரகுமார் கடுமையாக எதிர்த்தார். பின்னர், விக்னேஸ்வரனின் அரசியல் கொள்கை சரியானதல்ல என்றும் அவரையும் கடுமையாக விமர்சிக்கத் தொடங்கினார். இந்நிலையில் புதிய கூட்டணியில் கஜேந்திரகுமாரின் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இணையவில்லை. இப்போது, சுரேஸ், சிறீகாந்தா, அனந்தி ஆகியோர் விக்னேஸ்வரனுடன் இணைந்திருக்கின்றனர்.

தேர்தலை குறிவைத்து இந்தக் கூட்டணியை தான் அமைக்கவில்லை என்றும் கொள்கையின் அடிப்படையிலேயே இதனை உருவாக்கியுள்ளதாகவும் விக்னேஸ்வரன் தெரிவித்து வருகின்றார். ஆனால், இது தேர்தலுக்கான கூட்டணியே என்றும், தமிழ் கட்சிகளை பிளவு படுத்தும் பேரினவாத சூழ்ச்சிக்கு விக்னேஸ்வரன் விலைபோயுள்ளார் எனவும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் விமர்சித்து வருகின்றனர். கஜேந்திரகுமாரும் கொள்கையற்ற கூட்டணி என்றே இதனை வர்ணிக்கின்றார்.

தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிக்கும் நோக்கத்துடன்தான் விக்னேஸ்வரன் தலைமையில் புதிய கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளதாகவும், இந்தக் கூட்டணிக்கு தேர்தலில் தமிழ் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவர் என்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா கூறுகின்றார். ஆனால், தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை மீறி செயற்படுவதாலேயே விக்னேஸ்வரன் தலைமையில் மாற்றுத் தலைமைக்கான இந்தப் புதிய கூட்டணி உருவாகியுள்ளது எனத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியினர் கூறுகின்றனர்.

உண்மையில், விக்னேஸ்வரன் தலைமையிலான புதிய கூட்டணி தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிரான பலம் வாய்ந்த மாற்று அணியாக அமையுமா என்று பொதுவான கண்ணோட்டத்தில் பார்த்தால் அவ்வாறில்லை என்றே கூறலாம். விக்னேஸ்வரன் வடக்கின் முதலமைச்சராக பொறுப்பேற்ற ஆரம்ப காலங்களில் ஒரு மென்போக்குவாதியாகவே தன்னை வெளிப்படுத்தி வந்தார். பின்னர் அவரது கருத்துக்கள் தீவிரமானதாக மாறியது.

குறிப்பாக, மஹிந்த ராஜபக்ஸ ஜனாதிபதியாக ஆட்சிபுரிந்த காலத்தை விடவும் 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர் அவரது கருத்துக்கள் தீவிரத் தன்மையுடையதாக வெளிப்பட்டது. தமிழ் மக்கள் மீது அரசாங்கம் மேற்கொண்ட போரானது இனப்படுகொலையே என்ற பிரேரணையை வடமாகாண சபையில் கொண்டுவந்து நிறைவேற்றினார் விக்னேஸ்வரன்.

ஆட்சிமாற்றம் ஒரு ஜனநாயக வெளியை ஏற்படுத்தியது. தமிழ் மக்கள் மீதான அழுத்தம் சற்றுத் தளர்ந்துள்ளதான உணர்வு மக்கள் மத்தியில் தோன்றியிருந்த அக்கால கட்டத்தில் இவ்வாறான பிரேரண நிறைவேற்றப்பட்டது. மஹிந்தவின் ஆட்சிக் காலத்திலேயே அவர் அந்தப் பிரேரணையை கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கலாம். அவ்வாறு செய்யாமல் ஒரு மாற்றம் வருகின்ற சூழ்நிலையில் ஏன் செய்தார் என்கின்ற கேள்வி பலருக்கும் ஏற்பட்டது.

தமிழ் மக்களின் வாக்குகளினால் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தைத் தொடர்ந்து ரணில், மைத்திரி ஆட்சியிலும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. இதனால் தமிழ் மக்களுக்கு மிகுந்த ஏமாற்றம் ஏற்பட்டதும் உண்மையே.

அதேவேளை, ரணில் அரசாங்கத்துடன் நெருக்கமாக இருந்த- பல சந்தர்ப்பங்களில் அந்த அரசாங்கத்தை பாதுகாத்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்காக எந்தவொரு பேரம் பேசலையும் மேற்கொள்ளவில்லை என்கின்ற ஆத்திரமும் தமிழ் மக்களுக்கு உள்ளது. இதனால்தான் தமிழ் மக்களின் ஆணையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிறைவேற்றவில்லை என்று விக்னேஸ்வரன் தரப்பினர் கூட்டமைப்பு மீது குற்றம்சாட்டுகின்றனர். இவையெல்லாம் உண்மையானவையாக இருந்தபோதிலும், விக்னேஸ்வரன் தலைமையிலான புதிய கூட்டணிக்கு தமிழ் மக்கள் தங்கள் ஏகோபித்த ஆதரவைத் தருவார்களா?

அரசியல் இராஜதந்திரம், நிர்வாகத் திறமை, தலைமைத்துவ பண்பு போன்ற விடயங்களில் விக்னேஸ்வரன் தொடர்பான மதிப்பீடு தாழ்ந்த நிலையிலேயே உள்ளது. வடமாகாண சபையில் ஏற்பட்ட முரண்பாடுகள், விரிசல்கள் யாவற்றிற்கும் முதன்மை காரணகர்த்தாவாக விக்னேஸ்வரனே துருத்திக்கொண்டு தெரிகின்றார்.

வட மாகாண பிரதம செயலாளராகவிருந்த விஜயலஷ்மி விக்னேஸ்வரனுக்கு எதிராகத் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை தொடர்பான வழக்கில் விக்னேஸ்வரனுக்குப் பாதகமாகவே தீர்ப்பு வழங்கப்பட்டது. வட மாகாண அமைச்சர்களாக விருந்த டெனீஸ்வரன், சத்தியலிங்கம் ஆகியோரை பதவி நீக்கியமைக்கு எதிராக டெனீஸ்வரன் தாக்கல் செய்த வழக்கிலும் விக்னேஸ்வரனுக்குப் பாதகமாகவே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஒரு நீதியரசர் தங்களுக்குத் தலைமை தாங்க வருகின்றார், சட்டத்தினூடாக தமிழ் மக்களின் பிரச்சினையை கையாள்வார் என்று விக்னேஸ்வரன் மீது ஆரம்ப காலத்தில் தமிழ் மக்கள் மிகுந்த எதிர்பார்ப்பு வைத்திருந்தனர். பின்னர் அவரது சட்ட நிபுணத்துவம் மீதே சாதாரண பொதுமக்களுக்கு சந்தேகம் ஏற்படும் நிலை ஏற்பட்டுவிட்டது. இதற்கு காரணம் அவரது தன்முனைப்பு, அல்லது தான் என்கின்ற அகங்காரமே (Ego) என இன்று விமர்சிக்கப்படுகின்றது. இந்த நிலையில், அவரது ஆளுமை தொடர்பில் மக்களுக்கு சந்தேகம் ஏற்படுவது தவிர்க்க முடியாததே.

விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிக்கும் சுரேஸ் பிரேமச்சந்திரன் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தோல்வியுற்றவர். சிறிகாந்தா ரெலோ கட்சியின் செயலாளர் நாயகமாக பதவி வகித்து தற்போது அதிலிருந்து விலகி புதிய கட்சியை தொடங்கியுள்ளார். அனந்தி சசிதரன் கடந்த வடமாகாண சபைத் தேர்தலில் விக்னேஸ்வரனுக்கு அடுத்ததாக அதிக வாக்குகளைப் பெற்றவர். அவர் அவசரப்பட்டுத் தனிக் கட்சியை தொடங்கியமைக்கான அவசியம் என்ன? என்கின்ற கேள்வி மக்கள்

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)

விளம்பரம்
VLAMBARAM
30 ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

"விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்" நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram Publications Inc.**
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

416-666-5515

MATH

EXAM REVIEW

Gr.12,11,10,9

GUARENTEED RESULTS

GTAMATH.COM

90%+ AVG

30 YRS EXP.

# கொரோனா...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

வலின்படி சீனாவிற்கு வெளியில் 24 நாடுகளில் இந்தக் கொரோனா வைரஸின் தொற்றுப் பரவியிருந்தாலும் இதுவரை 393 பேரே இந்தக் கொரோனா வைரஸ் தொற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒருவர்



Dr. Bruce Aylward

மட்டுமே சீனாவிற்கு வெளியில் இந்த நோயால் பாதிக்கப்பட்டு இறந்தவர் ஆவர். அவரும் சீனாவின் வுஹான் பிரதேசத்தில் இருந்து பிலிப்பைன்ஸ் நாட்டிற்குச் சென்றவர். இதனாலேயே இந்த நொவல் கொரோனா வைரஸ் பரவலை சர்வதேச தொற்று நோய்ப் பரவல் (Pandemic) என WHO அறிவிக்கவில்லை எனத் தொற்று நோய்கள் நிபுணர் ஒருவர் CTV ஊடகத்திற்குத் தெரிவித்தார். 2020 பெப்ரவரி 13இல் ஜப்பானில் ஒருவர் இறந்ததுடன் சீனாவிற்கு வெளியில் இந்த நோயால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் எண்ணிக்கை 2ஆகி உள்ளது.

தற்போது பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா வில் இருந்துவரும் தகவல்களின்படி சீனா விற்குப் பயணம் செய்த வரலாறு இல்லாத சிலர் இந்த நொவல் கொரோனா வைரஸ் ஆல் பாதிக்கப்பட்டுள்ளதை சுகாதார அதி காரிகள் கண்டிருக்கின்றனர் என WHOஇன் தலைமை அதிகாரி Tedros Adhanom Ghebreyesus ஊடகங்களுக்கு 2020 பெப்பிரவரி 10இல் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் எமக்கு கரிசனை யைத் தரும் இந்தச் சில நிகழ்வுகள் ஒரு பெரிய நெருப்பாக மாறும் தீப்பொறியாக இருக்கலாம். ஆனால் தற்போதைக்கு இது ஒரு தீப்பொறி மட்டுமே என்று அவர் கூறினார். எங்கள் நோக்கம் தொடர்ந்தும் இந்நோய்ப் பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதே எனவும் அவர் கூறினார். WHOஇன் தலைமை அதிகாரி பெப்ரவரி 11இல் நொவல் கொரோனா வைரஸ் ஆல் வரும் நோய்க்கு COVID/19 என WHO எனப் பெயரிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார் மேலும் அவர் இந்நோய்க்குரிய தடுப் பூசியைக் கண்டுபிடிக்க 18 மாதங்கள் வரை எடுக்கும். இதனால் இந்நோய் தற்போது மனிதகுலத்தின் முதலாவது எதிரி. இதனை தற்போது எங்களிடம் இருக்கும் ஆயுதங்களைக் கொண்டே எதிர்த்துப் போரிட வேண்டும் என்றார்.

பிரித்தானிய 53 வயது தொழிலதிபரான Steve Walsh சிங்கப்பூரில் பயணம் செய்யும் போது நொவல் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு அவரால் ஐரோப்பாவில் உள்ள 11 பேருக்கு இந்த வைரஸ் தொற்றியுள்ளது எனத் தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் பிரித்தானிய அரசு இந்த வைரஸ் தொற்றுவதை பொது சுகாதாரத்திற்குக் கடுமையான மற்றும் உடனடி அச்சுறுத்தல் எனப் பிரகடனம் செய்து உள்ளது. இதன்மூலம் பிரித்தானிய சுகதார மற்றும் பாதுகாப்பு அதிகாரி களுக்குத் தேவை ஏற்படின் இவ்வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவரை பாதிக்கப் பட்டவரின் அனுமதியில்லாமலேயே வலுக் கட்டாயமாக தனிமைப்படுத்தித் தடுத்து வைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கனடாவில் 2020 பெப்பிரவரி 10வரை கொரோனா வைரஸ் ஆல் பாதிக்கப் பட்டோர் என ஏழு பேர் மட்டுமே உறுதி செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் மூன்று பேர் ஒன்ராறியோ மாகாணத்திலும் நால்வர் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்திலும் உள்ளனர். இவர்களில் அறுவருக்கு சீனா விற்கு பயணம் செய்த வரலாறு உண்டு. மற்றவர் இவ்வாறு பயணம் செய்த இருவருடன் ஒரே வீட்டில் வாழ்ந்தவர்.

இதனால் கனேடிய சுகாதார அதிகாரிகள் இந்நோய்ப் பரம்பலை கனடாவில் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பதாக நம்பிக்கை யுடன் இருக்கின்றனர். இதனாலேயே கனடாவில் நொவல் கொரோனா வைரஸால் பொது சுகாதார ஆபத்து மிகவும் குறை வாக இருப்பதாகக் கனடாவின் பொது சுகாதார நிறுவனம் தொடர்ந்தும் தெரிவித்து வருகிறது.

கொரோனா வைரஸ் தொற்று ஆரம்பித்த சீனாவின் வுஹான் பிரதேசத்தில் இருந்த கனேடியர் மற்றும் கனேடியப் பிள்ளை களின் பெற்றோர் ஆன கனேடிய வதி வுரிமை பெற்றோர் என 400பேர் வரையில் கனடா திரும்ப தமக்கு உதவுமாறு கனேடிய அரசைக் கேட்டிருந்தனர்.

இவர்களில் 174 பேரைக் கனேடிய அரசு பிரத்தியேக விமானம் அனுப்பி அவர்களை வரவழைத்து ஒன்ராறியோவில் ரென்றன் நகரில் உள்ள கனடாவின் மிகப்பெரிய விமானப் படைத்தளத்தில் உள்ள விடுதியில் தங்க வைத்துள்ளது. அமெரிக்க அரசின் பிரத்தி யேக விமான உதவியுடன் 39பேரை வர வழைத்து இதே விடுதியில் தங்க வைத்து உள்ளது. கனேடிய அரசின் இன்னொரு பிரத்தியேக விமானம் வுஹான் நகரில் இருக்கும் கனடா திரும்பி வர விரும்பும் மிகுதி 188 கனேடியர் / கனேடிய வதி வுரிமை பெற்றோரை ஏற்றிக்கொண்டு பெப்ர வரி 11இல் ரென்றன் நகரில் உள்ள விமானப்படைத்தளத்திற்கு வந்துள்ளது. இவர்கள் எல்லோரும் ரென்றன் நகரில் உள்ள விமானப்படைத்தளத்தில் உள்ள மூன்று விடுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டு 14 நாட்களுக்கு வைக்கப்படுவர். இவ்விடுதி களைச் சுற்றிவர தற்காலிக வேலி அமைக் கப்பட்டு இவர்கள் எல்லோரும் இங்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் எவருக்கும் பெப்ரவரி 11வரை வைரஸ் தொற்று ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா போன்ற பல நாடுகள் தமது குடியுரிமை பெற்றோரை வுஹான் நகரில் இருந்து சில கிழமைகளுக்கு முன்னரே தமது நாடுகளுக்கு விமானம் அனுப்பி மீட்டிருந்தனர். வுஹான் பிரதேசத்தில் இருந்த கனேடியர்கள் சீனாவில் உள்ள கனேடியத் தூதரகத்தில் தாம் வுஹான் நகரில் இருப்பதை பதிவு செய்யாததே கனேடிய அரசின் இந்தக் காலதாமதத்திற் கான காரணம் எனக் கனேடிய அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த நோய்ப் பரவல் ஏற்பட்டபோது கனேடியத் தூதரகத்தில் பதிவு செய்யப்பட்ட கனேடியர் பத்திற்குட்பட்டவரே வுஹானில் இருந்தனர்.



இதனால் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்வோர் அந்நாட்டில் உள்ள தூதரகத் தில் தம்மைப் பதிவு செய்ய வேண்டும் எனக் கனேடிய அரச அதிகாரிகள் வலியுறுத்துகின்றனர்.

2020 பெப்பிரவரி 13ஆம் திகதிவரை நொவல் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டோர் என 64,170 பேர் உறுதி செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 1,486பேர் இறந்துள்ளனர். இவ்வைரஸ் தொற்று நோயால் இறந்தோரின் தொகை 2002 மற்றும் 2003 காலப்பகுதியில் SARS வைரஸ் தொற்று நோயால் பாதிக்கப்பட்டு இறந்த 744 பேரைவிட அதிகமாக இருந் தாலும் நொவல் கொரோனா வைரஸ் ஆல் பாதிக்கப்பட்டோரில் 2.3% ஆனோரே இறந்துள்ளனர். SARS வைரஸ் தொற்று நோயால் பாதிக்கப்பட்டோரில் 10% ஆனோர் இறந்தது குறிப்பிடத்தக்கது.



Prime Minister at a press conference in Addis Ababa, Ethiopia

உலக சுகாதார அமைப்பு நொவல் கொரோனா வைரஸ் தொற்றுப் பற்றி மக்கள் பீதி அடையத் தேவையில்லை எனத் தெரிவித்துள்ளது. தொற்று நோய்கள் தொடர்பான மருத்துவரும் அது தொடர்பாகப் பல ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டவருமான வைத்தியர் Amesh

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)



# முதியோருக்கான இலவச பல் சிகிச்சை!

## கனடியத் தகவல் தொடர் - 323




### New Ontario Seniors Dental Care Program

கடந்த வருட இறுதியில் கனடாவின் ஆங்கில ஊடகங்களில் பின்வரும் தலைப்பில் வந்த செய்தியினைப் படித்த பின்பே இவை தொடர்பான தகவல்களை தமிழ் முதியோருக்கு வழங்க வேண்டும் என ஆர்வம் என்னுள் ஏற்பட்டது. வருமானம் குறைந்த முதியவர்களின் இலவச பற்சிகிச்சைக்காக மாகாண அரசு வருடம் $90 மில்லியனை செலவழிக்கின்றது. 'Ontario To Spent $90 Million Yearly On Free Dental Care For Low Iincome Seniors'. - CBC News – Nov. 20, 2019.

மாகாண அரசு இவ் இலவச பல் சிகிச்சை வசதிகளை தனியார் பல் சிகிச்சை அலுவலங்களினூடாக வழங்குவதில்லை. மாகாண, நகர சபை நிர்வாகத்திற்கு உட்பட்ட மருத்துவ சிகிச்சை நிலையங்களில் உள்ள பல் மருத்துவர்களினால் மட்டுமே இலவச சிகிச்சைகளை வழங்கி வருகின்றது.

முதலில் ஒவ்வொரு முதியவரும் இச்சிகிச்சை பெறும் அனுமதி அட்டைக்கு மனு செய்து அதனை பெற்றுகொள்ள வேண்டும். அதனை எப்படி பெறுவது? பற்றிய விபரங்களை இலகுவாகப் புரிந்து கொள்ள கூடிய மாதிரி வினா-விடை வடிவில் தருகின்றேன். காலதாமதமில்லாமல் விண்ணபித்துக் கொள்ளுங்கள்.

### இலவச பற்சிகிச்சைக்குத் தகுதியுடையோர் யார்? எப்படி மனு செய்வது?

- கனடாவில் ஒன்றாரியோ மாகாணத்தில் வாழ்பவராகவும் 65 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- அவர்களின் தேறிய வருமானம் (Net Income) என்பது தனி நபராகவிருந்தால் $19,300க்கு உட்பட்டதாகவும். தம்பதிகளாக இருந்தால் இருவரினதும் கூட்டு வருமானம் $32,300க்கு உட்பட்டதாகவும் இருந்தல் வேண்டும்.

கனடாவின் வருமான வரி நிறுவனத்தின் (Canada Revenue Agency_CRA) ஊடாக வருமானங்களைப் பரிசீலனை செய்வர். ஒவ்வொரு வருடமும் தவறாது வருமான வரிப்பத்திரம் அரசுக்கு சமர்ப்பித்திருக்க வேண்டும்.

- வேறு எந்த இடங்களிலும் பல் மருத்துவக் காப்புறுதி இருக்கக் கூடாது.

இணைத்தள மூலமும் விண்ணப்பம் பெற்று அனுப்பலாம் அல்லது ஒன்றாறியோ அரச அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று மனு செய்யலாம்.

### சமூகக் காப்புறுதி இலக்கம் (S.I.N) இல்லாது வருமானமும் சமர்பிக்காத நிலையில் உள்ள முதியோருக்கும் மனு செய்யலாமா?

கனடிய பிரஜையாக இருக்கும் அரச அனுமதிப்பத்திரம் பெற்ற சில தொழில்துறை சார்ந்தோரின் உத்தரவாதத்துடன் மனு செய்யலாம்.



வைத்தியர், சட்டத்தரணி, கணக்காளர், ஆசிரியர், நாடாளுமன்ற உறுப்பினர், பல்கலைக்கழகப் பேராசிரியர் போன்ற நிலைகளில் இருப்போர் விண்ணப்பிப்பவரின் தகவல்களை உறுதிப்படுத்தி உத்தரவாதம் வழங்க வேண்டும்.

### மனு செய்யும் விண்ணப்பத்தில் வழங்கப்பட வேண்டிய தகவல்கள் யாவை? எங்கே அனுப்புவது?

- மனு செய்பவரின் பெயர், முகவரி, பிறந்த காலம், சமூகக் காப்புறுதி இலக்கம்.

- தம்பதிகளாக மனு செய்தால் மனைவி அல்லது கணவர் பற்றிய விபரங்கள்

- நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதுடன், தகவல்களைப் பெற அனுப்பி வழங்கும் கையொப்பங்கள்

இணையத்தள மூலம் தகவல்களை பதிவு செய்தபின்பு, அதன் பிரதிகளை எடுத்துப் பின்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**Ministry of Health**
**Ontario Seniors Dental Care Program Station P**
**P.O.Box 159**
**Toronto, ON M55 257**
Phone: **416-916-0204 or 1-833-207-4435**
Email: **ontarioseniorsdental@accerta.ca**
Website: **www.ontario.ca\seniorsdental**

(இவ்விவரங்கள் விண்ணப்பத்தில் உள்ளது) ஒன்றாறியோ அரச அலுவலகத்திலும் (Service Ontario) விண்ணப்பப் படிவங்கள், விபரங்களை நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம். ஒருமுறை விண்ணப்பித்தால் போதும் ஒவ்வொரு 12 மாதமும் முடிய அவை தாமாகவே இன்னொரு 12 மாதத்திற்கு புதுப்பிப்பர். இங்கு 12 மாதம் என்பது ஒவ்வொரு ஒகஸ்ற் 01இல் இருந்து அடுத்த வருடம் ஜூலை 31 வரையிலான காலப்பகுதியினைக் குறிப்பிடப்படும். மனு செய்யும்போதோ அல்லது 12 மாதங்கள் முடியப் புதுப்பிக்கும்போதோ ஏதாவது தகவல்கள் தவறினால் உங்களுடன் தொடர்பு கொள்வர்.

உத்தரவாதத்துடன் மனு செய்தோர் மட்டும் (With guarantor signature) வருடம் வருடம் மனு செய்யவேண்டி வரலாம்.

### மனு செய்த பின்பு அடுத்த கட்டம் என்ன?

விண்ணப்பம் ஏற்றுக்கொண்டு விட்டால் இலவசப் பல் சிகிச்சை பெறும் காப்புறுதி அட்டையினை உங்கள் பெயரில் தபாலில் அனுப்பி வைப்பர். அதில்

- எப்படி சேவையினைப் பெறுவது?
- எப்படி? எங்கே? சிகிச்சைக்கு திகதி நிர்ணயம் செய்வது?

- சிகிச்சைக்கு கொண்டுவர வேண்டியவை எவை? என சகல விபரங்களும் இருக்கும்.

ஒவ்வொரு நகரசபை பிரிவிலும் 'பொது மருத்துவப் பிரிவு' (Public health unit) என்ற பெயரில் மாகாண, நகரசபை நிர்வாகத்தின் கீழ் இயங்கும் மருத்துவ சிகிச்சை அலுவலகங்கள் உண்டு. உதாரணமாக ரொறொன்ரோ நகரில் அதன் முகவரி

**TORONTO PUBLIC HEALTH**
**277 Victoria St., 5th floor**
**Toroto, ON M5B 1W2**
Phone: **416-338-7600**

இதேமாதிரி நகரங்களில் சிகிச்சை பெறும், ஏனைய இடங்களின் விபரங்களும் அனுப்பி வைப்பர். திகதி நிர்ணயம் செய்துவிட்டு நேரடியாகச் சென்று பல் சிகிச்சையினை இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம்.




ALL LINK
TRAVEL INC.
SPECIALIZE IN DESTINATION, EUROPE TOURS AND CRUISES ALL OVER THE WORLD.
WE MATCH AND BEAT ALL INTERNET PRICES





ALL INCLUSIVE CHEAPEST TOUR PACKAGE TO:
CUBA: 585
MEXICO: $815
DOMINICAN REPUBLIC: $ 850

கட்டணங்கள் நிபந்தனைக்கு உட்பட்டவை
COLOMBO -$1049
CHENNAI $1100
BENGALOORU $ 1130
LONDON $ 680
PARIS $895
GERMANY $695

வேறு எந்த விமான பிரயாணச் சீட்டு முகவர்களிடமும் கிடைக்காத மிகவும் குறைந்த கட்டணம்!!!

• Scarborough • Ajax • Brampton • Mississauga • Etobicoke
3300 McNicoll Ave. Scarborough, ON, M1V 5J6
CONTACT SUTHA: 416 293 8700

# இன்னல் நீக்கும் இயற்கை - 67



- அகணி -
authorakani@gmail.com

## தலைவலி

தலைவலி, மற்றும் மைக்கிரேன் எனப்படும் ஒற்றைத் தலைவலி ஆகியவற்றுக்கான இயற்கை மருந்துகள் பற்றிக் கவனிப்போம். இலங்கைப் பேச்சு வழக்கில் தலைவலியை தலையிடி என்றும் சொல்வர். ஒற்றைத் தலைவலி நெற்றியின் ஒரு பக்கத்தில் மட்டும் ஏற்படும். 1990 ஆம் ஆண்டிலிருந்து 2016ஆம் ஆண்டு வரை 195 நாடுகளில் ஆண்டுதோறும் மக்களின் ஆரோக்கியம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வில் உலகத்தில் மக்களை அதிகமாகப் பாதிக்கும் இரண்டாவது நோயாக ஒற்றைத் தலைவலி (மைக்கிரேன்) இருப்பதைக் கவனித்தனர். உலகில் நடைபெறும் ஆய்வுகளில் இந்த ஆய்வும் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. பிரித்தானியாவில் மைக்கிரேன் காரணமாக மக்கள் வேலையிலிருந்து எடுக்கும் விடுப்பு நாட்களைக் கணித்த பொழுது ஓர் ஆண்டில் இரண்டரை கோடி நாட்கள் என்று பிபிசி நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறாக பலரை இன்னல் படுத்தும் ஒற்றைத் தலைவலி நோய்க்கு நிவாரணம் கொடுப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிய ஆய்வுகளைச் செய்வதற்கு அதிகமான உதவிகள் ஒதுக்கப்படுவதில்லை. உலகத்தில் 15 ஆண்களுக்கு ஓர் ஆண், 5 பெண்களுக்கு ஒரு பெண் என்ற விகிதத்தில் மைக்கிரேன் காணப்படுகிறது.

சாதாரணமாக ஏற்படும் தலைவலி சில மணிநேரத்தில் நீங்கிவிடும். தலைவலி ஓரளவு அதிகமாக இருக்கும் பொழுது அஸ்பிரின் (Aspirin), பரசிற்றமோல் (Paracetamol), அட்வில் (Advil), இப்புரோபின் (Ibuprofen), தைனோல் (Tylenol) போன்ற மாத்திரைகளால் வலி நீங்குகிறது. இவற்றை அடிக்கடி பயன்படுத்துவது நல்லதல்ல என்பது பொதுவான கருத்து. எனவே இயற்கையான வழிமுறைகளைப் பயன்படுத்தித் தலைவலியைக் குறைப்பது நல்லது.

மனவழுத்தம், ஒற்றைத்தலைவலியைக் கொண்டிருத்தல், கண்கள் களைப்படைதல், உடலில் ஏற்படும் வரட்சி, உயர் இரத்த அழுத்தம், தலைச்சுற்று, உளவியல் காரணமான பாதிப்புக்கள், சைனஸ், சளித்தன்மை, பல் நோய்கள், தைரோய்டு போன்ற பல காரணங்களால் தலைவலி ஏற்படுகிறது. பல நோய்களுக்கான ஆரம்ப அறிகுறியாகவும் தலைவலி அமைந்து விடுகிறது. ஒற்றைத் தலைவலி நான்கு மணித்தியாலம் முதல் ஏழரை மணி நேரம்வரை நீடிக்கும். ஒற்றைத் தலைவலி பரம்பரையாகவும் வருவது வழக்கம்.



மூச்சுப் பயிற்சியை ஒழுங்காகச் செய்து வருவதன் மூலம் தலைவலியைக் குணப்படுத்தலாம்.

நாளாந்தம் புதினா ரீ குடித்து வந்தால் ஒற்றைத் தலைவலி நீங்கும். சிவப்பு மிளகாயை உணவில் சேர்த்து உண்பதால் தலைவலியிலிருந்து நிவாரணம் கிடைக்கும்.

ஐஸ் பையை (Ice bag) நெற்றியில் வைத்து ஒத்தடம் செய்வதால் தலைவலி குறையும். தலைவலி ஏற்படும்பொழுது எலுமிச்சம் பழத்தை அரைவாசியாக வெட்டிச் சாறு பிழிந்து சிறிதளவு கல்லு உப்பும், ஒரு கிளாஸ் வெந்நீரும் கலந்து குடித்துவர தலைவலி சுகமாகும்.

சந்தனத் தூளும், கராம்புத் தூளும் கலந்து சிறிது நீர் விட்டு பசையாக்கி நெற்றியில் பற்றுப் போட்டால் தலைவலி குணமாகும். துளசிச் சாறு, வெற்றிலைச் சாறு ஆகியவற்றைச் சமவளவில் கலந்து நெற்றியில் பூசி வர தலைவலி குணமாகும். கோப்பித்தூளை கொதிநீரில் போட்டு ஆவி பிடித்தாலும் தலைவலி குணமாகும். கடுகு அரைத்து அதில் பற்று போட்டாலும் தலைவலி குணமாகும்.

வசம்பு, வல்லாரை, மஞ்சள், கரிசிலாங்கண்ணி வேர் போன்றவை தலைவலிக்கு உகந்தவை. அறுகம்புல், ஆலமரம் இலை இரண்டையும் சமவளவில் எடுத்து அரைத்துப் பற்றுப் போட்டால் தலைவலி குணமாகும். அவரை இலையை அவித்துத் தலையில் பூசிக் குளித்தால் தலைவலி நீங்கும்.

தோல் நீக்கிய இஞ்சியைத் தேன் கலந்து வதக்கி 50 மில்லி லீற்றர் நீர் கலந்து கொதிக்க வைத்து நாளாந்தம் ஒரு மேசைக்கரண்டியளவு குடித்து வந்தால் தலைவலி நீங்கும். இஞ்சிச் சாற்றில் நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி தலைக்கு தேய்த்தால் தலைவலி நீங்கும். இஞ்சிச்சாற்றில் வெங்காயத்தை கலந்து அரைத்துப் பற்றுப் போட்டால் தலைவலி குணமாகும். எலுமிச்சம் பழத்தோலை அரைத்துப் பற்றுப் போட்டால் தலைவலி நீங்கும். எலுமிச்சம் பழச்சாற்றுடன் மிளகைச் சேர்த்து அரைத்துப் பற்றுப் போட்டால் தலைவலி குணமாகும்.

கடுகை நீரில் நனைத்து முளைக்க விட்டுப் பின்பு அரைத்துப் பற்றுப் போட்டால் தலைவலி குணமாகும். மக்னீசியச் சத்து அதிகமானளவு உள்ள உணவு வகைகளைச் சாப்பிடுவதால் தலைவலி குறையும். சிவப்பு அரிசி, சோளம், தானியங்கள், கீரைவகைகள், சர்க்கரை வள்ளிக் கிழங்கு, சூரிய காந்தி இலை ஆகியவற்றில் அதிகளவு மக்னீசியம் உள்ளது.

தலை, கழுத்துப் பகுதி ஆகியவற்றை நன்றாக மசாஜ் செய்து அதனுடன் ஐஸ் பையால் ஒத்தடம் கொடுத்தால் தலைவலி குணமாகும். நெல்லிக்காய்ச்சாற்றில் உப்பைக் கலந்து நன்றாகக் கொதித்த நீரில் சேர்த்து ஆவி பிடித்தால் தலைவலி குறையும்.

அதிகமானளவு நீரைக் குடிப்பதனால் தலைவலி குறையும். அதிகமானளவு கண்களுக்கு களைப்பை கொடுக்கும் பணிகளைச் செய்தால் கண்களுக்கு ஓய்வு கொடுத்துக் கொள்ள வேண்டும். மென்சூடான வெந்நீரில் கால்களை நனைத்தவாறு சிறிது நேரம் வைத்திருப்பதால் தலைவலி குறையும்.

எள்ளில் இருந்து பெறப்படும் எண்ணெய் நல்லெண்ணெய்யாகும். நல்லெண்ணெய்யில் சீசேமோல், மக்னீசியம், லெசித்தின், லினோலிக் அமிலம் ஆகிய பல பயனுள்ள பதார்த்தங்கள் உள்ளன. இதனால் நல்லெண்ணெய் மிகவும் மருத்துவப் பயன்பாடுள்ளதாக உள்ளது. நல்லெண்ணையை வாயின் உட்பகுதிகளுக்குப் பூசிக் கொள்வதன்மூலம் அல்லது வாய்க்குள் விட்டுக் கொப்பளிப்பதன் மூலம் சளித்தன்மையை நீக்கலாம். சளித்தன்மை காரணமாக வரும் தலைவலியும் குணமாகும்.

யோகாசனப் பயிற்சிகளாலும் தலைவலியைக் குறைக்கலாம். சீரகம், கராம்பு ஆகியவற்றை நீரில் போட்டு நன்கு கொதிக்க வைத்து நீரைப் பருகி வந்தால் சூடு காரணமாக ஏற்படும் தலைவலி குணமாகும்.

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

**இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலில் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர் கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இந்தக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக் கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல் நிலைக்கேற்ப பொருத்தமான மருத்துவ கருத்துக்களாக அமைந்துவிடாது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.**

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

### இருமல், தொண்டை கரகரப்பு


பாலில் பூண்டைப் போட்டு காய்ச்சிக் குடித்தால் இருமல், ஜலதோஷம், தொண்டைக் கரகரப்பு போகும்.

### சளி

பூண்டை தோல் உரித்து நசுக்கி, தக்காளி, உப்பு, தண்ணீர் சேர்த்து கொதிக்க வைத்து சூப் செய்து குடித்தால் சளி சீக்கிரம் குணமாகும்.

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL

• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca



# நிலாவிலும் உலாவி வருவோம்

## இதுவோர் அறிவியற் தொடர்




- கனி -
ptans@hotmail.ca
416.261.1348

சென்ற தடவையில் நிலாவில் உலாவி வருகையில் எங்களின் நிலா எவ்விதம் தோன்றியது என்ற கருத்துக்கள் இரண்டினைப் பற்றிப் பார்த்தோம். முன்னொரு காலத்தில் இப்படியாக நடந்திருக்கலாம் என்ற அறிவியல் கொள்கைகள் என்பதனால் அதனை முற்றாகவே நிறுவுவதற்கான அறிவியல் நிலையினை இன்னமும் நாங்கள் எட்டவில்லை என்பதனால் உறுதியான முடிவினைப் பெற முடியாது, வெறும் கொள்கைகளாகவே அவற்றினைக் காண்கிறோம். சரி, ஏதோ புரிந்து கொள்ளும் அளவில் சந்திரனின் பிறப்பதைத் தெரிந்து கொண்டுள்ள நாங்கள் இன்னமும் சந்திரன் பற்றிய சில முக்கியமான விபரங்களைத் தெரிந்து கொள்வோம்.

எங்களின் நிலா கதிரவத் தொகுதியில் உள்ள வியாழன், சனி போன்ற மற்றக் கோள்களின் சந்திரன்களுடன் ஒப்பிடுகையில் ஐந்தாவது பருமனானது. கிட்டத்தட்ட 2,157 மைல் விட்டமுடைய நிலா, குள்ளக் கோள் புளூட்டோவையும் விடப் பெரியது. வானவியலாளர்கள் புளூட்டோவை கோள் என்ற தகுதியில் இருந்து இறக்கியதற்கு இதுவும் ஒரு காரணமாகும். புவியின் பருமனின் 27 வீதமோ பருமனாக உள்ள நிலா, மற்றக் கோள்களின் சந்திரன்கள் அக்கோள்களிற் காட்டும் செல்வாக்கின் அளவிலும் பார்க்கப் புவிக்குப் பெரிய அளவிலான தாக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. நிலா புவிக்குக் கொடுக்கும் தாக்கங்களின் அடிப்படையில் தான் புவி, உயிரினங்கள் வாழ்வதற்குத் தகுதியான கோளாக இருக்கின்றது என்கிறனர் வல்லுனர்கள்.


எங்களது புவி கதிரவனைச் சுற்றி வருகையில் தன்னிலும் சுழற்சியைக் காட்டுகிறது என்பது எங்களுக்குத் தெரியும். இவ்வண்ணமாக இரண்டு வகையான சுழற்சியைக் காட்டும் புவியின் தன்னைத்தானே சுற்றும் நிகழ்வில் அதன் சுற்றுகை அச்சு கதிரவனைச் சுற்றும் பாதையில் இருந்தும் எப்போதும் 23.5 பாகை சாய்வாகவே இருக்கும் என்பதும் நாங்கள் படித்து அறிந்திருக்கும் விடயம்தான். இவைதான் புவியின் இரவு-பகல், பருவகாலங்கள் என்பவற்றிக்கு அடிப்படையாக அமைகின்றன. இவற்றினால்தான் புவியில் உயிரினங்கள் வாழக் கூடியதாக இருக்கின்றது. எங்களின் நிலவு தான் புவியில் இருந்துள்ள தனது தூரம் ஈர்ப்பின் விளைவு என்பவற்றின் ஊடாகப் புவியினை இப்படியான 23.5 பாகை சாய்வில் தன்னைத் தானே சுற்றச் செய்கிறது என்பதனை விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர்.

புவியில் உயிரினங்கள் வாழ்வதற்கான சூழலை மாத்திரமல்ல, புவியில் உயிரினங்கள் தோன்றியதற்கு முக்கிய காரணியாக இருந்ததும் நிலாதான். புவியில் 3.75 பில்லியன் ஆண்டு முன்னராக ஒருகல உயிரினங்கள் தோன்றி, அவற்றில் இருந்துதான் கூர்ப்பு வழியில் இன்றுள்ள உயிரினங்கள் எல்லாம் தோன்றின என்று உயிரியல் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஒருகல உயிரினமாகட்டும், மனிதர் உட்பட மற்றப் பெரிய உயிரினங்களாகட்டும் எல்லாவற்றிக்கும் அடிப்படை புரதம் என்கிற உயிரியல்-இரசாயனப் பதார்த்தமாகும். இப்புரதங்கள் அமினோ அமிலங்கள் என்பவற்றின் சேர்க்கையினால் ஆனவை. புவியில் இந்த அமினோ அமிலங்களில் இருந்து புரதங்கள் தோன்றுவற்கு முக்கியமான காரணியாக இருந்தது சந்திரன் என்று கூறுகின்றனர், விஞ்ஞானிகள். இதற்கான அவர்களின் விளக்கத்தைப் பாருங்கள்.




அருகில் உள்ள படம் மில்லரின் பரிசோதனையின் மாதிரியைக் காட்டுகிறது.

நிலாவின் ஈர்ப்பு, புவியினதும் சந்திரினதும் சுழற்சிகளின் காரணமாகப் புவியின் மேற்பரப்பில் அலைந்து கொண்டிருந்த கடலிற் சில இடங்களில் tidal waves என்கிற ஓத அலைகள் என்ற விளைவு ஏற்படுகின்றது. இது எப்படியெனில் இந்த ஓத அலைகள் விளைவாகச் சில இடங்களில் கடல் நீர் வற்றியது போல கடலினுள் செல்லும். 12 மணி நேரத்தின் பின்னர் அவ்விடத்திற்கு கடல் நீர் மீண்டும் வந்து நிரப்பிக் கொள்ளும். இப்படியான விளைவுகள் வெளிப்படும் இடங்களில் மனிதர்கள் பல்வகைகளிலும் அதனைப் பாவிக்கின்றனர். சில இடங்களில் சிலரது மீன் பிடித்தொழில் கூட இவ்விளைவிலேயே அதிகம் தங்கியிருப்பதையும் நீங்கள் அறிவீர்கள். இந்த ஓத அலைகள்




ஆரம்பப் புவியில் இயற்கையாகவே வளிமண்டலத்தில் நீராவி, மெதேன், அமோனியா, ஐதரசன் போன்ற வாயுக்கள் அதிகம் இருந்தன. அக்காலத்திற் புவியிற் தொடர்ச்சியாகவும் அதிகமாகவும் மின்னல், எரிமலைக் கொந்தளிப்புகள் என்பன ஏற்பட்டுக் கொண்டிருந்தன. இந்த மின்னல், எரிமலைக் கொந்தளிப்புகளினால் வெளிப்பட்ட மின்சாரம், சக்தி என்பவை வளிமண்டலத்தில் இருந்த வாயுக்களால் இரசாயன மாற்றங்களை உண்டாக்க, புவியின் மேற்பரப்பில் அமினோ அமிலங்கள் தோன்றத் தொடங்கின. இப்படியாக அமினோ அமிலங்கள் உண்டாகும் என்பதைப் பரிசோதனை மூலம் விஞ்ஞானிகள் நிருபித்துக் காட்டியுள்ளனர். 'மில்லர் பரிசோதனை' என இன்றும் பிரபலமாகப் பேசப்படும் இப்பரிசோதனை மில்லர் என்பவர் 1952ஆம் ஆண்டிற் செய்து காட்டி உயிரியல் உலகில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார்.

இவ்வண்ணமாகப் புவியின் ஆரம்ப காலத்தில் தோன்றிய அமினோ அமிலங்கள் அப்போதிருந்த கடல் நீரில் அங்கிங்காகத் தேங்கத் தொடங்கின. பின்னர் ஒருகட்டத்தில் பெருந்தொகையான அமினோ அமிலங்கள் ஆரம்பப் புவியின் கடலில் மிதந்தன. இந்நிலையில்தான் எங்களின் நிலா தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கியது.

அன்று என்ன செய்தன என்றால் அமினோ அமில மூலக்கூறுகளை ஒன்றுக்கு ஒன்று அருகிற் கொண்டு வந்தன. இப்படியாக ஒன்றுடன் ஒன்றெனப் பெருமளவில் நெருங்கிக் கொண்ட அமினோ அமிலங்கள் கதிரவனின் சூட்டில் இணைந்து நீரை அகற்றிப் புரதமாக மாறின. இப்புரதங்களின் தொடர் இரசாயன, உயிரியல் மாற்றங்களில் இருந்து ஒருகல உயிரினங்கள் கால ஓட்டத்தில் தோன்றின எனச் சில விஞ்ஞானிகள் விளக்கம் தருகின்றனர். பார்த்தீர்களா, நாங்கள் உலாவி வருகின்ற நிலா, எப்படி நாங்கள் தோன்றுவதற்குக் காரணியாக இருந்திருக்கிறது!

பார்த்தீர்களா, சந்திரனின் பின்னால் என்னென்ன அறிவியல் விடயங்கள் எல்லாம் வருகின்றன! இவையெல்லாம் மிகமிக எளிமையாகக் கூறப்பட்ட விடயங்கள். ஆர்வமுள்ளோர் இவற்றினை இன்னமும் துருவித் துருவிப் பார்க்கலாம். உங்களுக்கு உதவக் கூகுள் உள்ளது. இன்று சற்று விவகாரமான அறிவியல் விடயங்களைப் பகிர்ந்து கொண்டதினால் இத்துடன் முடித்துக் கொள்கின்றேன். இப்படியான விடயங்களின் ஆச்சரியமான பார்வைகளின் தொடரும் நிலாவின் உலவுகைகளில் இன்னமும் வரப் போகின்றன. அடுத்த தடவையில் ஒரு சுவையான நிலவின் விடயத்துடன் வருகிறேன்.



# சமத்துவத்துக்காக என் பாடல்கள் ஒலிக்கும்!

## பாடலாசிரியர் & பாடகர் அறிவு - நேர்காணல்

**சந்திப்பு: கண்ணன்**

அறிவுக்கு 'அறிமுகம்' தேவையில்லை.
இயக்குநர் பா. ரஞ்சித்தின் 'தி கேஸ்ட்லஸ் கலெக்டிவ்' இசைக்குழு மூலம் தமிழர் மத்தியில் பிரபலமானவர். ரஜினியின் 'காலா'வில் "உரிமையை மீட்போம்", 'இரண்டாம் உலகப்போரின் கடைசி குண்டு' படத்தில் "தலைமுறை", தனுசின் 'பட்டாஸ்' படத்தில் "மவனே", ஆதியின் 'நட்பே துணை'யில் "சிங்கிள் பசங்க", ராஜுமுருகனின் 'ஜிப்ஸி'யில் "தீவிர வியாதி", தற்போது சூர்யாவின் 'சூரரைப் போற்று'வில் "பருந்தாகுது ஊர்க்குருவி" என்று அறிவு எழுதிய, பாடிய பாடல்கள் அனைத்தும் வெற்றி!

திரைப்படப் பாடல்களில் மட்டுமல்ல, அறிவு வெளியிட்ட தனி ஆல்பங்களும் வெற்றிதான். இவரின் 'தெருக்குரல்' ஆல்பம் ஊரெங்கும் ஒலித்துக் கொண் டிருக்கிறது. சமீபத்தில் குடியுரிமைச் சட்டத் திற்கு எதிராக இவர் பாடிய 'வாடா தமிழா சண்ட செய்வோம்' ராப் பாடல் இந்தியள வில் பிரபலமாகி திமுக தலைவர் மு.க ஸ்டாலின் நேரில் அழைத்துப் பாராட்டியுள்ளார்.

**அறிவிடம் பேசினோம். செறிவாக தெறிக்கிறது பதில்கள்.**

**'சண்ட செய்வோம்' போன்ற விழிப்புணர்வுப் பாடல்களை எழுதவேண்டும் என்ற எண்ணம் எப்படி வந்தது?**

உலகத்தில் நடந்த எல்லா மாற்றங்களிலும் கலை முக்கிய பங்காற்றியுள்ளது. கலைதான் வரலாற்றின் கண்ணாடி. சமகாலத்துப் பிரச்சினைகளைப் பேசாத கலை கலையே அல்ல என்கிறார்கள் மேற்கத்திய ராப் இசை ஜாம்பவான்கள். அதனால், சமகால பிரச்சினைகளை எனது பாடல்களில் பதிவு செய்யவேண்டும் என்று நினைக்கிறேன். இந்திய குடியுரிமைச் சட்டத்தில் செய்யப்பட்டுள்ள திருத்தம் சிறுபான்மை மக்களுக்கு எதிரானது என்பதை விழிப்புணர்வூட்டவே 'சண்ட செய்வோம்' பாடலை எழுதிப் பாடினேன். சமூக ஏற்றத்தாழ்வுக்கு எதிராக, சமத்துவத்திற்காக எனது பாடல்கள் எப்போதும் ஒலிக்கும்.

இந்தியா பல இனக்குழுக்களைக் கொண்டது. பல்வேறு மக்கள் இங்கே வாழ்கின்றனர். அரசியல் மதச்சார்பின்மையை அரசியல் சட்டத்தில் வைத்துக்கொண்டே மத அடையாளத்துடன் சிறுபான்மையினரைப் புறக்கணிப்பது ஜனநாயகத்திற்கு எதிரானது. அதனை முன்வைத்துத்தான், இப்பாடலை உருவாக்கினேன். மதவெறிக்காகப் பல உயிர்கள் போவதும், குடியுரிமை மறுக்கப்படுவதும் ஆத்திரத்தைக் கொடுக்கிறது.



நிலமற்ற வாழ்க்கை, வாடகை வீட்டில் வாழும் வாழ்க்கை எவ்வளவு கொடுமையானது என்பது எனக்கு தெரியும். அப்படியொரு வாழ்க்கையிலிருந்து வந்த எனக்கு குடியுரிமை மறுக்கப்படுவதை கேள்விகேட்கத்தான் தோன்றும்.

**திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் நேரில் அழைத்து பாராட்டியிருக்கிறாரே? என்ன சொன்னார்?**

ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு பூங்காவில் நின்று பாடுவேன். அப்படித்தான் செம்மொழி பூங்காவில் பாடிய 'சண்ட செய்வோம்' பாடல் வைரலாகியது. வாட்ஸப்பில் வந்த காணொளியை திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் பார்த்துவிட்டு அழைத்தார். பாடலோடு நான் பேசிய உரையும் அவருக்கு ரொம்ப பிடித்தது என்று கூறியதோடு 'தெளிவாகப் பேசியுள்ளீர்கள்' என்று பாராட்டினார். அவர் அந்தப் பாடலை பகிர்ந்ததால் அது இன்னும் நிறையப் பேரை சென்றடைந்துள்ளது.

**சமூக விழிப்புணர்வுக்கான வழக்கமான பாடல்களுக்கும் ராப் பாடல்களுக்கும் உள்ள வித்தியாசம்?**

ராப் பாடல்களே சமூக விழிப்புணர்வு பாடல்கள்தான். அமெரிக்கா, ஆபிரிக்க மக்கள் தங்கள் வறுமை, பசி, பட்டினி போன்றவை தொடர்பான எதிர்ப்பை கலை வடிவத்தின் மூலமே காட்டுகின்றனர். ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை ராப் உயர்குடி மக்களுக்கானது போல் பார்க்கப்படுகிறது. உண்மையில் அது உழைக்கும் மக்களின் கலை. இந்தியாவுக்கான ஹிப்ஹாப் என்பது மக்கள் இசையான நாட்டுப்புற இசைதான்.

**பொறியியல் படித்துவிட்டு கலைத்துறைக்கு வந்தது எப்படி?**

எனது சொந்த ஊர் அரக்கோணம். அப்பா கலைநேசன் கல்லூரி பேராசிரியர். அம்மா தேன்மொழி தலைமை ஆசிரியை. ஒரே தங்கை கனிமொழி எம்.பி.பி.எஸ். முடித்துவிட்டு அரசு மருத்துவமனையில் பணிபுரிகிறார்.

பணியில் சேர்வதற்குமுன், எனது பெற்றோர் முதலில் அறிவொளி இயக்கத்தில் பணிபுரிந்தனர். அப்போது கிராமம், கிராமமாகச் சென்று பாடல்கள் பாடி படிப்பைச் சொல்லிக் கொடுத்தனர். இன்னொரு பக்கம் சிறுவயதில் நாட்டுப்புறப் பாடல்கள் கேட்டுத்தான் வளர்ந்தேன். அப்படித்தான் என்னுள்ளும் கலை ஆர்வம் வந்தது.

சிறு வயதிலிருந்தே மக்களின் பிரச்சினைகளை கவிதையாக எழுதுவேன். கல்லூரி படிக்கும்போது விடுதியில் நண்பர்கள் என்னைப் பாடச் சொல்வர். அப்படிப் பாட ஆரம்பித்தது சினிமா வரைக் கொண்டு வந்து விட்டது. பாட்டு வகுப்புக்கெல்லாம் முறையாகச் சென்றதில்லை. படிக்கும்போது என்னிடம் 2000 ரூபாய் இருந்தால் பாட்டுப் பாடி பதிவு செய்யப் போய் விடுவேன்.

"உன் குரலுக்கு ராப் நல்லா இருக்கும்" என்று நண்பர்கள் உற்சாகப்படுத்தினர். ஆனால், என் பெற்றோர் பயந்தனர். எங்கள் குடும்பத்தில் நாங்கள்தான் படித்த தலைமுறை. எனது தாத்தா ஒரு விவசாயக் கூலி, அப்பா கல்லூரி பேராசிரியர் என்பதே பெரிய மாற்றம்தான். இதுவே, பெரிய போராட்டத்திற்கிடையேதான் ஏற்பட்டது. அதனால், அடுத்த தலைமுறையான நானும் படித்து நல்ல முறையில் வரவேண்டும் என விரும்பினார்கள். "இதெல்லாம் வேண்டாம்பா" என்று வீட்டில் சொல்வார்கள். 'கல்வி ஒன்றே நமக்கான ஆயுதம்' என்பதில் உறுதியானவர் அப்பா. எனவே, அவருக்காகவே நல்லமுறையில் பொறியியல், எம்.பி.ஏ. படித்து முடித்தேன். இப்போது எனக்கு கிடைக்கும் அங்கீகாரத்தைப் பார்த்து, "நீ செய்வது சரிதான்" என்று சொல்லிப் பெருமைப்படுகின்றனர்.

ஆரம்பத்தில் 'கேஸ்ட்லஸ் கலெக்டிவ்' குழுவில் பாடல்கள் எழுதிக் கொண்டிருந்தேன். பா. ரஞ்சித் என்னை அழைத்து 'காலா' படத்தில் 'உரிமையை மீட்போம்' பாடலை எழுதும் வாய்ப்பை கொடுத்தார். எனது முதல் பாடலே மக்கள் பிரச்சினைக்கானது என்பதில் பெரும் மகிழ்ச்சி. சுதந்திர இசையை வளர்க்கவேண்டும் என்று நினைக்கிறேன்.


**ஆனால், இந்தியாவில் சுதந்திர இசைக் கலைஞர்களுக்கு அதிக வரவேற்பு இல்லையே?**


கலை மக்களுக்கானது. அது பணமாக திரும்பி வராது. உற்சாகமாக திரும்பி வரும்.

**உங்கள் பாடல் வரிகளில் சூர்யா பாடியுள்ள 'சூரரைப் போற்று' பாடல் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளதே?**

முதல் முறையாக என் வரிகளை ஒரு கதாநாயகன் பாடுகிறார் என்றால், அது சூர்யாதான். அங்கீகாரமும் வரவேற்பும் அப்பாடலுக்கு கிடைத்திருப்பதில் சந்தோ

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)



## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

# மனச் சோர்வு

ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
(Diploma in Yoga Therapy, India)
416.617.5721/416.289.2033
(After 7 pm)



மனச்சோர்வு என்பது ஒரு சாதாரணமான மனம் சார்ந்த பிரச்சினை மட்டுமல்ல. அது ஒருவருடைய சிந்தனையை, உணர்வுகளை, பழக்க வழக்கங்களை, உறவுகளை, வேலை செய்யும் திறனைப் பாதிக்கின்றது. சில தீவிர சூழ்நிலைகளில் இது மரணத்துக்குக் கூட வழிவகுக்கிறது.

நாம் எல்லோருமே அவ்வப்போது சோகமாக உணர்வோம். சில மோசமான நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளை எண்ணி வருந்து வோம். அது வழமைதான். ஆனால் அத்த கைய உணர்வு நெடு நேரம் அதாவது இரண்டு வாரங்களுக்கு மேல் நீடித்தால் அல்லது அடிக்கடி திரும்பத் திரும்ப வந்து தினசரி வாழ்க்கையை ஆரோக்கியத்தைப் பாதித்தால், அது மனச்சோர்வுப் பிரச்சனையாக இருக்கக் கூடும்.

மனச்சோர்வு என்பது பலவீனத்தின் அடையாளம் அல்ல. சர்க்கரை நோய், இதய நோய் போல இதுவும் ஒரு நோய்தான். இது யாரை வேண்டுமானாலும் எந்த வயதிலும் பாதிக்கலாம்.

மனச் சோர்வின் எல்லா அறிகுறிகளும் ஒருவரிடம் காணப்படாது. ஒவ்வொருவரிடமும் ஓரிரு அறிகுறிகள் மட்டுமே இருக்கும்.

### மனச்சோர்வின் அறிகுறிகளில் சில

பெரும்பாலான நேரங்கள் சோர்வாகவும், சோகமாகவும் உணர்வர்.

தினசரி வேலைகளைச் செய்வதில் ஆர்வமில்லாமல் இருப்பர். அல்லது அதைச் சிரமமாக உணர்வர். எளிதில் களைத்துப் போவர். நாள் முழுக்க ஆற்றலில்லாதது போல் உணர்வர். முன்பு அவர்கள் ஆர்வத்தோடு செய்த வேலைகளை இப்போது ரசித்து அனுபவித்து செய்ய இயலாது. கவனம் செலுத்துதல், சிந்தித்தல், தீர்மானமெடுத்தல் போன்றவற்றில் சிரமப்படுவர். உதாரணமாக பொழுதுபோக்குகள், கல்வியில் கவனம் செலுத்துதல் போன்றவை.

- தன்னம்பிக்கை குறையும், தன்மீதே மதிப்புக் குறையும்.
- தன்னைப்பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும், வருங்காலத்தைப் பற்றியும் எதிர்மறையாகச் சிந்திப்பர்.
- பசி இருக்காது அல்லது அதிகமாகச் சாப்பிடுவர்.
- குற்ற உணர்ச்சியோடு இருப்பர். முந்தைய தோல்விகளுக்கு தன்னையே காரணமாகச் சொல்லிக்கொள்வர். தான் எதற்கும் லாயக்கில்லை என்று உணர்வர்.
- அடிக்கடி வேலைக்கு வராமலிருப்பர் அல்லது வேலைச் செய்யச் சிரமப்படுவர்.
- எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையில்லாமல் இருப்பர்.
- தூங்கச் சிரமப்படுவர் அல்லது தூக்கமே வராது.
- பாலுறவு, அதுசார்ந்த செயல்பாடுகளில் ஆர்வமில்லாமல் இருப்பர்.




- தலைவலி, கழுத்துவலி அல்லது தசைப்பிடிப்பு போன்ற உடல் சார்ந்த வலிகளை உணர்வர்.
- தன்னைத்தானே காயப்படுத்திக்கொள்வது, தற்கொலை அல்லது மரணத்தைப் பற்றி சிந்திப்பர்.

மனச்சோர்வு வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்தையும் பாதிக்கக்கூடும். மேற்சொன்ன அறிகுறிகள் மனச்சோர்வின் சாத்தியங்களைக் குறிப்பிடக்கூடிய பொதுவான வகைப்பாடுகள் ஆகும். ஒருவேளை இந்த அறிகுறிகளில் எவையேனும் ஒருவரிடம் காணப்பட்டால் மனநல நிபுணர் ஒருவரை சந்தித்து ஆலோசனை பெறுவது அவசியம்.

மனச்சோர்வு பற்றி மக்கள் பேசத் தயங்குவதால் அது பெரும்பாலான நேரங்களில் வெளிப்படையாகத் தெரிவதில்லை. நம்மில் பெரும்பாலானோர் பிரச்சினையைப் பகிர்ந்து கொள்வதில்லை. சும்மா சிரித்துச் சமாளித்துவிடுகிறோம். காரணம் அதைச் சொன்னால் மற்றவர்கள் நம்மைக் கேலி செய்வார்களோ அல்லது பலவீனமாகக் கருதுவார்களோ என்கிற பயம்தான். மனச்

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)



# வாத நோயும் அதற்குரிய பரிகாரமும்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?



வைத்திய கலாநிதி
கே.ரீ. கோபால்
647-456-9796

'பாரப்பா வாதமது' எண்பத்தினாலு என அகத்தியர் கூறியுள்ளார். இவ்வியாதி ஒருவருக்குத் திடீரென ஏற்படலாம். இந்த வாதங்களில் ஒருவருக்கு வலது இடது கால் கைகள் உணர்ச்சியற்று நீட்டவும் மடக்கவும் முடியாமல் இருப்பின் இதனைப் பக்கவாதம் (Paralysis) எனக் கூறப்படும். சர்வ அங்கம் அதாவது உச்சி முதல் பாதம்வரை உணர்ச்சியற்றதாகி விடும். இதனைப் பூரணமாகக் குணப்படுத்துவது கடினமாகும். அவயவங்களில் மாற்ற நிலைகள் தென்படும். நாம் பக்கவாதம் அல்லது பாரிசவாதம் ஏற்படாது பாது காக்க வேண்டும். மேலும் பரம்பரையாகத் தொடரும் நோய்களான குஷ்டம், நீரிழிவு, ஆஸ்மா (ஈழை) போன்று வாதமும் பரம் பரையாக வருவதற்கு இடம் உண்டு. தாயாருக்கு வாதநோய் வந்திருந்தால் மகளுக்கும் தந்தையாருக்கு ஏற்பட்டிருந் தால் மகனுக்கும் வருவதற்கு இடமுண்டு என ஆய்வில் அறிய முடிகின்றது.

எனவே இந்த வாதநோய் ஏற்பட என்ன காரணம் என்பதை ஓரளவு அறிந்து கொள்வது நன்றாகும். அதாவது தேவை யான உணவின்றி சோர்வுற்ற நிலையில் உழைத்தல், உரிய நேரத்தில் உறக்கம் வராதிருத்தல், ஓய்வு இன்றி வாழ்தல், குளிர்பானங்களைக் காலம் கருதாது அருந்தி வருதல், இயற்கையோடு ஒன்றா காமல் இருத்தல், எப்போதும் வியர்வை ஏற்படாமல் குளிர் நிறைந்த அறையில் நீண்ட நேரம் இருத்தல், துக்கநிலை, காரம், புளிப்புச் சுவைப்பொருட்களை அதிகம் உண்பது போன்றவற்றினாலும் ஏற்படலாம் என அறிய முடிகிறது. மேலும் மது வகை, கஞ்சா, அபின் போன்ற வற்றை அளவு கடந்து பாவிப்பதினாலும் வாத வியாதி ஏற்பட இடமுண்டு எனவும் அறிய முடிகிறது.

பொதுவாகத் தேகத்தடிப்புத் தன்மை தென்படுவோர் கொழுப்புப் பொருட்களைப் பாவிப்பதைத் தவிர்த்தல் நன்று. மலக்கட்டு ஏற்படாதிருக்க நடந்து கொள்ள வேண் டும். இதற்குத் தகுந்த அன்ன ஆகாரங் களை உட்கொண்டு வருதல் வேண்டும். சுகபேதி மருந்து பாவிப்பது நன்று. பானம் சேர்ந்த பேதி மருந்து குளிர் செறிந்த நாடுகளில் பாவிப்பதைத் தவிர்த்தல் வேண் டும். வாத நோயினால் பீடிக்கப்பட்டோர் குளிர்ந்த உணவுப் பதார்த்தங்களைப் பாவிப்பது நன்று அல்ல. குளிர்ந்த பானங் களையும் தவிர்த்துக் கொள்ளவும். எதை யும் சாப்பிடும்போதும் இளஞ்சூட்டுடன் எடுத்துச் கொள்வது மிகநன்று. குளிர் நிலை காணப்படும்போது வெந்நீர் குளிப்பு நன்றாகும். ஆனால் குளிர்நிலை அதிகம் தென்பட்டால் நீராடுவதைத் தவிர்ப்பது நன்மையாகும்.

உணவைக் கையாளும்போது முக்கியம் கவனிக்கப்பட வேண்டியது யாதெனில் பூசனி, கடலைப் பருப்பு, வாழைத்தண்டு




குடிநீர், கறி, இளநீர், எண்ணெய் பண் டங்கள். பழைய உணவுகள், பழஞ்சோறு, பழைய குழம்பு வகை, பழங்கள், திருக்கை மீன், ஆட்டு இறைச்சி தவிர்த் தல் வேண்டும். கஞ்சா, அபின் தவிர்க்கப் படல் வேண்டும். மயக்கம் தரும் பதார்த் தங்களைப் பாவிக்கக் கூடாது. புகைத்தல் தவிர்க்கப்பட வேண்டும். இரவு எண்ணெய் முழுக்கு நல்லதல்ல. அக்காலத்தில் உட லுறவு தவிர்த்தல் சாலச் சிறந்தது எனவும் அறிய முடிகிறது. வெந்நீர் குளிப்பு, முழுக்கு பகல் வேளையில் கையாளலாம்.

வாதநோய் ஏற்பட்டிருப்போர் பின்வரும் தைலத்தைப் பாகம் செய்து பாவித்து வரலாம். முருங்கைப்பட்டை, ஆடாதோடை பட்டை, கருவேலம் பட்டை, பூவரசம் பட்டை, பறங்கிப்பட்டை, புளியம்பட்டை, ஆமணக்கம் இலை, சுக்கு, மரமஞ்சள் ஆகியவற்றை 200 கிராம் அளவுக்கு ஒவ்வொன்றையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**செய்கை முறை** - முருக்கம் பட்டை முதல் புளியப்பம் பட்டை வரை குறிப்பிட்ட அளவின்படி எடுத்து பஞ்சுபோல் நன்கு தட்டி நிழலில் உலர்த்தி மீண்டும் மா போல் நன்கு அரைத்து அடைபோல் தட்டி நிழலில் உலர்த்தல் வேண்டும். பின்பு எடுத்து நன்கு மா போல் இடித்துக் கொள்ள வேண்டும். சுக்கு, மரமஞ்சள் குறிப்பிட்ட அளவின்படி எடுத்து இடித்து மண்சட்டியில் போட்டு அவை யாவும் மறையும்வரை வெந்நீர் ஊற்றி அடுப்பில் வைத்து நீர் சுண்டும்வரை விட்டு பின் இறக்கி நிழலில் உலர்த்தி மற்றும் சரக்கின் பாகங்களை கலந்து காற்றுப் புகா வண்ணம் வைத்தல் வேண்டும்.

**பயன்படுத்தும் முறையைப் பார்ப்போம்** - பக்க வியாதியினால் பீடிக்கப்பட்டோர் தேவையான அளவு மருந்துப் பொடியை எடுத்து வெந்நீர் அல்லது புழுங்கல் அரிசி கொதி நீரையிட்டு மைபோல் குழைத்து தலையில் இருந்து உள்ளங்கால் வரை தடவி 30 நிமிடத்தின் பின் வெந்நீரில் முழுகிக் கொள்ள வேண்டும். 2 நாட்களுக்கு ஒரு முறை நீராடி வரலாம். இப்படி 40 முறை செய்து வருதல் வேண்டும். நோய் தணிவடைந்து விடும். உணவு முறையை முன்கூறியபடி கையாண்டு வரலாம்.

மேலும் வாத நோய்களுக்கு ஏற்ற இன் னும் பல சூரணங்கள், தைல வர்க்கம், ஒத்தணங்கள். அரிஷ்டங்கள், ஆச னங்கள், குவாதங்கள் எனப் பல உண்டு. சூரணத்தை எடுத்துக் கொண்டால் தசமூல சூரணம் (10 சரக்கு வகை சேர்ந்தது) முக்கியமாகும். இதில் தசமூல அரிஷ்டம் ஆசவமும் உண்டு. தைல வர்க்கம் எடுத் துக் கொண்டால் தாளங்காய் எண்ணெய், நாராயண தைலம், மகா நாராயண தைலம், சித்தார்ந்த தைலம், பின்டத் தைலம் எனப் பலவுண்டு. எதற்கும் நோயாளி கையாளுவதற்கு தகுந்த வைத் தியர் அவரை நன்கு பரீட்சித்து கால, அர்த்த, கரும, மித்தியா யோகங்களை கடைப்பிடித்து வழங்குவதே சாலச் சிறந்ததாகும்.

**பக்கவிளைவுகளற்ற தகுந்த மூலிகை மருந்துகள் சிறியோர் முதல் முதியோர் வரை இதுவரை தீராத வியாதிகளினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப் போருக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிசைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும், சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள் பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டி ருக்கும் காயங்களுக்கும், விபத்தினால் ஏற்பட்ட அடி காயங்களுக்கும், நோவிற்கும் ஏற்ற அனுபவரீதியாகக் கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோ சனை இலவசமாக வழுங்கப்படும். என்னைத் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.**






# 9 வயது அறிவாளி லோறன்ற் சைமன்ஸ்



விதுசிகா அருள்தாசன்
அகவை -14

பெல்ஜியத்தை சேர்ந்த சிறுவன் லோறன்ற் சைமன்ஸ் (Laurent Simons) கடந்த 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தனது 8 வயதிலேயே உயர்கல்வியை முடித்தார். லோறன்னின் இந்த அபார திறமையை அவரது தாத்தா-பாட்டிதான் கண்டறிந்த தாக அவரது தாய் லிடியா (Lydia) கூறியுள்ளார்.




2019ஆம் ஆண்டு ஆரம்பத்தில் நெதர்லாந்து நாட்டின் ஐந்தோவன் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் (Eindhoven University of Technology - Netherlands) மின் பொறியியல் பிரிவில் பட்டப் படிப்பிற்காக சேர்ந்திருந்தார். லோறன்னின் இந்த அபார திறமையை பார்த்த பல்கலைக்கழக இயக்குனர், ஐந்தோவன் பல்கலைக்கழகத்தில் இது வரை படித்த மாணவர்களிலேயே மிகவும் புத்திசாலியான சிறுவன் லோறன்ற்தான் எனக் கூறியுள்ளார்.

மின் பொறியியல் பிரிவில் கடந்த 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பட்டம் பெற இருந்த லோறன்ற், உலகிலேயே இளம் (9 வயது) பட்டதாரி என்ற சிறப்பைப் பெற விருந்தார். மின் பொறியியல் பிரிவில் பட்டப் படிப்பை முடித்த பிறகு இதே பாடப்பிரிவில் ஆய்வு செய்ய (Ph.D) திட்ட மிட்டிருப்பதாகவும், அதேநேரம் மருத்துவ பட்டப்படிப்பு ஒன்றையும் அவர் தொடருவார் என்றும் அவரது தந்தை அலெக்சாண்டர் சைமன்ஸ் (Alexander Simons) தெரிவித்திருந்தார்.



இவரது படிப்பிற்காக மேலதிகமாக வகுப்புக்களை நடத்துவதற்கும் அதற்குத் தேவையான பேராசிரியர்களையும் நியமிப்பதற்கும் பல்கலைக்கழக நிர்வாகம் தயாராக இருப்பதாகவும் ஆனால் லோறன்ற் தெரிவு செய்த பாடத்த திட்டத்தின்படி அவர் 2020 ஜூன் மாதம் தான் அவரது பட்டப் படிப்பை முடிக்க முடியுமென பல்கலைக்கழக இயக்குனர் லோறன்னின் பெற்றோருக்கு அறிவித்தார்.

2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் லோறன்னின் பத்தாவது பிறந்தநாள் என்பதால் அதற்கு முன்னர் அவர் பட்டம் பெற வேண்டுமென லோறன்னின் பெற்றோர் விரும்பியிருந்தனர். 2019ஆம் ஆண்டில் பட்டம் பெற்றால்தான் அமெரிக்காவின் அலபாமா பல்கலைக்கழகத்தில் (University of South Alabama) இருந்து 10 வயதில் பட்டம் பெற்ற மைக்கேல் கியார்னி (Michael Kearney) என்ற சிறுவனின் உலகிலேயே இளம் பட்டதாரி என்ற சாதனையை லோறன்னினால் முறியடிக்க முடியும். இப்படியான சாதனையொன்றை தமது மகனால் செய்ய முடியாமல் இருப்பதையிட்டுக் கவலையடைந்த லோறன்னின் பெற்றோர் அவரது பட்டப் படிப்பைத் தொடராமல் நிறுத்தி விட்டனர்.



**மைக்கேல் கியார்னியின் சாதனைகள்.**

- High school diploma from San Marin High School- 1990 **(age 6)**
- Associate degree from Santa Rosa Junior College **(age 8)**
- Anthropology degree from Spring Hill College, 1994 **(age 10)**
- Guinness World Record for world's youngest college graduate **(age 10)**
- Master's degree in chemistry, Middle Tennessee State University **(age 14)**
- Master's degree in computer science, Vanderbilt University **(age 18)**
- Ph.D in Chemistry, Middle Tennessee University **(age 22)**

**இளையோர் ஆக்கம்** இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.




ரொறன்ரோ நகரசபை உறுப்பினர்
போல் ஐன்ஸ்லி
வட்டாரம் 24, ஸ்காபரோ – கில்வூட்

TORONTO

உதவி தயாராக உள்ளது

தொகுதியில் வாழ்வோருக்கான ரொறன்ரோ நகரசபை சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வுகாண்பது எமது சேவை

- வசதிக்கேற்ற விலையில் வீடுகள்
- வளர்ப்பு பிராணிகள் மற்றும் விலங்குகளுக்கான சேவை
- அடுக்கு மாடிகளுக்கான தரநிலை
- கட்டிட அனுமதிப்பத்திரம்
- குழந்தை பராமரிப்புக்கான மானியம்
- அவசரகால வதிவிட வசதிகள்
- தீயணைப்பு சேவை
- குப்பை அகற்றல்
- நூலகம்
- நகரசபைத் தேர்தல்
- நகராட்சி உரிமம் மற்றும் தரநிலைகள்
- "ஒன்ராரியோ வேலைகள்" நிறுவனத்தின் சேவைகள்
- வாகனத்தரிப்பிடம்
- சோலைகள்
- நகர்காவலர் சேவை
- பொதுச் சுகாதார சேவை
- தெருக்கள்
- ஆதன வரி
- பொதுப் போக்குவரத்து
- மீள்சுழற்சி மற்றும் உணவுக்கழிவு பசுமைத் தொட்டி
- மரங்கள்
- குடிநீர்

CONSTITUENCY OFFICE
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

TORONTO CITY HALL OFFICE
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
Ward 24 Scarborough-Guildwood
@cllrainslie
www.paulainslie.com
@Ainslie_Ward24
Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

# சித்தர்கள் வாழ்ந்த சிறப்புப் பெற்ற சித்தன்கேணி ஊர்

கணபதிப்பிள்ளை மாரிமுத்து
கனடா



பகுதி - 03

## விவசாயமும் பண்டை மாற்றும்

பண்டைக் காலத்தில் பண்டமாற்று முறைமையே இருந்தது. வேளாண்மை செய்வோரே செல்வாக்குடையவராக இருந்தனர். வேளாண்மை பொருட்களைக் கொடுத்து மாறுவதன் மூலமும், தொழில் செய்வதன் மூலமும் பரிமாற்றம் நடந்தது. அதன் பிற்பட்ட காலத்தில் கால்சதம், அரைச்சதம், ஒருசதம் முக்கியம் பெற்றன. அரைச் சதத்தைத் துட்டு என்றும் ஆறு சதத்தை ஒருபணம் என்றும், பத்து ரூபாவை ஒரு பவுண் என்றும் அழைப்பர். பத்து ரூபா என்பது இப்போ முறையிலுள்ள ஒரு தங்கப் பவுணின் பெறுமதியைக் குறிக்கும். பிற்பட்ட காலங்களில் தான் நாணயத் தாள்கள் வெளிவந்தன மட்டுமன்று பெருந் தொகைக்கான தாள்கள் உருவாகின. அப்போ வங்கிகள் இன்மையால் காசோலைகள் இல்லை. அக்காலத்தில் பவுண் சேமிப்பே இடம் பெற்றது. பணம் தேவைப்படின் பவுணை அடகு வைத்தே பணத்தைப் பெற்றனர். பணம் வைத்திருக்கும் தனிப்பட்டோர் அடைவு பிடித்தல், சீட்டுப் பிடித்தல் செய்தனர். அக்காலப்பகுதியில் பவுணை நிலத்தின் அடியில் புதைத்து வைத்தே பாதுகாத்தனர். காலப்போக்கில் பணப்புழக்கம் கூடப் பெற்று வங்கி முறை ஏற்பட்டு பணப் பரிமாற்றம் விரிவடைந்தது. வெளி நாடுகள் தொடர்பு ஏற்பட்டமையால் பணப்புழக்கம் விரிவடைந்தது. அன்றைய காலத்தில் நிலத்தை அடகு வைத்துப் பணம் பெற்றனர். இன்றுபோல அன்று நிலங்களின் விலையில் ஏற்றம் இருக்கவில்லை. இன்று ஆரம்பத்தில் இருந்த சதத்திற்கு மட்டுமல்ல ஒரு ரூபாவுக்கே பெறுமதியற்ற நிலையில் மக்கள் வாழ்க்கையை முன்னோக்கிச் செலுத்தி வருகின்றனர். இவை காலத்தின் பொருளியல் மாற்றமாகும்.

### கல்வியில் வட்டு இந்துக் கல்லூரி

ஆரம்பத்தில் இங்கு திண்ணைப் பள்ளிக் கூடங்களே இருந்தன. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் கல்வியில் ஓர் மறுமலர்ச்சி ஏற்பட்டது. இதற்கு ஆறுமுக நாவலரின் வழியினைப் பின்பற்றி வந்த சித்தன்கேணியைச் சேர்ந்த அம்பலவாணர் நாவலரே தொண்டாற்றினார். அக்காலத்தில் உத்தியோகம் பெறும் பொருட்டு ஆங்கிலக் கல்வியை பெறுவதற்கு கிறீஸ்தவ மிசனறி தாரரினால் நடத்தப்படும் பாடசாலை நோக்கிச் செல்கையில் கிறீஸ்தவ மதத்திற்கு மதமாற்றம் செய்யப்பட்டனர். இப்பேற்பட்ட நிலையில் சைவத்தையும், தமிழையும் வளர்த்தெடுக்கும் நோக்குடன் 1984ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சைவ ஆங்கில வித்தியாசாலையே இன்று வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியாகப் பரிணாமம் பெற்று விளங்குகின்றது. ஆரம்பத்தில் வீடு ஒன்றில் ஸ்தாபித்த வித்தியாசாலை பின் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது. இங்கு கற்பதற்காக யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளிலும் இருந்து மாணவர்கள் இங்கு வந்ததாக அறிய முடிகின்றது. ஆரம்பத்தில் ஆசிரியர் சின்னத்துரை அவர்கள் தியாக உணர்வுடன் கல்வி கற்பித்தார். அக்காலத்



தில் கல்விக்குப் பெருமையளித்த இன்னுமொரு ஆசிரியர் நவாலயூர் சோமசுந்தரப் புலவர் ஆவார். இவருக்கு இக்கல்லூரியில் நாற்பது ஆண்டுகள் தமிழ் ஆசிரியராக இருந்து நீண்ட நாள் தொண்டாற்றிய பெருமை உண்டு. 1898ஆம் ஆண்டு இக் கல்லூரியினை நிர்வகிப்பதற்காக நொத்தாரிசு அருணாசலம் சிதம்பரப்பிள்ளை அவர்களை முகாமையாளராக அம்பலவாண நாவலர் நியமித்ததாக அறிய முடிகிறது. 1912 தொடக்கம் 1918 வரை இப்பாடசாலை அப்பகுதியின் சைவசமய போதனா பீடமாக அமைந்திருந்தது. இக்காலப்பகுதியில் தான் இரு மாடிக் கட்டடம் அமைக்க அரசாங்கம் நன்கொடை அளிப்பதாக வாக்குறுதியளித்தது. அவ்வாக் குறுதியின்படி 1917இல் அக்காலத்தின் கல்வி இலாகாவின் தலைவராக இருந்த டோன்காம் (Denhom) என்பவர் அத்திவாரக் கல்லை நாட்டினார். இப்பெருந் தொகைப் பணத்தை சைவப் பாடசாலைக்கு நன்கொடையாக வழங்குவது தடுக்கப் பட்டமையால் நீண்ட காலமாக அக்கட்டிடம் அத்திவாரத்துடன் இருந்தது. இக்குறைக் கட்டிடத்தை 1951இல் இரண்டு மாடிக் கட்டிடமாக்கி உயர்ந்த நிலைக்கு எழுப்பிய பெருமை எமது ஊரைச் சேர்ந்த முதலியார் ச. குமாரசுவாமி அவர்களுக்கும் அவர்தம் பாரியார் வள்ளியம்மைக்கும் உரியதாகும். இக்கட்டிட மேல்மாடி ‘வள்ளியம்மை மண்டபம்’ என இன்றும் பெருமையுடன் விளங்குகின்றது. இக்கட்டிடம் சுத்தானந்த பாரதியார் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. 1927ஆம் ஆண்டு தேச பிதா என அழைக்கப்படும் மகாத்மா காந்தி அவர்கள் எம் கல்லூரிக்கு வருகை தந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. 1929ஆம் ஆண்டு கல்லூரியின் முகாமை இந்துக் கல்லூரியின் முகாமை அதிகார சபையிடம் ஒப்படைக்கப் பட்டதினால் கல்வி வளர்ச்சியிலும் மாற்றங்கள் ஏற்பட்டது. தொடர்ந்து திரு. தி. இராஜசுந்தரம் ஜே.பி அவர்கள் தனது மனைவி செல்வலட்சுமி பெயரால் ஒரு விஞ்ஞான கூடத்தைக் கட்டிக் கொடுத்தார். இவற்றைவிட அரச நன்கொடை பெற்றுப் பல புதிய வகுப்பறைகளும், கல்லூரி விரிவாக்கத்திற்காகக் கல்லூரிக்குப் பின்புறமாக இருந்த பெரும் நிலம் டாக்டர் வரதராசா அவர்களினால் அன்பளிக்கப்பட்டது. இதன் காரணமே இன்று ஒரு சிறந்த விளையாட்டு மைதானத்தையும் பல புதிய கட்டிடங்களையும் கொண்டு கல்லூரி விளங்குகின்றது. அவரின் உந்து சக்தியினால் அக்கால மாணவர்கள் நிலப்புனரமைக்கு பெரும் தொண்டாற்றியதை மறக்க இயலாது. அது மாத்திரமின்றி விளையாட்டுப் போட்டிகள், மற்றும் விளையாட்டுகளின் வளர்ச்சியுடன் ஏச். ஏஸ். சி பல்கலைக்கழகப் புகுமுக பரீட்சை வகுப்புவரை உயர்த்தினர். அதனால் இப்பாடசாலை இந்துக் கல்லூரி என்ற தரத்திற்கு உயர்வு பெற்றது. இந்நிலையில் 1994ஆம் ஆண்டு கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. 2019ஆம் 125ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் உயர்ந்த நிலையை எட்டியது. கடந்த 25 வருட காலத்தில் கல்லூரி ‘நவோதய கல்லூரி’ என்ற பெயர் பெற்றது. பல புதிய கட்டிடங்கள் உருவாகின. மகிந்தோய திட்டத்தில் புதிய கட்டிடம் உருவாகியும் உள்ளது. கடந்த 25 வருட காலப் பகுதியில் இருந்த அரசாங்கங்கள் பல மாடிக் கட்டிட உதவிகளைச் செய்துள்ளது மறக்க இயலாது. இன்று சிறந்த ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் என்ற பலரது ஒத்துழைப்புடன் கல்லூரி மிளிர்கின்றது. “பிச்சை எடுத்தும் கற்பன கல்” என்ற கல்லூரி மகுட வாக்கியம் எக்காலத்திற்கும் பொருத்தமானதேயாகும்.

### சித்தன்கேணி கணேச வித்தியாலயம்

‘கல்வி அழகே அழகு’ என மகுட வாசகம் கொண்டு விளங்கும் இவ் வித்தியாலயம் 2018இல் நூற்றாண்டு விழா கொண்டாடிய நிறைவுடன் விளங்குகின்றது. இவ்வூரைச்



சுற்றியுள்ள பகுதிச் சிறார்களுக்கு ஒரு பாடசாலை இல்லாத குறையினை நிறைவு செய்யும் பொருட்டு இவ்வூர் பெரியார் திரு. மாரிமுத்து கனகசபாபதி அவர்களால் 1918ஆம் ஆண்டு இப்பாடசாலை சிறிதாக உருவாகியது. இது 1916ஆம் ஆண்டு திண்ணைப் பள்ளிக்கூடமாக ஆரம்பிக்கப் பட்டது. எம் மக்கள் மத மாற்றம் செய்யப்படாது சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் நோக்கமாகவே இக்கல்விக் கூடத்தை உருவாக்கினார். ஆரம்பத்தில் வட்டுக்கிழக்கைச் சேர்ந்த பண்டிதர் வ. கந்தையா கடமையாற்றினார். ஆரம்பத்தில் 5ஆம் வகுப்புவரை ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை 1954இல் சிரேஷ்ட பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது. பின் அரசாங்க தலையீடு காரணமாக மீண்டும் 5ஆம் தர வகுப்புவரை தரமிறக்கப்பட்டது. இங்கு ஆரம்பகல்வி கற்ற மாணவர்கள், உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் சிறந்த நிலையில் வாழ்ந்து கொண்டு வருகின்றனர். சங்கானை, வடலியடைப்பு ஆகிய பகுதிகளில் இருந்து வந்து கல்வி கற்றோர் பலர். அடுத்த ஆண்டு விழாவிற்கு வித்தியாலயம் இரு மாடிக் கட்டிடமாகத் திகழவிருக்கின்றது. கட்டிடத்தால் உயர்வது போல் கல்வியிலும் பிள்ளைகள் உயர்ச்சி பெற்று பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் உயர்ந்து ஊருக்கப் பெருமை சேர்க்க எல்லாம் வல்ல கணேசப் பெருமான் அருள்புரிவாராக.

### சைவத் தமிழ் வித்தியாசாலை

இவ் வித்தியாலயம் வட்டுக்கிழக்கு தாவளையில் ஏறக்குறைய 125 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்த கல்விக் கூடமாகும். சித்தன்கேணியில் கணேச வித்தியாசாலை ஆரம்பிக்கு முன்பே எம் முன்னோர் இப்பாடசாலையில் கல்வி கற்றனர். இங்கு சங்கரத்தை, வட்டுக்கோட்டை, சங்கானைப் பகுதிகளிலும் இருந்து பலர் வந்து கல்வி கற்றுள்ளனர். சிறிதாக ஆரம்பிக்கப்பட்டுப் பின் வளர்ச்சி பெற்றுள்ளது. அக்காலத்தில் எட்டாம் வகுப்புவரை இருந்துள்ளதாக அறிய முடிந்தது. கதிராண்டிச் சட்டம்பியார் இப்பாடசாலையில் இலவசமாக கல்வி கற்பித்ததினால் கதிராண்டிச் சட்டம்பியாரின் பாடசாலை எனவும் அழைக்கப்பட்டது. அராலியில் இருந்து சதாசிவம் உபாத்தியார் என்பவரும் கற்பித்துள்ளார். பரமசிவம் அவர்கள் கல்வி வளர்ச்சியில் பல முயற்சி எடுத்துள்ளார். முதலியார் குமாரசாமி வள்ளியம்மை அவர்களும் இப்பாடசாலையில் கல்வி கற்றதால் தமது ஞாபகமாக 1952ஆம் ஆண்டு கட்டடிம் கட்ட உதவி செய்துள்ளார். ஊர்மக்கள் பலரும் சேர்ந்து கட்டிட திருத்தங்கள் செய்துள்ளனர். இப்பாடசாலை 1970ஆம் ஆண்டுப் பகுதியில் வட்டு இந்துக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவாக சேர்க்கப்பட்டது. தனித்து இயங்கிய இப்பாடசாலை மீண்டும் தனித்து இயங்கி

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
GR 9- 12 , UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB & AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6

# திகிலும், மர்மமும், ஆபத்தும் நிறைந்த இடங்கள்!



சுந்தரம் இந்திரராஜா
indrarajah@gmail.com

திகில், மர்மம், அமானுஷ்யம் என விதவிதமாகச் சொல்லப்பட்டாலும், அவற்றுக்கும் ஒரு முக்கியத்துவம் உண்டு. எல்லா நாடுகளிலும் திகிலும், மர்மமும், ஆபத்தும் நிறைந்த இடங்கள் பல உள்ளன. இவற்றில் சில இயற்கையால் உருவானவை. பெரும்பாலும் மனிதனால் உருவாக்கப் பட்டவையே. எனினும், 'ஏன், எதற்கு, எப்படி' என காரணம் எதுவும் தெரியாததாலும், அதைப்பற்றி உலாவும் கதைகளாலும் இப்பட்டியலில் இடம் பிடிக்கின்றன. நாம் நாடிச் செல்லும்போது சில நேரங்களில் அது நமக்கு பலப்பரீட்சைகளைச் சந்திக்க வைக்கலாம். எச்சரிக்கை, அவதானம், ஆயத்தம் இருப்பது நல்லது. பலராலும் பேசப்படும் இடங்களில் சிலவற்றை கீழே தந்துள்ளேன்.

**மரண பள்ளத்தாக்கு** (Death Valley): 3.3மில்லியன் ஏக்கர் பரப்பளவு கொண்ட அமெரிக்காவின் கலிபோர்னியாவில் அமைந்துள்ள இந்தப் பள்ளத்தாக்கு கடல் மட்டத்தில் இருந்து 86 மீற்றர் கீழே உள்ளது. அதிக நிலையான வறட்சியும், கோடையில் மரணத்தை ஏற்படுத்தும் அதிக வெப்பமும் உடைய பகுதியாகும். இந்தப் பகுதியில்தான் உலகிலேயே அதிக அளவிலான வெப்பநிலை பதிவாகியுள்ளது. குளிர்கால வெப்பநிலை மிகவும் குளிர்ந்ததாகிவிடும், ஏனென்றால் சுற்றியுள்ள காற்று சுத்திகரிக்கப்பட்ட போது பாலைவனம் வெப்பத்தை தக்கவைக்காது. ஒரு வித்தியாசமான வேறுபாட்டைக் கொண்டுள்ளது. குளிர்காலப் பனிப்பகுதியுடன் உயர்ந்த உறைந்திருக்கும் மணற்குன்றுகள், உப்புக் குன்றுகள், மோசமான தண்ணீர் மழைக் காடுகள், பரந்தளவிலான காட்டுப்பகுதிகளைக் கொண்டுள்ளன. இந்த இடம் அழகான இடம் மட்டும் அல்ல திகில் பயணத்திற்கும் ஏற்ற இடம். ஆனால் உணவோ, தண்ணீரோ எதுவுமே கிடைக்காது. நீங்கள் எவ்வளவு கடினமான உடல் கட்டான மனிதனாய் இருந்தாலும், எரிக்கும் சூரியன் மற்றும் பள்ளத்தாக்கின் வெப்பம் மிக விரைவாக சோர்வடையச் செய்துவிடும். நீர் இல்லாமல், நீங்கள் இங்கு 14 மணி நேரம் மட்டுமே வாழ முடியும். திகில் பயணத்திற்காகவே பலர் இந்த இடத்தை தெரிவு செய்கின்றனர். சாலையோரம் நின்று பார்க்க (lookouts) அதிர்ச்சியூட்டும் பரந்த வெளிக் காட்சிகளும், மற்றும் மலையேற்ற இறக்க நிலப்பரப்பு, எளிதாக உள்ளே போய்வர அனுமதிக்கும் நடைபாதைகள் தெரிவதை காணுவீர்கள்.




**லேக் நைஓஸ், கமரூன்** (Lake Nyos, Cameron): மேற்கு ஆபிரிக்காவிலுள்ள கமரூன் நாட்டின் வடமேற்கு பகுதியில் உள்ளது லேக் நைஓஸ் என்ற ஏரி. இந்த ஏரி பார்ப்பதற்கு அழகாக இருக்கும். அது அமைதியாக இருக்கும் எரிமலையை போன்றது. ஆனால் இது சாதாரணமான இடம் அல்ல, ஏரியில் இருந்து காபனீர் ஒக்சைற் வெளியேறுகிறது.

21 ஓகஸ்ற் 1986இல், லேக் நைஓஸ் பகுதியில் ஓர் எரிமலை வெடித்து 1,746 பேரும், 3,500 கால்நடைகளும் கொல்லப்பட்டன. காபனீர் ஒக்சைற் வாயு மண்டலம் ஆரம்பத்தில் ஏறக்குறைய மணிக்கு 100 கி.மீ. வேகத்தில் உயர்ந்தது, பின்னர் காற்றைவிட பாரமாக இருந்ததால், அருகிலுள்ள கிராமங்கள் மீது இறங்கியது, ஏரியைச்சுற்றி 25 கிலோமீற்றர் தூரத்துத்துக்குள் வாழ்ந்த மக்கள் மற்றும் கால்நடைகள் மூச்சுத் திணறல் காரணமாக மாண்டன. இதனால் இந்த ஏரியை ஒட்டிய பகுதிகள் பாதுகாப்பற்ற பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் திகில் பயணம் செல்ல விரும்புவோர் இந்த இடத்தை வெகுவாக விரும்புகின்றனர்.

**அரை குவிமாடம்** (Half Dome): யோசெமிட்டி (Yosemite) தேசிய பூங்கா, கலிபோர்னியாவில் அமைந்துள்ள ஒரு மிக அழகான அருமையான அரை குவிமாட

(தொடர்ச்சி 27ஆம் பக்கம்...)

BEST DEAL FROM ROGERS
ROGERS™
Unbeatable Cell Phone Deals
Call For Best Deal
- Home Phone
- Tamil Chanels
- High Speed -150mbps Unlimited Internet (Free advanced WiFi Modem)
- Home phone /Internet /Digital Basic TV
- $35/M 2Gb
- $45/M 4GB
- $50 /M 6Gb
- $55/M 8GB
- $65/M 10GB
- No Contract
- Canada wide free call
- Unlimited world wide text message

Free unlimited calls for
- INDIA
- PAKISTAN
- CHINA
- SINGAPORE
- Japan
- Korea
- Malaysia and Indonesia


ROGERS Smart Home Monitoring
SAVE UP TO $1350
• Free camera • Free thermostat • Free door lock

Best Internet Offer for Students
Ignite 1gb unlimited internet with free advance wifi modem

தமிழில் தொடர்புகளுக்கு: SANJAY : 416.315.2917

# கொள்கைக்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

மத்தியில் உள்ளது. எனவே இந்தப் புதிய கூட்டணி கொள்கைக் கூட்டணியா? தேர்தல் கூட்டணியா? என்கின்ற சந்தேகம் எழுகின்றது.

ஆக, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் சிதறிப்போகும் நிலைமையே ஏற்படப் போகின்றது. இது தமிழ் மக்களின் பலத்தையே சிதறடிக்கும். இந்தப் பிரிவுகள், பிளவுகள் யாவும் மத்தியில் ஆளும் தரப்பிற்கே சாதகத் தன்மையை ஏற்படுத்தும். இன்றுள்ள தமிழ் அரசியல் சூழலில் தமிழ் மக்களுக்கான தலைமை என்பது தொடர்ந்தும் வெற்றிடமாக



இருக்கின்றது என்றே கூற வேண்டியுள்ளது.

# சித்தர்கள்...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

வருகின்றது. இப்பாடசாலையில் கல்வி கற்ற பலர் உயர் தொழிலில் இருக்கின்றனர் இன்று மாணவர் தொகை குறைவாயினும் ஆசிரியர்களின் பெரு முயற்சியால் முன் ஏற்றத்துடன் வளர்ந்து விளங்குகின்றது.

### ஆரம்ப கல்வியும், தனியார் கல்வியும்



ஆரம்ப காலத்தில் இருந்து சிறுவர்களுக்கு மூன்று வயதில் ஏடு தொடக்கும் முறை உள்ளது. பனை ஓலை ஏட்டில் எழுத்தாணி கொண்டு ஏடு தொடக்கப்பட்ட முறை காரணமாக ஏடு தொடக்கம் என்று இன்றும் அழைக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் ஆலயங்களில் ஏடு தொடக்கப்பட்டது. பின் பாடசாலைகள் ஆரம்பிக்கப் பட்டதும் பாடசாலைகளில் ஏடு தொடக்கப்பட்டது. மூன்று வயதில் ஏடு தொடக்கப்பட்டாலும், ஐந்து வயதிலேயே பாடசாலைகளில் சேர்க்கலாம். நெல்லிலோ, அரிசியிலோ ஏடு தொடக்கப்பட்ட அப்போதிருந்த பிள்ளைகள் பாடசாலைகளில் மண்ணிலேயே எழுத்துப் பயின்றனர். அப்போ 'சிலேட்' எனப்படும் தட்டில் சிலேட் பென்சிலினால் எழுதினர். ஆரம்ப கல்விகள் பாடசாலைகளில் பெண் ஆசிரியைகளாலே பயிற்றப்பட்டன. அவர்களை அப்போ தையல் அம்மா, அக்கா என்றே அன்புடன் அழைத்தனர். தாய்மை உணர்வுடன் கல்வியூட்டுபவர்கள் எனக் கருதியே அக்காலத்தில் பெண்களிடம் அக்கல்வி ஒப்படைக்கப்பட்டு இருக்கலாம்.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் தனிப்பட்ட ஆசிரியர்களே வீடுகளுக்குச் சென்று ஆரம்பக் கல்வியை படிப்பித்தனர். இந்நிலையில் சிறுவர்களுக்கு மூன்று வயது முதல் கல்வியை ஊட்ட வேண்டும் என்ற பெரு முயற்சியுடன் சித்தன்கேணி மாதர் சங்க ஆதரவில் சிறுவர் பாடசாலை சிறிய அளவுடன் ஆரம்பிக்கப்பட்டு இன்று வளர்ச்சி பெற்று நூற்றிற்கும் அதிகமான பிள்ளைகள் ஆரம்ப கல்வி பயில்கின்றனர். அதன் ஆரம்பகாலம் முதல் இன்றுவரை செல்வி லீலாவதி மாரிமுத்து அவர்கள் ஆசிரியராக இருந்து அதன் வளர்ச்சிக்குப் பெருஞ் சேவை புரிந்து வருகின்றார். இவ்வூரில் உள்ள அறிவொளி மன்றத்தாலும் இவ்வாறு சிறுவர் பாடசாலை இயங்குகின்றது.

வட்டுக் கிழக்கில் இயங்கிவரும் வள்ளுவர் இல்லம் உதவியற்ற பிள்ளைகளைப் பராமரித்து கல்வி அறிவு ஊட்டி வருகின்றது. இவற்றைவிட தனியார் கல்வி நிறுவனமும் மாணவர்களுக்குப் பகுதிநேர வகுப்புக்களை நடத்தி அவர்களது கல்வி வளர்ச்சிக்கு உதவி வருகின்றது.




# கொரோனா...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

Adalja ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில் நொவல் கொரோனா வைரஸ் சாதாரண தடிமன் காய்ச்சல் முதல் கொண்டு நிமோனியா மற்றும் சுவாசத்தொற்று



நோய்களை ஏற்படுத்தும் மற்றைய நான்கு வைரஸ்களைப் (OC43, 229E, HKUL and NL63 ) போன்றதுதான். இந்த நான்கும் வருடம் தோறும் உலகம் முழுவதும் பரவி வரும் வைரஸ்கள் ஆகும் என்றார்.

வருடம் தோறும் குளிர்காலங்களில் பரவும் காய்ச்சல் (Influenza) நோயால் மட்டுமே 3 தொடக்கம் 5 மில்லியன் மக்கள் உலகம் முழுவதும் வைத்தியசாலையில் அனுமதிக் கப்படுகின்றனர் என WHO தகவல் வெளியிட்டுள்ளது. இதில் 290,000 தொடக்கம் 650,000 பேர் வரையில் இறக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் 65 வயதிற்கு மேற்பட்டோர் அல்லது 5 வயதிற்கு உட்பட்டோர் என WHO தகவல் வெளியிட்டுள்ளது.

நொவல் கொரோனா வைரஸ் தொற்றுவதை அடிக்கடி கை கழுவுதல் போன்ற சாதாரண சுகாதார முறையை கடைப்பிடிப்பதாலேயே தடுக்கலாம்

எனக் கனேடிய சுகாதார அதிகாரிகள் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றனர்.

# சமத்துவத்துக்காக...

14ஆம் பக்கத்தொடர்ச்சி

ஷம். ஜி.வி. பிரகாஷ் போன்செய்து, "ஒரு ராப் பாடல் எழுதித் தரவேண்டும்" என்றார். ஒரே இரவில் அப்பாடலை எழுதி முடித் தேன். சூர்யா அப்பாடலை பாடியிருப்பதன் மூலம் தமிழகத்தில் ராப் பாடல்கள் மீது மக்களுக்கு இன்னும் ஈர்ப்பு வரும்.

### மறக்க முடியாத பாராட்டு எது?

'ஜிப்ஸி' படத்தில் வரும் 'தீவிர வியாதி' பாடலை சந்தோஷ் நாராயணன் இசையில் எழுதிப் பாடியிருக்கிறேன். அவரின் விருப்பமான பாடல் அது. சர்வதேச தரத்திலானது என்று அடிக்கடி சொல்வார். லண்டனில் உள்ள புகழ்பெற்ற 'அபே ரோரு' ஸ்டுடியோவுக்குதான் உலகம் முழுக்க எல்லா பாடல்களையும் மிக்ஸிங் செய்ய அனுப்புவர். அவர்கள் யார்? என்ன என்றெல்லாம் பார்க்கமாட்டார்கள். ஆனால், அவர்கள் இந்த ஒரு பாடலைக்



குறிப்பிட்டு சந்தோஷ் நாராயணனிடம் "ரொம்ப நல்லா இருக்கு" என்று வாழ்த்து சொன்னார்களாம். சந்தோஷ் நாராயணன் சொன்னபோது, எனக்குள் பயங்கர உற்சாகம் தொற்றிக்கொண்டது.

# மனச்...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

சோர்வை சமூகம் பார்க்கும்விதம் அதனால் பாதிக்கப்படுவோர் உதவியை நாடுவதற்கு ஒரு பெரிய தடையாக உள்ளது. சிகிச்சை வழங்காவிட்டால் ஒருவர் தேவையில்லாமல் நீண்ட நாள் துன்பப்படலாம். தன்னுடைய குடும்பத்துக்கும் துன்பத்தைக் கொண்டு வரலாம்.

பெரும்பாலனோரால் மனச்சோர்வின் அறிகுறிகளை அடையாளம் காண இயலாது. இதற்குக் காரணம் இந்தப் பிரச்சினை பற்றிய தெளிவோ விழிப்புணர்வோ அவர்களுக்கு இல்லாததுதான். இதனால் அவர்கள் சிகிச்சையை நாடுவதற்கு முன்னால் நிறைய நாள் வீணாகி விடுகிறது. இது அவர்களுடைய நிலையை இன்னும் மோசமாக்ககூடும். மிதமான மற்றும் நடுத்தர மனச்சோர்வுக்கு சுய உதவி உத்திகள், ஆலோசனைகள் அல்லது சிகிச்சையே போதுமானது. பாதிக்கப் பட்டோர் இவற்றின் மூலம் குணமடைந்து விடுவர். தீவிர மனச்சோர்வுக்கு மட்டுமே சிகிச்சையும் மருந்துகளும் தேவைப்படும்.




உலக சுகாதார அமைப்பு உலகை மிகவும் ஊனமாக்கும் நோய்களில் ஒன்றாக மனச்சோர்வைக் குறிப்பிடுகிறது. அதேசமயம் மனச்சோர்வால் பாதிக்கப் பட்ட எவரும் குணமடையலாம். ஓர் இயல்பான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழலாம் என்றும் கூறுகிறது.

# “இலங்கை அரசின் நோக்கம் நிறைவேறுகிறது!”- செல்வம்

**வெவ்வேறுவிதமான எழுத்துமுறை, வெவ்வேறுவிதமான அரசியல் போக்கு கொண்ட எல்லா இலக்கியவாதிகளுக்கும் பரிச்சயமான பெயர் ‘காலம்’ செல்வம். இலங்கையில் பிறந்து எண்பதுகளின் தொடக்கத்தில் பிரான்ஸ் நாட்டிற்குப் புலம்பெயர்ந்தவர் செல்வம். தற்போது கனடாவில் வாழ்ந்துவரும் அவர், ‘காலம்’ என்ற இலக்கிய இதழை 30 ஆண்டுகளாக நடத்திவருகிறார். ‘சொற்களில் சுழலும் உலகம்’ என்ற தனது புத்தகத்தை வெளியிடுவதற்காகச் சென்னை வந்திருந்தவரைச் சந்தித்தேன். – ர. முகமது இல்யாஸ்**

இலங்கையிலிருந்து நீங்கள் புலம் பெயர்ந்தபோது போர்ச்சூழல் நிலவியதா?

“நான் 1981-ல் இலங்கையை விட்டு வெளியேறினேன். அப்போது நேரடியான போர் தொடங்கியிருக்கவில்லை. எனினும் போருக்கான சூழல் உருவாகியிருந்தது. 1983 ஜூலை இனக்கலவரத்துக்குப் பிறகு, நிலைமை தீவிரமடைந்தது.”



படங்கள்– வி சதீஷ்குமார்

வெளிநாட்டிற்கு நீங்கள் புலம்பெயர்ந்த போது உங்கள் தொடக்க நாள்கள் எப்படி இருந்தன?

“மொழி தெரியாமல், பெரிய படிப்பறிவு எதுவும் இல்லாமல், பொருளாதாரச் சிக்க லுடன் வாழ்ந்த எங்கள் தலைமுறை பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டது. தங்குவதற்கு அறை இருக்காது. அறை கிடைத்தாலும் பத்துப் பேருடன் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். ஆனால் ஐரோப்பா வில் புலம்பெயர்ந்தவர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு உண்டு. மருத்துவம் இலவச மாகக் கிடைத்தது. ஆனால் மருத்துவம் பார்க்க விசா தேவைப்படும். 10 பேர் இருந்தால், 5 பேருக்குத்தான் விசா இருக்கும். அதனால் நாங்கள் விசாவைச் சுற்றுக்கு விட்டு மாற்றி மாற்றி மருத்துவம் பார்ப்போம். மிகச் சாதாரண வேலைதான் கிடைக்கும். அதுவும் எல்லோருக்கும் கிடைக்காது. யாழ்ப்பாணத்திலிருந்து ஒருவர் புலம்பெயர்ந்தால், அடுத்தடுத்து உறவினர்களையும் அழைத்துக் கொள்வோம்.”

உலகம் முழுவதும் தமிழர்கள் பரவலாக வாழ்ந்துவருவதை எப்படிப் பார்க்கிறீர்கள்?

“ஒருபக்கம் நன்மை. மறுபக்கம் தீமை. தமிழர் இலங்கையிலிருந்து புலம்பெயர் வதை இலங்கை அரசு விரும்பியது என்றுதான் சொல்ல வேண்டும். தமிழர் வெளியேற வேண்டும் என்றும், போராட் டத்திற்கு ஆள் குறையும் என்றும் திட்டமிட்டு எங்களை வெளியேற்றியது இலங்கை அரசு.

தமிழர் புலம்பெயர்வதால் இலங்கையில் தமிழர்கள் மேலும் சிறுபான்மையினர் ஆகின்றனர். ஆனால் தற்போது எங்கள் இளைஞர்கள் ஐரோப்பா, அமெரிக்கா, கனடா முதலான நாடுகளில் பல துறை களில் பெரிய பதவிகள் வகிக்கின்றனர் என்பது முக்கியமான விஷயம். இது இன்னொருவகையில் இலங்கை அரசுக் குத் தலைவலி. இலங்கையில் எந்தப் பிரச்சினை என்றாலும் அதற்கான வலுவான எதிர்வினை புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்து வருகிறது.”

மேற்கத்திய வெளிநாட்டு வாழ்க்கை முறை குறித்த வியப்பு இங்குள்ள தமிழர் பலரிடம் இருக்கிறது என்றபோது, ஒரு புலம் பெயர்ந்த தமிழராக மேற்கத்திய நாடு ஒன்றில் உங்கள் வாழ்க்கை முறை எப்படி இருக்கிறது?

“பிரான்ஸ் நாட்டிற்குப் புலம்பெயர்ந்த அடுத்த நாளே, நாங்கள் யாழ்ப்பாணத்தின் சோறும் கறியும்தான் சாப்பிட்டோம். கனடாவில் நான் இருக்கும் பகுதியே ஒரு யாழ்ப்பாணம்தான், அந்த அளவுக்குத் தமிழர் இருக்கின்றனர். வீட்டுக்கு வெளி யில் வெள்ளைக்காரர்கள்போல வாழ்ந்தா லும், வீட்டுக்குள் சன் டிவியோ, விஜய் டிவியோ பார்த்துக்கொண்டு, தமிழ்ப் பத்தி ரிகை படித்துக்கொண்டு, தமிழ் ரேடியோ கேட்டுக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் ஏதோவொரு இடத்தில் ஒரு சின்ன சம்பவம் நடந்தால், அதன் அருகிலிருக்கும் கிராமத்தில் இருப்பவருக் குக்கூட அது தெரியாது. ஆனால் ரொறொன்ரோவில் இருப்பவருக்கு அது தெரியும். உலகம் அப்படிச் சுருங்கியுள் ளது. தமிழரின் பண்பாட்டிலும் பெரிய மாற்றமில்லை. ஆனால் கையில் பணப் புழக்கம் அதிகம் இருப்பதால் ஆடம்பர மாகத் திருமணம் செய்கின்றனர். அதிக செலவுடன் அதிக வைதீகத்துடன் பூப்புனித விழாக்கள் நடத்தப்படுகின்றன.”

அப்படியானால் தமிழ் மொழிக்கும் எந்தச் சிக்கலும் இல்லையா?

“30 ஆண்டுகளாகக் கனடாவில் இருக்கி றேன். நான் புலம்பெயர்ந்த முதல் ஆண்டிலேயே, தமிழ் அழிந்துபோகும் என்று சொன்னார்கள். ஆனால் இன்று வரை அப்படி எதுவும் நடக்கவில்லை. எங்கள் வீட்டுக் குழந்தைகள் நன்றாகத் தமிழ் பேசுவார்கள். ஆனால் எழுதுவதும் வாசிப்பதும் அவர்களுக்குக் கஷ்டம். சில இடங்களில், குழந்தைகளுக்கு வீடுகளி லேயே தமிழ் கற்றுக் கொடுக்கப்படு கிறது. வாரம் முழுவதும் பள்ளி சென்று விட்டு, வார இறுதியில் தமிழ்ப் பள்ளிகளுக்குக் குழந்தைகளை அனுப்பும் பெற்றோரும் அதிக அளவில் இருக்கின்றனர். தற்போது தமிழ் கற்றுக் கொள்வது, பல்கலைக்கழகத்தில் சேரும் போது கூடுதல் மதிப்பெண்களையும் தருகிறது.”

முள்ளிவாய்க்கால் துயரம் முடிந்து 10 ஆண்டுகள் கழித்து, மீண்டும் ராஜபக்சே இலங்கையின் பிரதமராகப் பதவியேற் றுள்ளதைப் பற்றி..?

“நான் அறிந்த காலம் முதல், தமிழர்கள் பல நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டேதான் வருகின்றனர். அது இன்னும் மோசமாகப் போய்க்கொண்டிருக் கிறது. அதனைச் சிந்தித்து, மாற்றக்கூடிய தலைமை இங்கு இல்லை. யாழ்ப்பாணம் அருகில் இருந்த என் கிராமத்தில், நான் வாழ்ந்தபோது, காலை வேளைகளில் விவசாயம், கடைத்தொழில், வேலை, மாணவர்கள் என கிராமம் முழுவதும் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும். போர் முடிவுக்குப் பிறகு, கடந்த ஆண்டு என் கிராமத்திற்குச் சென்றிருந்தேன். பெரும்பாலான ஆட்கள் அங்கு இல்லை. மூன்று வீட்டுக்கு ஒரு வீட்டில்தான் ஆட்கள் இருக்கின்றனர். போரில் இறந்தவர்கள், புலம்பெயர்ந்தவர்கள் போக, உயிர் பிழைத்தவர்கள் மட்டுமே அங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றர். கையில் குழந்தைகளோடு தமிழ்ப்பெண் களைப் பார்ப்பதே அங்கு அரிதாக இருக்கிறது. ஏனென்றால் அந்தத் தலை முறை வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்து விட்டது. இதுதான் சிங்கள அரசின் நீண்டகாலத் திட்டம். அதை நிறைவேற்றியும் உள்ளனர்.”

ஒரு புலம்பெயர்ந்த தமிழராக இந்தியா வின் குடியுரிமைத் திருத்த சட்டத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

“இந்தியாவில் வலதுசாரிப் போக்கு உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. ஆனால் இதை இலங்கையோடு ஒப்பிட முடியாது. இங்கு குறைந்தபட்ச ஜனநாயக வெளி இருக்கிறது. மக்கள்விரோதச் சட்டங்களுக்கு எதிராகத் தமிழ்நாட்டில் கடும் எதிர்ப்பு நிலவுகிறது. இதைப்பற்றிப் பேசுவதற்கு அனுமதி இருக்கிறது. இலங்கையில் இப்படிப் பேசினாலே, கைது செய்யப்படுவதும், கொல்லப்படுவதும்தான் நிகழும்.”

### காலம்

ஒரு காலத்தில் நிறம், இனம், மொழி என்று எதிர்த்தவர்கள், தற்போது மதத்தைக் காரணமாகக் கொண்டு எதிர்க் கின்றனர். இப்போது, இந்தியாவிலும், இலங்கையிலும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் அதிகரித்து வருகின்றன. இந்தியாவில் வாழும் இலங்கை அகதிகளில், பெரும்பாலானோர் இந்துக்கள். அவர்களுக்குக் குடியுரிமை அளிக்காமல் இருப்பதுகூடக் கோபம் வர வழைக்கவில்லை. இலங்கை அகதிகளை இந்திய அரசு கௌரவமாக நடத்த வில்லை என்பதுதான் வருத்தத்தையும் கோபத்தையும் அளிக்கிறது.”

‘காலம்’ இதழை 30 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகக் கொண்டு வந்து கொண்டிருக்கிறீர்கள். அதைப் பற்றி..?

“நாங்கள் ‘காலம்’ இதழைத் தொடங்கிய போது, இலங்கையில் கடுமையான போர்ச் சூழல் நிலவியது. புலம்பெயர்ந்த தமிழர் களால் பல நாடுகளில் ஈழ அரசியலை முன்வைத்து இதழ்கள் நடத்தப்பட்டன. நானோ அப்போது இலக்கியத்தில் ஆர்வம் கொண்டிருந்தேன். சென்னை வந்தபோது,

(தொடர்ச்சி 25ஆம் பக்கம்...)

**‘காலம்’ சஞ்சிகையின் 30 ஆண்டுகால இலக்கியப்பணியினை தொடர விளம்பரம் பத்திரிகையும் வாழ்த்துகின்றது.**

# ROYAL MEDICAL AND PROFESSIONAL CENTRE

2225 Markham Road, Scarborough

**SUITABLE FOR:**

- Dentists
- Pharmacists
- Medical Labs
- Chiropractors
- Physiotherapists
- Family Physicians
- Lawyers
- Accountants
- Real Estate
- Mortgage Brokerages
- Insurance & Financial Services
- Other Professionals


**Retail not permitted**




## UNITS AVAILABLE FOR SALE



Raja Mahendran**
416.315.9397



Gulshan Sharma**
416.407.5911

- Great investment for medical and other professionals to design their own future
- Around 48,000 Sq.ft, 4- storey building with 35+units
- Units ranging from 400-1700 sq.ft., and 11-foot ceiling
- Over 100 free parking spots with 24/7 access
- Extra space in the basement for imaging centres ( Xrays, Ultrasound), office, etc
- Rooftop ZEN garden ( Terrace) for relaxation
- Leisure tree shades in the parking lot, with benches
- Located on a high traffic major road in Toronto.
- Situated in the middle of four major hospitals
- Easy access to two major highways ( HWY 401 & 407)
- 24/7 public transportation at your door step
- Located in the middle of growing population
- Close to malls, fast - spreading consumer shops and restaurants
- Easy access to the building from North & South bounds traffics

DON'T MISS THIS OPPORTUNITY TO OPERATE YOUR BUSINESS IN YOUR OWN PLACE

For More info. Call:

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife / GTA Realty Inc.** Brokerage*

416.321.6969

5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2

*Independently Owned & Operated **Broker

# Proud to be serving you through these two Funeral Homes!

**GTA EAST**

OGDEN
FUNERAL HOMES
4164 Sheppard Ave E,
Scarborough, ON M1S 1T3.
www.ogdenfuneralhome.com

**GTA WEST**

LOTUS
Funeral and Cremation Centre Inc.
121 City View Dr,
Etobicoke, ON M9W 5A8.
www.lotusfuneralandcremation.com

:: Family owned and operated for over 70 years
:: East Toronto location just off Hwy 401, between Kennedy Road and Midland Ave
:: Affordable funeral plans to meet your budget

:: On-Site Crematorium
:: West Toronto location just off Hwy 401,410, 427 & 407 North of Belfield Rd and East of Hwy 27
:: Beautiful Facility With Up To 500 Seating

State of the art technology
Financing plans available for both preplanned funerals and at-need funerals
Diverse staff to care for your needs, honour your traditions and speak your language
Travel Repatriation Insurance available (**$495.00 only**) for your lifetime coverage



## Patricia Peter BBM

*Licenced Funeral Preplanning Director*
*Licenced Insurance & Investment Advisor*

Direct: **416-834 5753**
Email: advisorpat10@gmail.com

*"Serving With Dignity, Compassion and Excellence"*

# வறுமை...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

கான உதவிகளை, பொருட்களை வழங்கு வதில் இந்த நிறுவனங்கள் கவனம் செலுத்தவில்லை என்றே கூற வேண்டும்.



இதனைவிட, புலம்பெயர்ந்த நாடுகளி லுள்ள தமிழ் அமைப்புக்கள் இங்குள்ள அரசியல்வாதிகளை ஊக்குவிக்கும் வகையில் நிதியினை வழங்கிவருவதும் வேதனைக்குரியதே. போரினால் பாதிக்கப் பட்டோர், தங்கள் உடலுறுப்புக்களை இழந்து வாழ்வோர், இயற்கை அனர்த் தங்கள் ஏற்படுகின்றபோது அதனால் பாதிக்கப்படுவோர் எனப் பலதரப்பட் டோருக்கு உலருணவு வழங்குதல் போன்ற சிறுசிறு உதவிகள் அரசியல்வாதிகளால் வழங்கப்படுகின்றன. அதற்கான நிதி புலம்பெயர் நாடுகளில் உள்ள அமைப் புக்களிலிருந்துதான் அனுப்பி வைக்கப் படுகின்றன.

ஒவ்வொரு கட்சிக்கும் ஆதரவாக உள் ளவர்கள் அங்கிருந்து குறித்த அர சியல்வாதிகளுக்குப் பணத்தை அனுப்பு கின்றனர். ஆனால், அதனைத் தாங்களே தங்கள் பணத்தில் வழங்குவது போல, தங்கள் கட்சி சார்ந்த பதாதைகளை காட்சிப்படுத்தி இங்குள்ள அரசியல்வா திகள் வழங்கி தங்கள் வாக்கு வங்கியை நிரப்பிக்கொள்ள முயல்கின்றனர். இதனைவிடவும், தேர்தல் நடைபெறும் காலங்களில் ஒவ்வொரு கட்சிகளினதும் அங்குள்ள ஆதரவாளர்கள் பெருமளவு பணத்தை வழங்குகின்றனர். இரவு பகலாகவும், கடும் குளிருக்கு மத்தியிலும் உழைத்துப் பெறப்பட்ட புலம்பெயர் உறவு களின் அந்தப் பணம் இங்கு வீண் விரயம் செய்யப்படுகின்றமையை பார்க்கும்போது வேதனையாகவே இருக்கின்றது.

இவ்வாறான நிலைமையில், நெல்லியடி சமூக அறக்கொடை அமைப்பின் அரசி யல் சார்பற்ற, சீரான சமூகப் பணி வர வேற்கத்தக்கதும், பாராட்டுக்குரியதுமாகும். இப் பணி தொடரவேண்டும் என்பதே இங்கு கூடியிருந்தோரின் ஏகோபித்த எண்ணமாக இருந்ததை அறியக்கூடியதாக இருந்தது.

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

## உனக்குள்ளே உலகம்

**- ரகுநாதன் -**

போரில் பெற்ற வெற்றியால் மன்னனுக்கு ஆணவம் அதிகரித்தது. அதன் முடிவாக, பிறரை அவமானப்படுத்திப் பேசுவதில் மகிழ்ச்சி கொண்டான். ஒரு நாள் வயதான துறவி அரண்மனைக்கு வந்தார். அவரது நடையைக் கண்ட மன்னன், “என்ன துறவியாரே எருமை மாடு போல அசைந்தாடி வருகிறீரே” எனச் சொல்லி சிரித்தான்.

துறவி சற்றும் கலங்கவில்லை. மாறாக, மன்னனைக் கண்டு புன்னகைத்தபடி மன்னா நான் வணங்கும் புத்தர் போல தாங்கள் காட்சியளிக்கிறீர்கள் எனப் புகழ்ந்தார். இகழ்ந்தாலும் பிறர் மீது கோபம் கொள்ளாத துறவியைக் கண்ட மன்னனுக்கு வியப்பு எழுந்தது. எருமை என நான் இகழ்ந்தும் என்னை புத்தர் எனப் புகழுகிறீரே ஏன்? எனக் கேட்டான்.

“மன்னர் உள்ளம் போலவே இந்த உலகம் காட்சியளிக்கும்” என்றார் துறவி. “என் உள்ளத்தில் புத்தர் பெருமான் இருப்பதால் எங்கும் புத்தர் மயமாகத் தென்படுகிறது. அதைப் போல தாங்களும்



சிந்தித்தால் உண்மை புரியும். உலகில் யாரும் உயர்ந்தவரோ தாழ்ந்தவரோ இல்லை. எல்லோரும் சரி சமமானவரே” என்றார் துறவி. துறவியின் பேச்சில் உண்மை இருப்பதை உணர்ந்த மன்னன் அக்கணமே ஆணவத்தைக் கைவிட்டான்.



# பதிவு பெற்ற பணி ஓய்வுகால சேமிப்புத் திட்டம் (RRSP)



**ஜேசுதாசன் ஜெனிராஜ்**
**நிதி ஆலோசகர்**

பதிவு பெற்ற பணி ஓய்வுகால சேமிப்புத் திட்டமானது (Registered Retirement Savings Plan (RRSP) பணி ஓய்வு காலத்துக்காக பணம் சேமிக்க உங்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. RRSP பங்களிப்புகள் வரிக்கு முன்னைய வருவாய்களைக் (Income before tax) கொண்டு மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது பங்களிப்புகளுக்காகப் பயன்படுத்தப்படும் வருமானத்துக்கு நீங்கள் வரி செலுத்த வேண்டியதில்லை, ஆனால் அவற்றில் இருந்து மீள எடுக்கும் பணத்துக்கு நீங்கள் வரி செலுத்த வேண்டும். ஒரு RRSP-க்கு உங்களால் வழங்க கூடிய பங்களிப்புத் தொகையானது, குறிப்பிட்ட வரம்புகள் வரை நீங்கள் ஈட்டும் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இது கனடாவின் மத்திய அரசாங்கத்தால் கனேடியருக்கு வழங்கப்பட்ட சிறந்ததொரு திட்டம் ஆகும். ஒரு RRSP தொடங்குவதற்கான 5 காரணங்கள்:

◆ **பங்களிப்புகள் வரிக் கழிவுக்கு** (Tax credit) **உட்பட்டவை:** உங்கள் RRSP பங்களிப்பை வருமான வரி தாக்கல் செய்யும்போது கழிப்புத் தொகையாக நீங்கள் காண்பிக்க முடியும்.

◆ **சேமிப்புகள் வரியில்லாமல் வளர்கின்றன:** முதலீட்டு வருமானங்கள் உங்கள் RRSP-யில் இருக்கும் வரை நீங்கள் அவற்றுக்கு எந்த வரியும் செலுத்த வேண்டியதில்லை. இந்த வரி-அற்ற தொகையாக்கம் உங்கள் சேமிப்பு விரைந்து வளர உதவுகிறது.

◆ **நீங்கள் பணி ஓய்வு பெறும்போது வழக்கமான கொடுப்பனவுகளைப் பெறும் வகையில் உங்கள்** RRSP-**ஐ நீங்கள் மாற்றிக்கொள்ள முடியும்:**
நீங்கள் பணி ஓய்வு பெறும்போது உங்கள் RRSP சேமிப்புகளை வரியில்லாமல் ஒரு (Registered Retirement Income Fund-RRIF)ஆக அல்லது ஆண்டுத்தொகையாக (Annuity) நீங்கள் மாற்றிக்கொள்ள முடியும். ஒவ்வொரு ஆண்டும் நீங்கள் பெறும் வழக்கமான கொடுப்பனவுகள் மீது நீங்கள் வரி செலுத்துவீர்கள் ஆனால் பணிஓய்வுக் காலத்தில் நீங்கள் குறைந்த வரிப் பிரிவுக்குள் இருந்தால் பணிபுரியும் காலத்துடன் ஒப்பிடும்போது நீங்கள் குறைவான வரியே செலுத்துவீர்கள்.

◆ **வாழ்க்கைத் துணைவருக்கான** (Spousal ) RRSP **திட்டம் உங்கள் ஒருங்கிணைந்த வரிச்** (Combined Tax) **சுமையைக் குறைக்க முடியும்.** நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணைவரை விட அதிகம் சம்பாதிப்பவராக இருந்தால், வாழ்க்கைத் துணைவருக்கான RRSP-க்குப் பங்களிப்பதன் மூலம் அவர்கள் வரியற்ற சேமிப்பை உருவாக்க நீங்கள் உதவ முடியும். பின்னர் ஓய்வு கால வருமானம் உங்கள் இருவருக்கும் இடையே சமமாகப் பகிரப்படும் இதனால் நீங்கள் செலுத்தும் மொத்த வரித்தொகை குறையலாம்.

◆ **முதலாவது வீடு வாங்குவதற்கு அல்லது உங்கள் கல்விக்காக உங்கள்** RRSP**யிலிருந்து நீங்கள் கடன் வாங்க முடியும்.** உங்கள் முதலாவது வீட்டுக்கு முற்பணம் கொடுப்பதற்காக (Home Buyer's Plan) $25,000 வரையிலும், உங்களுக்கான அல்லது உங்கள் வாழ்க்கைத் துணை வருக்கான கல்விச் செலவுகளுக்காக (Livelong learning Plan) $20,000 வரையிலும் நீங்கள் எடுக்க முடியும். குறிப்பிட்ட கால வரையறைக்குள் பணத்தை நீங்கள் திருப்பிச் செலுத்தும் வரை இவ்வாறு எடுத்த பணத்துக்கு நீங்கள் வரி எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

**பதிவுசெய்யப்பட்ட ஓய்வூதிய சேமிப்புத் திட்டத்தில் எவ்வகையான முதலீடுகள் செய்ய முடியும்?**
உங்கள் முதலீட்டு இலக்குகளைப் பொறுத்து, உங்கள் சேமிப்பில் பின்வரும் ஏதாவது அல்லது அனைத்தும் இருக்கலாம்.

- பணம் (Cash)
- பிரிவுபடுத்தப்பட்ட நிதி (Segregated funds)
- பன்கூட்டு நிதியங்கள்(Mutual Funds)
- கனேடிய மற்றும் சர்வதேச பங்குகள் _ (Canadian and International equities – stocks)
- நிலையான வருமானப் பத்திரங்கள் ( Fixed Income Securities)
- நிதி ஒப்பந்தப் பத்திரங்கள் (Bonds)
- உத்தரவாத முதலீட்டு சான்றிதழ்கள் (guranteed investment securities) ,
- திறைசேரி நிதி ஒப்பந்தப் பத்திரங்கள் (Treasury bonds) மற்றும் பல.

RRSP-க்கு அதிகபட்ச அனுமதிக்கக்கூடிய பங்களிப்பு வரம்புகள்

| ஆண்டு | தொகை |
|---|---|
| 2016 | $25,370 |
| 2017 | $26,010 |
| 2018 | $26,230 |
| 2019 | $26,500 |
| 2020 | $27,230 |

**இந்த சேமிப்புத் திட்டத்தில் (RRSP) எந்த Fundஇல் முதலீடு செய்வதால் அதிக வருவாய் (high return) எடுக்கலாம்? ஏற்கனவே RRSPஇல் முதலீடு செய்த பணத்திலிருந்து எப்படி அதிக வருவாய் (high return) எடுப்பது? போன்ற உங்கள் எல்லாக் கேள்விகளுக்கும் தீர்வுகளை வழங்குவோம்.**

**ஜேசுதாசன் ஜெனிராஜ்** – நிதி ஆலோசகர் –MSc. (Marketing)

**(Wealth & Retirement Solutions-Canada's Largest Brand)**

**437.231.4632**

# காதல் எனும் கனியமுது

இளமையிலும் காதல் வரும்
முதுமையிலும் காதல் வரும்
எக்காதல் இனிமை என்று
எல்லோரும் எண்ணி நிற்பர்
இளமையிலே வரும் காதல்
முதுமையிலும் தொடர்ந்து வரின்
இனிமை நிறை காதலென
எல்லோரும் மனதில் வைப்போம்

காதலுக்கு கண்ணும் இல்லை
காதலுக்குப் பேதம் இல்லை
காதல் என்னும் உணர்வுதனை
கடவுள் தந்தார் பரிசெனவெ
காதலிலே மோதல் வரும்
காதலிலே பிரிவும் வரும்
என்றாலும் காதல் எனில்
எல்லோரும் விரும்பி நிற்பார்

காதல் என்று சொன்னவுடன்
கவலை எல்லாம் ஓடிவிடும்
கனவுபல தோன்றி வந்து
கண்ணுக்குள் புகுந்து நிற்கும்
கற்பனையில் உலா வந்து
களிப்புடனே நாம் இருப்போம்
காதல் என்னும் உணர்வில்லார்
கல்லினுக்கே சமம் ஆவார்

காவியத்தில் காதல் வரும்
ஓவியத்தில் காதல் வரும்



கல்வியிலும் காதல் வரும்
காசினிலும் காதல் வரும்
அக்காதல் கொள்ள மனம்
ஆசை பட்டு நின்றாலும்
அழகு மங்கை தரும்காதல்
அனைவருக்கும் பிடிக்கும் அன்றோ

மனித குலம் முழுவதற்கும்
மகிழ்வு எனும் மருந்தாக
வரமாக காதல் அது
வந்து அமைந்து இருக்கிறது
புவிமீது நாம் வாழ
பொலிவு தரும் அமிர்தமென
காதல் எனும் கனியமுதை
கடவுள் எமக் களித்துள்ளார்




எம். ஜெயராமசர்மா - மெல்பேண் அவுஸ்திரேலியா

# இலங்கை...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

பதிப்பாளர் ஒருவரின் அறிமுகம் கிடைத்தது. கனடாவிலிருந்து கட்டுரை களை நாங்கள் அனுப்பி வைப்போம். இங்கு 'காலம்' அச்சடிக்கப்பட்டது. ராஜீவ் காந்தி கொலைக்குப் பிறகு அந்தப் பதிப்பாளர் பின்வாங்கிக்கொண்டார். அதனால் ஆறு மாதங்கள் அமைதியாக இருந்தோம். அதன்பின், மீண்டும் இதழ்ப் பணிகளைத் தொடங்கினோம்.

தொடர்ச்சியாக 30 ஆண்டுகள் இதழைக் கொண்டு வந்திருப்பது மகிழ்ச்சியளிக் கிறது. இதில் எல்லாத் தரப்பு எழுத்து களுக்கும் களம் அமைக்கிறோம். இமையம் தமிழகத்தில் இருக்கலாம், அ. முத்துலிங்கம் கனடாவில் இருக்கலாம், ஷோபாசக்தி பிரான்ஸில் இருக்கலாம் ஆனால் அனைவரும் தமிழர் என்ற அடிப்படையில் இணைகிறோம். 'காலம்' இதழில் எழுதாத ஈழத் தமிழ் எழுத்தாளர்களும், இந்தியத் தமிழ் எழுத்தாளர்களும் குறைவு. புலி ஆதரவு, புலி எதிர்ப்பு, இந்திய ஆதரவு, எதிர்ப்பு என அனைத்துத் தரப்புகளிலும் படைப்பு கள் வெளியிட்டுள்ளோம். கருத்துகளில் எந்தப் பாகுபாட்டையும் நாங்கள் கடைப் பிடித்ததில்லை. மேலும் கனடா இயல் விருது முயற்சியைத் தொடங்கிய நால்வரில் நானும் ஒருவன். சுந்தரராமசாமிக்கு 70 வயது ஆனதை




யொட்டி, சிறப்புச் செய்வதற்காகத் தொடங்கப்பட்டது. 18 ஆண்டுகளாக வழங்கப்பட்டுவரும் இயல் விருது, இந்த ஆண்டு சு. வெங்கடேசனுக்கு வழங்கப்படுகிறது.!"

- நன்றி ஆனந்தவிகடன்

# நினைவில் நிற்பவை-34

## பூனே பயணம்



- துறையூரான் -

மைசூரில் தோட்டம் பார்த்த அடுத்த நாள் அங்குள்ள மைசூர் கலைப்பொருள் விற்பனை நிலையத்துக்குச் சென்றோம். இது மைசூர் மாகாண அரசால் நிறுவட்டது. இங்கு மைசூர் மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் அத்தனை பொருட்களும் விற்பனைக்குள்ளன. விலைகள் பொருட்களில் ஒட்டப்பட்டிருக்கின்றன. அதன்படி பணத்தைச் செலுத்தி வாங்கலாம். தனியார் விற்பனை நிலையங்களில் பேரம் பேசித்தான் வாங்க வேண்டியிருந்தது. எனவே ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகின்றனர். மைசூரில் சந்தன மரக் காடுகள் உள்ளன. அதனால் சந்தனத்தால் செய்யப்பட்ட சுவாமிப் பொம்மைகள், மரத்தாலான சிலைகள், சந்தன சோப், ஊதுவத்தி, சுவரில் தொங்கவிடும் கலைப் பொருள்கள், பட்டுச் சேலைகள், பட்டு வேட்டி சால்வை போன்ற பல பொருட்கள் இங்கே இருந்தன. சில பொருட்களை மட்டும் வாங்கிக் கொண்டு அருகிலிருந்து அருங்காட்சியகம் போன்றவற்றைப் பார்த்துவிட்டு அன்று பிற்பகல் பூனே நகருக்குப் புகைவண்டி மூலம் புறப்பட்டோம்.

மைசூரிலிருந்து பூனே ஏறக்குறைய 1,420 மைல் தூரத்தில் உள்ளது. கடுகதித் தொடர் வண்டியில் போவதற்கு ஏறக்குறைய 50 மணித்தியாலம் எடுக்கும். எனவே நாம் ஒரு நாள் பிற்பகல் 3 மணியளவில் புறப்பட்டு மூன்றாம் நாள் பிற்பகல் 6 மணியளவில் பூனேயை அடைந்தோம். இவ் வண்டியில் படுக்கை வசதிகள் உண்டு. உணவுச்சாலையும் வண்டியிலேயே தனியாக இணைக்கப்பட்டுள்ளது. அலுப்புத் தெரியாமல் பிரயாணிக்கக் கூடியதாய் இருந்தது.

குறிப்பிட்ட சில புகையிரத நிலையங்களில் மட்டுமே இது நின்று சென்றதால் அங்குள்ள உணவுச்சாலைகளில் பழங்கள், உணவுப் பொதிகள் முதலியனவும் பெறக் கூடியதாக இருந்தது. நாங்கள் வாங்கிய பிரயாணச் சீட்டு பொம்பாய்க்குப் போவதற்கானது. ஆனால் நாம் சென்ற புகைவண்டி பூனேயில் முடிவடைவதால் அங்கு இறங்கி வேறு வண்டியில் பொம்பாய் செல்ல வேண்டும். எனவே ஒரு நாளைக்குப் பூனேயில் தங்கிப்போக முடிவு செய்தோம். பூனே புகையிரத நிலையத்தில் எமது பிரயாணச் சீட்டைக் கொடுத்து அடுத்த நாள் செல்வதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டோம். ஸ்ரேசனிலே இருந்த ரக்சிக்காரரை ஒழுங்கு செய்து அண்மையிலிருந்த ஒரு ஹோட்டலுக்குச் சென்று தங்கினோம். அங்கிருந்த பணியாளர் ஒருவர், தான் சென்னைவாசி என்றும் நாங்கள் எங்கிருந்து வருவதாகக் கேட்டார். நாங்கள் இலங்கை என்றதும் உதவி தேவையானால் தன்னிடம் கேள்வி கேட்கும் படியும் கூறினார். நாங்கள் முக்கியமான இடங்களைப் பார்க்க ஒரு நல்ல ரக்சியை ஒழுங்குப்பண்ணித் தரும்படி கேட்டோம்.



அவ்வாறே அவர் காலையில் ரக்சி வரும் நீங்கள் தயாராக இருங்கள் எனச் சில நிமிடங்களின் பின் கூறினார்.

இனிய பூனே நகர் பற்றிப் பார்ப்போம். இது பூனா என்றும் அழைக்கப்படுகிறது. இது மகாராஷ்டிர மாநிலத்தின் இரண்டாவது பெரிய நகரம் முதலாவதும் தலை நகரமாகவும் விளங்குவது பம்பாய் (மும்பாய்). மகாராஷ்டிரா என்றவுடன் எம்மில் பலருக்கு இங்கு ஆட்சி செய்த மன்னன் சிவாஜி நினைவுக்கு வரும். இதுபற்றி விபரமாகப் பின்னர் பார்ப்போம். 2011ஆம் ஆண்டுக் கணக்கின்படி ஏறக்குறைய 6.4 மில்லியன் பேர் இங்கு வாழ்கின்றனர். ஆனால் நாம் சென்றபோது இதற்கும் அரைவாசிப் பேரே வாழ்ந்திருப்பர் என நினைக்கிறேன். இது இம்மாகாணத்தில் கலாசார நகரமாகக் கருதப்படுகிறது. இங்கு மிகவும் பிரபலமான கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இருப்பதால் இது 'கிழக்கின் ஒக்ஸ்போட்' என அழைக்கப்படுகிறது. வெளிநாட்டு மாணவர்கள் பலர் இங்குவந்து படிக்கின்றனர். இலங்கை மாணவர்களும் இங்கு அந்நாட்களில் வந்து படித்தனர். இப்போது நிலை எப்படி உள்ளது என அறியேன்.

858ஆம் ஆண்டுச் செப்புத் தகட்டின்படி 9ஆம் நூற்றாண்டில் தற்போதைய பூனாவில், புனக்கா என்ற விவசாயக் குடியினர் வாழ்ந்ததாக அறியப்படுகிறது. இந்தப் பிரதேசத்தை இராட்டிரகூடர் அரசபரம்பரையினர் ஆண்டு வந்தனர். இவர்களின் முன்னோர்கள் இராட்டிரகூடர்கள் என்கின்ற பேரரசர்களிடமும் பிற்கால மேலைச் சாளுக்கிய பேரரசர்களிடமும் குறுநில மன்னர்களாக இருந்தனர். இவர்கள் நாசிக் முதல் தேவகிரி (இன்றைய தௌலதாபாத்) வரையில் அமைந்திருந்த செவுனா பகுதியை ஆட்சி செய்ததால் யாதவர்கள் செவுனர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இது தேவகிரியை ஆண்ட செவுன யாதவர்களின் ஒரு பகுதியாக 1327வரை இருந்து வந்தது. அஹமட் சுல்தான்கள் 17ஆம் நூற்றாண்டுவரை இப்பகுதியை ஆண்டு வந்தனர். அதன் பின் முகலாயர் இதனை தமது ஆட்சிக்கு உட்படுத்தினர். இவர்கள் 1599இல் இப்பகுதியை மலோஜி போசேல் என்பவருக்குக் கொடுத்திருந்தனர். இவரது பேரனே சிவாஜி மன்னன். இவரை மராத்தியப் பேரரசை நிறுவியவர். இவர் பூனேயிலுள்ள சிவ்நெறி என்ற இடத்தில் பிறந்தவர். 1680 முதல் 1705வரை இப்பகுதி முகலாயருக்கும் மராத்தியருக்குமிடையே பல தடவை கைமாறின. இங்கு செங்கோட்டை எனப்படும் லால் மகால் 1631இல் ஆரம்பிக்கப்பட்டு 1640இல் கட்டிமுடிக்கப்பட்டது. இங்குதான் சிவாஜி தனது இளமைக் காலத்தைக் கழித்தார். போன்சலே மராத்திய குலத்தவரான சாகாஜி போன்ஸ்லே மற்றும் ஜிஜாபாய் ஆகியோருக்கு ஆறு மகள்களும், சம்பாஜி மற்றும் சிவாஜி என இரண்டு மகன்களும் பிறந்தனர்.

சிவாஜிக்கு மூன்று வயது இருக்கையில் ஜிஜாபாயின் கணவரும், சிவாஜியின் தந்தையுமான சகாஜி போஸ்லே, துக்காபாய் என்பவரை 1630-இல் இரண்டாம் திருமணம் செய்துகொண்டு, இரண்டாம் மனைவி மற்றும் சம்பாஜியுடன் தனியாக வாழ்ந்தார். 1644இல் ஷாகாஜி, பூனேயில் தன் முதல் மனைவி ஜிஜாபாய் மற்றும் இளைய மகன் சிவாஜிக்கும் லால் மஹால் எனும் அரண்மனையைக் கட்டி குடியமர்த்தினார். இவரது தாயார் ஜிஜாபாய் கஸ்பா கணபதி ஆலயத்தைக் கட்டுமாறு பணித்தார். இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டு விநாயகர் முதன்மைத் தெய்வமாகக் கருதப்பட்டார். முகலாயருக்கும் மராத்தியருக்கும் 29 வருடமாகப் போர் நடைபெற்று 1701இல் அவுரங்கசீப்பிடமிருந்து பூனாவை மராத்தியர் கைப்பற்றினர்.

அடுத்த நாள் காலை அங்கிருந்த முக்கியமான இடங்களைப் பார்ப்பதற்குப் புறப்பட்டோம். செங்கோட்டை எனப்படும் லால் மகாலுக்குச் சென்றோம். இது மீளக் கட்டப்பட்ட ஒரு சிறிய அரண்மனை ஆகும். இது பூனே நகருக்கு மத்தியிலுள்ளது. ஆரம்பத்தில் 1630இல் சிவாஜியின் தகப்பனார் சாகாஜி பொசலே தனது மனைவி ஜிஜாபாய்க்காகக் கட்டிய லால் மகால் 17ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற பல போர்களின் காரணமாக அழிக்கப்பட்டது. நாம் சென்றபோது அங்கு பல இடிபாடுகளைக் காணக்கூடியதாக இருந்தது. அதுபற்றிய விபரங்கள் அங்குள்ள பலகையில் எழுதப்பட்டிருந்தன. அதன் பின்னர் அதற்கு அண்மையில் புதிய செங்கோட்டை 1984இல் ஆரம்பிக்கப்பட்டு 1988இல் கட்டிமுடிக்கப்பட்டது. பழைய செங்கோட்டை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. சிவாஜி அங்கு வாழ்ந்தது மட்டுமல்லாமல் சயிஷ்டா கான் என்ற மொகலாய மன்னனை இங்கு சிறை வைத்திருந்தபோது அவன் தப்பிக்க முயற்சித்ததைக் கண்டு அவனது விரல்களை வெட்டியதாக அறியப்படுகிறது. தற்போதைய செங்கோட்டையில் சிவாஜி மன்னனின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களைக் காட்டும் வர்ண ஓவியங்களும் சிலைகளும் வைக்கப்பட்டுள்ளன.

அங்கிருந்த விநாயகர் ஆலயம், பூங்கா, பூனே பல்கலைக்கழகம் ஆகிய இடங்களைச் சென்று பார்த்தோம். இப்பல்கலைக்கழகம் 1949இல் நிறுவப்பட்டது. தேசிய இரசாயன ஆய்வுகூடம் 1950இலும் தேசிய பாதுகாப்புக் கல்வி நிலையம் 1955இலும் நிறுவப்பட்டன. இங்கு பல தொழிற்சாலைகளும், டீசல் இந்திரங்கள், வாகன உற்பத்தி நிலையங்களும் உள்ளன. வர்த்தக நிலையங்களும் வெளிநாட்டு கம்பனிகளின் கிளைகளும் இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பென்ஸ், ஜெனரல் மோட்டோர்ஸ், ஜாகுவார், றெனோல்ட் (Renault) வோக்ஸ்வகன் ஆகியவற்றுடன் உள்நாட்டு நிறுவனங்களான, பஜாஜ், டாட்டா, மஹேந்திரா, கைனெற்றிக் (Kinetic) மோட்டோர்ஸ், போஸ் (PORSCHE) மோட்டோர்ஸ் ஆகிய நிறுவனங்களும் தமது கிளைகளை நிறுவியுள்ளன. எனவே பூனே இந்தியாவின் 'மோட்டார் நகரம்' என அழைக்கப்படுகிறது. இங்கு இதைத் தவிர ஜெர்மன் கம்பனிகள் கடந்த 60 ஆண்டுகளாக 225 கிளைகளை நிறுவியுள்ளன. மேலும் சீறம் (Bharat Serums and Vaccine Limited) இந்திய நிறுவனம் நோய்த் தடுப்பு மருந்துகள் (Vaccines) தயாரிப்பதில் உல

(தொடர்ச்சி 35ஆம் பக்கம்...)

யோகா சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல்
சுபமுகூர்த்தம் கணித்தல்
பலன் பார்த்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# திகிலும்...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

மலைச்சிகரம். இதற்கு செல்வது உங்களுக்கு சவாலாக இருக்கும். ஏனெனில் கடல் மட்டத்தில் இருந்து 8,842 அடி உயரத்தில் இருக்கிறது. இந்த அரை குவிமாடம் சிகரத்திற்கு செல்லும்போது நீங்கள் சிறிய தவறு செய்தாலும் உங்கள் உடலின் ஒரு பாகம் கூட யாருக்கும் கிடைக்காது.

இந்த இடத்திற்கு நீங்கள் வாகனத்தில் செல்லத் தரையில் இருந்து 10 முதல் 14 மணி நேரம் ஆகும். ஆனால் செல்லும் போது ஒவ்வொரு நிமிடமும் அதி திகில் லாகவே இருக்கும். செல்லும் வழியில் ஏராளமான அருவிகள், அழகான இடங்களை நீங்கள் கண்டுகளிக்கலாம். ஆனால் மோசமான வானிலை நிலவும் போது அரை குவிமாடத்திற்கு செல்வதை தவிர்க்க வேண்டும். நீங்கள் மலையில் செல்லும் பகுதிகளில் கறுப்புக் கரடிகளை அதிக அளவில் பார்க்கலாம்.

கடைசி வளைந்த முதுகுப் பகுதியை ஏற உங்களுக்கு அனுமதி தேவை. நடைபாதை கேபிள் பிரிவை இரண்டு நாட்கள் முன் கூட்டியே அணுக வேண்டும். நாள் ஒன்றுக்கு 350 பேருக்கு மேற்படாது அனுமதி வழங்கப்படுகின்றன. மார்ச் மாத இறுதிக்குள் நடைபெறும் லாட்டரி மூலம் பெரும்பாலான அனுமதிகள் வழங்கப்படுகின்றன, கூடுதல் 50 அல்லது அதற்கும் அதிகமான அனுமதிகள் சில தினங்களில் கொடுக்கப்படுகின்றன.

**மரண சாலை** (Death Road): உலகின் மிக ஆபத்தான தெருக்கள் பல நாடுகளில் இருக்கின்றன, இருந்தும் மத்திய தென் அமெரிக்காவிலுள்ள பொலிவியா நாட்டில் 'தி யுங்கஸ் தெரு' (The Yungas Road) இயற்கை அழகு நிறைந்த யுங்கஸ் மலைப்பிரதேசத்தில் அமைந்துள்ளதாலும் பலரை கவருவதாலும் புகழ் பெற்றது.

இந்த மரண தெருவின் நீளம் 61 கிலோ மீற்றர். இந்த இடம் மோட்டார் பைசிக்கிள் ஓட்டிகளுக்குப் பிரியமான இடம். 11,800 மீற்றர் உயரம்வரை உங்கள் பயணம் இருக்கும். செல்லும் தெருகள் பனியால் கூட மூடப்பட்டுக் காணப்படும் என்பதால் எதிரில் என்ன உள்ளது என்பதே தெரியாது.

மலைப்பகுதியில் உள்ள தெரு, பார்த்தாலே உயிர் போய்விடும் அளவுக்கு ஆபத்தான மலைப்பாதை. ஆனால், சாகச விரும்பிகள் பலர் அந்த 'மரண சாலைக்கு' சென்று கொண்டுதான் இருக்கின்றனர். ஆண்டுக்கு 200 முதல் 300 பேர்வரை இந்த சாலையில் உயிரிழக்கின்றனர். ஆனாலும், வருடந் தோறும் அந்தப் பகுதியில் மிதிவண்டிப் போட்டி மற்றும் 'ஸ்கை ரேஸ்' எனப்படும் ஓட்டப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதனால் பயணம் முழுமையும் திகிலாகவே இருக்கும். இந்த மலையில் பாம்புகள், கிளிகள், குரங்குகள் உள்பட பல்வேறு வனவிலங்குகள் அதிக அளவில் வாழும் வனப்பகுதியாகும். இவ்வளவு ஆபத்தான பயணத்தை உலகம் முழுவதிலும் இருந்து ஏராளமானோர் மேற்கொள்ள விரும்புகின்றனர்.

பொலிவியாவில் இயற்கை அதிசயங்கள் ஏராளம். அவற்றில் மிக வித்தியாசமான இந்தப் படிவங்கள் ஏன், எதற்கு இங்கு வந்தன என்பது இன்னும் ஆராய்ச்சிக்குரிய விடயமே!

**இந்தோனேசியாவின் காவா இஜென் எரிமலை:** இஜென் பார்க், இந்தோனேசியாவின் கிழக்கு ஜாவாவின் பன்யூவொங்கி மற்றும் பண்டோவோஸோ மாவட்டத்திற்கு இடையில் அமைந்துள்ளது. காவா இஜென் (Kawah Ijen) இயற்கை பாதுகாக்கப்படும் பகுதி. இஜென் பள்ள ஏரி கிழக்கு ஜாவாவின் எரிமலைகளின் வரிசையில் ஒன்றான மவுண்ட் இஜெனின் உச்சியில் அமைந்துள்ளது.










அதன் கவர்ச்சியான நீலம் பச்சை நிற நீர் கொண்ட இந்த அழகான சூடான ஏரி விருந்தினரை வரவேற்கிறது, ஆனால் ஏரி அரிக்கும் அமிலதன்மை கொண்டதனால் ஆபத்தானதும் உலகின் மிகப் பெரிய அமில ஏரியுமாகும். கவா இஜென் பள்ளம் சுமார் 200 மீட்டர் ஆழம் கொண்டது. இது உடைகள் மற்றும் மனித சதைகளைக் கரைத்துவிடும். கவா இஜென் ஏரியினைச் சுற்றி நடைப்பயணம் செய்வதற்கு சிறந்த நேரம் காலை 4 அல்லது 5 மணியாகும். சில ஆர்வமுள்ள நடைப்பயணிகள் மற்றும் புகைப்படக்காரர்கள் முன்பே ஆரம்பிக்கின்றனர். மலைப் பாறைகள் வழியாக ஓர் அழகான சூரிய உதயத்தை மலைகளுக் கூடாக பார்க்கவும் ஏரி மேலாக எழுவதை பார்க்கவும் நேரத்திற்கு செல்கின்றனர்.

கந்தகப்படிவுகளை (சல்பர்) உள்ளூர் வாசிகள் வெட்டி எடுத்துக் கூடைகளில் கொண்டு சென்று பணமாக்குவதை காண்பீர்கள். கந்தகத்தை ஹைடெக் மின் உற்பத்தி நிலையங்களில் பாவித்து பில்லியன் கணக்கான டொலர் முதலீட்டை ஈர்க்கும் திட்டத்தின்படி, சுத்தமானதும் புவிவெப்பமாதை தடுத்தல் முக்கிய ஆதாரமாக இருக்கும் என நம்புகின்றனர். அடிக்கடி பூகம்பம் வரக்கூடிய பகுதியாகும். இதன் காரணமாக உள்ளூர் மக்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். அடிக்கடி வெள்ளம், நிலச் சரிவுகள் ஏற்படும். சுனாமி ஆபத்தும் அதிகம் உள்ள பகுதியுமாகும்.

**மனிதரைக் கொல்லும் மர்ம தீவு, கென்யா:** திகிலூட்டும் உண்மை கண்ணுக்கு எட்டிய தூரம்வரை கடல் போலப் பரந்து விரிந்த ஏரி. ஆங்காங்கே மலைகள். பசுமையாகக் குட்டி குட்டியாக தீவுகள். சுற்றுலாப் பயணிகளைக் கவரும் சுவாரஸ்யம் ஏராளம் என்றாலும், அங்கு போகும் மனிதர் திடீரென மாயமாகி விடுகின்றனர். இதை அப்பகுதி மக்கள், 'திரும்ப முடியா தீவு' என்றே அழைக்கின்றனர்.

இந்த மர்ம தீவு பற்றிய விடயங்கள் திகிலூட்டுகின்றன. உலகிலேயே மிகப் பெரிய பாலைவனக் கடல் என்று பெயர் பெற்ற துர்கானா ஏரி கென்யாவில் உள்ளது. ருடால்ப் ஏரி என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்ட இந்த ஏரிக்கு, பல்வேறு நதிகளில் இருந்து நீர் வருகிறது. இங்கு நிலவும் கடும் வெப்பத்தால், ஒரு பகுதி ஆவியாகிறது.

மீதமுள்ள நீர், அதிக உப்புத் தன்மையுடன் காணப்படுகிறது. கென்யாவுக்கு வரும் சுற்றுலா பயணிகளை மிகவும் கவர்ந்த இடங்களில் ஒன்றாக இந்த பாலைவனக் கடல் திகழ்கிறது. குட்டி குட்டி தீவுகளும், பழமை மாறாத பழங்குடியின மக்களின் வாழ்க்கை முறையும் கவர்ந்திழுக்கிறது. இந்தக் கவர்ச்சியுடன் நம்மை உறைய வைக்கும் அதிர்ச்சிகளும் உள்ளன.

இங்குள்ள குட்டி தீவுகளில் ஒன்று என்வைட்டினெட் தீவு (Envaitenet island). இங்கு வாழும் பழங்குடியின மக்கள் பேசும் மொழியில் 'என்வைட்டினெட்' சொல்லின் அர்த்தம் 'திரும்ப வராது' என்பதாகும். என்வைட்டினெட் தீவுக்குள் செல்வோர் யாரும் திரும்பி வருவது கிடையாதாம். அறிவியல் ஆராய்ச்சிகளுக்கே சவால் விடும் வகையில் இந்தத் தீவு உள்ளது.

முன்பொரு காலத்தில் இதில் மனிதர்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தனர் என்றும் மீன் பிடிப்பது, வேட்டையாடுவது அவர்களின் தொழிலாக இருந்தது என்றும் பக்கத்துத் தீவுகளை சேர்ந்தோர் சொல்கின்றனர். வியாபாரத்துக்காக பக்கத்து தீவுகளுக்கு வருவார்களாம். ஆனால் ஒரு காலத்துக்குப் பிறகு தீவில் இருந்து வெளியே வரும் மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக குறையத் தொடங்கியுள்ளனர். ஒரு கட்டத்தில் யாரும் வராமல் போனதால் பக்கத்து தீவுகளில் இருந்தோர் சந்தேகமடைந்து அந்தத் தீவுக்கு சென்றுள்ளனர். ஆனால் அப்படி சென்றவர்களும் திரும்பாமல் போகவே மர்ம தீவாக மாறியது என்வைட்டினெட் தீவு.

1935ஆம் ஆண்டு ஆங்கிலேய விஞ்ஞானி விவியன் பஸ் என்பவர் தன் குழுவினரோடு இந்தத் தீவு பற்றி ஆய்வுகள் மேற்கொண்டார். என்வைட்டினெட் குட்டித் தீவுக்கு இளம் விஞ்ஞானிகள் மார்டின் ஷெப்லிஸ், பில் டேசன் ஆகியோரை அனுப்பி வைத்தார் விவியன். நாட்கள்தான் போனதே தவிர விஞ்ஞானிகள் திரும்பியபாடில்லை.

இதனால் அதிர்ச்சியடைந்த ஆராய்ச்சியாளர்கள் தூரத்தில் இருந்தே ஆய்வுகளை செய்தனர். ஹெலிகாப்டரில் பறந்தபடியே வேவு பார்த்தனர். எந்தத் தடயமும் கிடைக்கவில்லை. பழங்குடியினர் குடிசைகள் அப்படியே இருந்தன. அழுகிய மீன்கள் சிதறிக் கிடந்தன. மனித நடமாட்டம் மட்டும் இல்லவே இல்லை.

இதையடுத்து பக்கத்து தீவுகளில் வாழ்ந்தோரிடம் தகவல்கள் சேகரித்தார். 'அந்தத் தீவில் பிரமாண்ட ஒளி ஒன்று வரும். அப்போது இடத்தில் யார் இருந்தாலும் காணாமல் போய் விடுவர். அப்படித்தான் அங்கிருந்தோர் காணாமல் போயிருப்பர் என்று பக்கத்து தீவுவாசிகள் கூறினர். பிரமாண்ட ஒளி வெள்ளம் எப்படி வருகிறது, அது மனிதரை எரித்து விடுகிறதா, அப்படி என்றால் எலும்புகளாவது மிஞ்சி இருக்க வேண்டுமே என்ற கேள்விகளுக்கு வியினுக்கு விடை கிடைக்கவில்லை.

இந்த தீவுக்கும், வேற்றுக் கிரகவாசிகளுக்கும் தொடர்பு உண்டா என்ற கோணத்திலும் ஆராய்ச்சிகள் சூடு பிடித்துள்ளது. இங்குள்ள மக்களை வேற்று கிரகவாசிகள் கடத்தி செல்கின்றனர் என்றும், கண்ணுக்குத் தெரியாத சக்கரம் ஒன்று சுழல்கிறது என்றும், மக்கள் காற்றில் கரைகின்றனர் என்றும் கூறப்படுகிறது. ஆனால் மர்ம முடிச்சுகள் எதுவும் இன்னும் அவிழவில்லை.

**கெய்மாதா கிராண்டி தீவு, பிரேசில்:** அட்லாண்டிக் கடலில், பிரேசிலின் கரையில் உள்ள தீவுதான் கெய்மாதா கிராண்டி தீவு (Ilha da Queimada Grande -Snake Island). பாம்பு தீவு என்று அழைக்கப்படும் இந்தத் தீவு, ஒரு மழைக்காடு (rainforest). இந்தத் தீவு முழுவதுமாக கொடூரமான விஷம் வாய்ந்த பாம்புகளால் நிரம்பியுள்ளது. மிதமான வெப்பநிலை உள்ள இந்தத் தீவிலும் ஒரு காலத்தில் மக்கள் வாழ்ந்து வந்தனர். ஆனால், திரும்பும் இடமெல்லாம் கொடிய விஷ பாம்புகள் திடீரென சூழ்ந்தவுடன் மக்கள் பயந்து அத்தீவை விட்டு வெளியேறிவிட்டனர்.

இன்று அந்தத் தீவுக்கு ஆய்வாளர்கள் மட்டுமே சிறப்பு அனுமதியோடு உள்ளே நுழைய அனுமதிக்கப்படுகின்றனர். இந்தத் தீவு, மனிதரை பாம்புகளிடம் இருந்து காப்பாற்றுவதற்கு அல்ல, பாம்புகளை மனிதரிடம் இருந்து காப்பாற்றுவதற்கே. இந்தத் தீவில் எது பாம்பு எது மரக்கிளை என்று தெரிவதற்குள் உங்களைப் பரலோகத்திற்கு பாம்புகள் அனுப்பி விடும். இந்தப் பூமியில் உள்ள அனைத்து வகை விஷப் பாம்புகளையும் இங்கு காணலாம்.

பாம்பு என்றால் படையும் நடுங்கும்! அப்படி இருக்க, பாம்புகள் மட்டுமே உள்ள தீவிற்கு சென்றால் நீங்கள் எப்படி உணருவீர்கள்? ஒரு பக்கம் இங்குள்ள பாம்புகளின் விஷத்தால் இறந்து விடுவோம் என்றால், மறுபக்கம், அப்பாம்புகளின் அழகான தோற்றத்தை ரசித்துக் கொண்டே அவற்றின் வாயில் விழுந்து விடுவோம்!. தொழில்முறை

(தொடர்ச்சி 42ஆம் பக்கம்...)

## BASEMENT FOR RENT

**MARKHAM & GOLDEN AVENUE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, Parking, laundry, internet. Close to all facilities. Avail. immediately.
**647.745.4416 / 647.271.6865**

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC, school. Avail. immediately.
**416.803.8798/ 416.768.3444**

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. 1 Parking, Couple or small family or students preferred. Avail. immediately.
**Please Call: 647.627.1975**

**MEADOWVALE & SHEPPARD**
1 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, Laundry. Close to all facilities Avail. March 01, 2020.
**647-999-5420/647-654-8468**

**MARKHAM & 14th AVENUE**
3 bedroom & 2 full washroom bsmt for rent. Sep. entrance. Sep. laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.296.7932**

**BELLAMY & LAWRENCE**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking, laundry. Single Student only. Close to all facilities. Avail. immediately.
**647.920.3019 / 647.781.3019**

**MIDDLEFIELD & FINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, laundry. Family or Students preferred. Close to all facilities. Avail. immediately.
**Call: 416.609.9111 after 4:00pm**

**MARKHAM & 16th AVENUE.**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, Parking. Close to all facilities. Avail. March 01, 2020
**416.201.1222 / 647.261.0216**

**BRIMLEY & ELLESMERE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, laundry. Single or couple preferred. Close to all facilities. Avail. March 01, 2020
தொடர்புகளுக்கு: **647.649.9780**

**MARKHAM & STEELES**
1 Bedrooms bsmt for rent. Laundry, internet. Single or couple preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.303.9598**

**16TH AVENUE & 9TH LINE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking, Laundry. Rent+utilities. Close to all facilities. Avail. March 01, 2020.
**416.618.3660 / 647.367.0220**

**SCARB. GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to facilities. Avail. March 01, 2020.
தொடர்புகளுக்கு: **416.451.0055**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Single or couple preferred. Close to facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.822.5949**

**MORNINGSIDE & NIGHTSTAR**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking, laundry. Close to facilities. Avail. immediately.
**647.622.3182 / 416.335.9883**

**BIRCHMOUNT & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Rent+utilities. TTC at door step. Avail. March 01, 2020.
**416.759.9899 / 416.275.7764**

**BELLAMY ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking, laundry. Close to mall, school, TTC. Family preferred. Avail. immediately.
**647.806.5987 / 647.710.8479**

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.299.4904 / 416.912.1572**

**NEILSON & FINCH**
1 bedroom bsmt for rent. Parking, laundry. Hindu female or couple preferred. Close to all facilities. Avail. Immediately.
**416. 990. 9514 / 647. 468. 8403**

**KENNEDY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, Parking. Single preferred. Close to all facilities. Avail. immediately.
**Call 416.759.9859 After 4:00pm**

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. No parking. Couple preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647. 701.6617**

**MORNINGSIDE & OLD FINCH**
2 bedroom bsmt for rent. Sep. entrance, laundry, utilities. Female preferred. TTC at door step. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.471.6815**

**NEILSON & FINCH**
2 Bedrooms bsmt for rent . Sep. entrance, parking. Single or couple preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.303.8801**

**9TH LINE & 16TH AVENUE**
2 Bedroom newly renovated bsmt for rent. Sep. entrance, Parking, laundry. 5 mints to transit, schools. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647. 395.5914**

**HWY 7 & NINTH LINE ( MARKHAM )**
2 bedroom new bsmt for rent $975 / 1 Room for rent $550. Parking. Female preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.505.1131**

## ROOM FOR RENT

**MARKHAM & 16TH AVENUE**
1 Rooms for rent . Close to Mall & all facilities. Single preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.444.4712**

**MARKHAM & DENISON**
1Room for rent in a condo. Share with 2 others. Parking can be rented. Wifi is available. Prefers student or singles.
தொடர்புகளுக்கு: **647-677-9006.**

**STAINES & STEELES**
1 Large room for rent. Single female students preferred (3 people can share). Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.618.9107**

**NEILSON & TAPSCOTT**
1 Room for rent in a 2 bedroom condo. Single female preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.771.3054**

**MARKHAM & LAWRENCE**
1 bedroom available in a 2 room bsmt. Sep. entrance. laundry. Single preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.917.0487**

**MIDDLEFIELD & FINCH**
1 Room + washroom for rent in a condo. No parking. Single female preferred. Close to all facilities. Avail. March 01, 2020
தொடர்புகளுக்கு: **416.953.2597**

**MORNINGSIDE & LAWRENCE**
Room for rent. Sep. washroom. Internet. Ladies only. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.852.8264**

**WARDEN & FINCH**
1 Room for rent in a condo. Internet. female student only. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.983.7270**

**CHURCH & ROSSLAND**
Rooms for rent in main floor. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.939.9353**

**SCAR.GOLF CLUB & LAWRENCE**
Room for rent in a bsmt. Laundry, Close to TTC, mall, bank, school. Avail. immediately.
**416.454.9986 / 416.219.4936**

**MCCOWAN & LAWRENCE**
1 Room for rent in a basement. Sep. entrance. No parking. Couple or working lady preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.826.3635**

**ORTON PARK & LAWRENCE**
1 Bedroom for rent. Parking, laundry. Male preferred. No smoking & No drinking. Avail. immediately.
**647.707.0457 / 647.857.9536**

## ROOM FOR RENT

**BRIMLEY & EGLINTON**
1 Room for rent. Laundry, internet. No smoke. Close to all facilities. Avail. immediately.
**416.294.0193 / 416.892.7762**

## HOUSE FOR RENT

**BRIMLEY & LAWRENCE**
3 Bedroom house for rent. Couple or family preferred. Close to all facilities. Avail. immediately.
**647.709.3494 / 416.694.3494**

**WOODRUFF & FALLOWFIELD (OTTAWA)**
3 Bedroom house for rent. Finished basement. 3 parking. Rent+utilities. Close to all facilities. Avail. Immediately.
**647.261.0216 / 416.201.1222**

**TAPSCOTT & FINCH**
4 Bedroom house (Main Level) for rent. Close to all facilities. Avail. March 01, 2020
தொடர்புகளுக்கு: **289.608.9360**

**MCCOWAN & LAWRENCE**
3 Bedroom house (Main floor) for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.678.2599**

**MIDLAND & LAWRENCE**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.417.9027**

## BASEMENT FOR RENT

**BELLAMY & ELLESMERE**
3 bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to bank, bus, mall. Avail. immediately.
**437.239.4596 / 647.920.2185**

## BASEMENT FOR RENT

சிந்தனையை நிலைநிறுத்திக்கொண்டார். தான் அறிந்த யோகப் பயிற்சிகளிலும் ஈடுபடத் தொடங்கினார். இப்படியான நாட்களில் இவரது நிலை கண்டு மனம்வருந்திய இவரது பெரியதாயாராகிய ஜானகி அம்மா இவரைத் தன்னுடன் சென்னைக்கு அழைத்துச் சென்று தனது அன்பான பராமரிப்பில் வைத்திருந்து இவருக்குத் தையல் தொழில் கற்றுக் கொடுத்தார். அன்று முதல் ஐயா அவர்கள் தையல் தொழில் செய்தவாறு ஞானமார்க்கத்தில் தனது முழுக்கவனத்தினையும் செலுத்தினார். அந்நாளில் வாழ்ந்த கொல்லிமலைச் சித்தரிடம் இருந்து ஞான உபதேசம் பெற்று ஞானத் தேடலில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தினார். அத்துடன் இன்னும் சில சித்தர்களிடமும் உபதேசங்கள் பெற்றுப் பயிற்சியினை முறைப்படி பின்பற்றி ஞானத் தேடலில் முழுமை அடைந்து பிறருக்கும் ஞான உபதேசம் கொடுக்கும் ஆற்றலும் பெற்றார். இக்காலக்கடத்தில் இவரது பெரியதாயாராகிய ஜானகி அம்மாளின் வேண்டுகோளுக்கு இணங்க ஆன்மீகப் பாதைக்கு இல்லறம் ஒரு தடையல்ல என்னும் கருத்துடன் 1974ஆம் ஆண்டு வசந்தா என்ற அம்மையாரை மணமுடித்து இல்லற வாழ்கையினை ஆரம்பித்து இரு ஆண்கள், ஒரு பெண் என மூன்று பிள்ளைகளையும் பெற்றெடுத்து இன்றுவரை இல்லற வாழ்கையினையும் வாழ்ந்துகொண்டு ஞானமார்க்கத்தினையும் போதித்து வருகிறார்.

இல்லறத்தில் வாழ்ந்துகொண்டே ஆன்மீகத்தில் நிலைத்திரு அதாவது இறைவனைத் தேடு என்பது ஐயாவினது அறிவுரையாகும்.

மணமுடித்து இல்லற வாழ்க்கையை சிறப்பாக வாழ்ந்துகொண்டு ஞான மார்க்கத்தினைக் கடைப்பிடிப்பதென்பது, புளியம் பழம் ஆரம்பத்தில் பூவாகி, பிஞ்சாகி, காயாகி வரும்போது ஓடும் சதையும் விதையும் ஒன்றுடன் ஒன்று ஒட்டி இருக்கும். அது கனியாகும்போது ஓடும் சதையும் விதையும் தனித்தனி ஆகிவிடும், அது போல இல்லறத்தில் வாழ்ந்துகொண்டு ஞான மார்க்கத்தில் உன் எண்ணங்களை, இறைவனைப்பற்றிய தேடலில் நிலைத்திரு என்று அறிவுறுத்துகிறார் பிரம்மஸ்ரீ நித்தியானந்தம் ஐயா அவர்கள்.

ஆரம்ப காலத்தில் ஐயா தனது இல்லத்தில் வைத்தே தனது நண்பர்களுக்கு உபதேசமும் அறிவுரையும் கொடுக்கத் தொடங்கினார். 45 ஆண்டுகளுக்கும் மேலாக எந்த விதமான விளம்பரங்களோ, பேட்டிகளோ அல்லது ஆடம்பரங்களோ இல்லாது உபதேசம் கொடுத்துப் பல சீடர்களை ஞான மார்க்கத்திற்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறார். செவிவழியாக ஐயாவின் கருத்துக்களை அறிந்தவர்களே அவரிடம் சென்று உபதேசமும் அறிவுரையும் கேட்டு வருகின்றனர். இவ்வாறு ஐயாவிடம் பல ஆயிரக்கணக்கான சீடர்கள் ஞான உபதேசம் பெற்றிருக்கின்றனர். இவ்வாறு ஐயாவிடம் உபதேசம் பெற்றவர்களது வேண்டுகோளுக்கு இணங்க 2009ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டத்திலே போலிவாக்கம் என்ற அழகான, அமைதியான கிராமத்திலே 'பிரம்ம சூத்திர குழு இராஜயோக பாடசாலை' என்ற பெயரில் ஆச்சிரமமும் பின்னர் 2016ஆம் ஆண்டுமுதல் அதனுடன் சேர்ந்த சண்முகநாயகன் என்ற பெயரில் முருகன் ஆலயமும் அமைத்து, அங்கிருந்து ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் சீடர்களுக்கு உபதேசம் கொடுத்து வருகிறார். ஐயா அவர்கள் சீடர்களுக்கு வழங்கும் அறிவுரைகளையும், அவர்களது சந்தேகங்களுக்கு, கேள்விகளுக்கு வழங்கும் பதில்களையும், இவரது சீடர்கள் அவரது அனுமதியுடன் காணொளிகளாக வெளியிட்டு வருவதனால் கடந்த ஐந்து வருடங்களாகவே பிரம்மஸ்ரீ நித்தியானந்தம் ஐயா அவர்களை இந்தியா உட்பட உலகின் பல நாடுகளில் வாழ்ந்துவரும் தமிழர், ஆன்மீகத்தை நாடுபவர்களால் அறியக்கூடியதாக உள்ளது. (அடுத்த இதழில் தொடரும்.)

You tube மூலமாகப் பின்வரும் முகவரியில் பிரம்மஸ்ரீ நித்தியானந்தம் ஐயா அவர்களின் கேள்வி பதில் நிகழ்வைக் கண்டு, கேட்டு அறிந்துகொள்ளலாம்.

http://www.bhramasuthrakulu.com/photos_videos.html
https://www.youtube.com/results?search_query=bramasuthrakulu+srishanmuganayagan
ஆச்சிரமம்: 91.97.102.11469 (India) (WhatsApp).

"அன்பே சிவம்"

கு. சிவகுமாரன்
(416) 859-4977 (Canada) (WhatsApp)







## மேலதிக...

36ஆம் பக்கத்தொடர்ச்சி


விளக்கங்கள் உள்ளது. ஒரே ஒரு காரணத்திற்காகத்தான் அது இன்னும் இருந்து வருகிறது. காரணம் என்னவென்றால் மக்கள் அதை உணரவில்லை. ஒருமுறை அதை நீங்கள் உணர்ந்து கொண்டால் உங்களுக்கு ஏதாவது விளக்கம் தேவையா? தேவையில்லை.

'உங்களுக்குள்ளே போவதற்கான சாத்தியம் உங்களுக்குக் கிடைக்கும்போது, புரிந்து கொள்வதற்கான சாத்தியம் உங்களுக்குக் கிடைக்கும்போது, உணர்வதற்கான சாத்தியம் உங்களுக்குக் கிடைக்கும் போது, அப்போது உண்மையாகவே நீங்கள் யார் என்பதை உணர்ந்து கொள்வது அதன் இயல்பினாலேயே எளிமையானதாகும். அது இயற்கையாகவே பூரண மானது, இயல்பினாலேயே அது உண்மை யானது, இயல்பினாலேயே அது முடிவு இல்லாதது, அத்துடன் அதன் இயல்பினால் அது ஆனந்தத்தைக் கொண்டுவருகிறது. எந்தவொரு விளக்கமும் தேவையில்லை.

தன்னைத்தானே அறியும் அறிவானது விளக்கங்களைப் பற்றியதல்ல. அது எளிமையானது. அதை உணருங்கள். உங்கள் உள்ளேபோய் அதை உணருங்கள். நீங்கள் உங்கள் உள்ளே திரும்பும் போது - நல்ல நேரமோ கெட்ட நேரமோ எதுவாயினும் அது உங்களை ஆனந்தத்தால் நிரப்பும். அது உங்களைத் தெளிவால் நிரப்பும். அது உங்களை எளிமையால் நிரப்பும். உண்மையிலேயே எளியைமான தல்லவா? இதுதான் அதன் இயல்பு. நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் அதுதான்.

# செம்மொழிக்குச் செய்ய வேண்டிய கடமைகள்

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

**- துறையூரான் -**

'செம்மொழி என்றால் என்ன?' என்று ஒரு பிரபல பத்திரிகை கேள்வி பதிலில் 'சிவப்பான நம் பம்பாய் நடிகைகள் பேசும் தமிழ்' என்று கிண்டலடித்திருந்தது'. 'இவ்வளவு பேசுகிறாயே'! உனக்கு செம்மொழி என்றால் என்னவென்று சொல்லத் தெரியுமா?' என்று நியாயமான ஒரு கேள்வியைக் கேட்கலாம்.

அதனால், என் கருத்தில் செம்மொழி என்றால் என்ன என்பதை முதலில் அறிவித்து விடுகிறேன். ஆங்கிலத்தில் 'கிளாசிக்கல்' என்பதற்கு ஈடான சொல்லாகச் செவ்வியல் பண்பைச் சொல்கிறார்கள். தமிழின் செம்மையானது நிறம் சார்ந்ததல்ல. குணம் சார்ந்தது. செம்மை என்பதற்கு முதிர்ச்சி, பக்குவம் என்பது அகராதிப் பொருள். செந்தமிழ் என்பதிலும் இந்த வழக்குத்தான். ஒரு மொழி ஓர் அளவுக்கு பக்குவமும் முதிர்ச்சியும் அடைய முதல் தேவை காலம் ஆகும். நேற்று வந்த ஜாவா மொழியை செம்மொழி என்று சொல்ல முடியாது. அந்த அளவில் தமிழுக்குப் பழமையான மொழி; மிகப் பழமையான மொழி என்ற சான்று உள்ளது. மத்திய அரசு, 'ஆயிரம் வருடம்' என்று சொன்னாலும், இரண்டாயிரம் ஆண்டு காலமாக அதற்கு இலக்கியம் இருப்பதை மேல் நாட்டு அறிஞர்கள் அறிவார்கள். எனவே முதிர்ச்சி அடையப் போதிய காலம் கடந்துள்ள மொழி, தமிழ் மொழியே. முதிர்ச்சி மட்டும் போதாது, இலக்கியம் வேண்டும். இலக்கண முதிர்ச்சி விதிகள் என்று மொழியியலாளர்கள் அடையாளம் காட்டும் தகுதிகள் வேண்டும். ஓர் உதாரணம் சொல்கிறேன். தமிழில் ஆண்பால், பெண்பால் பகுப்பில் குழப்பமே இல்லை. ஆண், ஆண்தான். பெண், பெண்தான். மற்ற மொழிகளில் எல்லாம் அஃறிணை இல்லாததால் ஆண், பெண் பாகுபாடு தன்னிச் சையாக ஓசை சார்ந்தே உள்ளது. இதனால் கால் விரல்கள் ஒரு பாலாகவும், கை விரல் கள் மற்றொரு பாலாகவும் கருதப்படும் வினோதங்கள் மொழியில் ஏற்படுகின்றன. இவ்வகையிலான நிலை தமிழில் இல்லை. இது இலக்கணத்தின் முதிர்ச்சிக்கு ஓர் உதா ரணம். இரண்டாவது தகுதி, தொடர்ச்சி. கிரேக்கம், இலத்தின், சமஸ்கிருதம் போன்ற வையும் செம்மொழியாகக் கருதப்படுகின் றன.

கிரேக்க மாகாவியமான இலியட், நவீன கிரேக்கர்களுக்கு இப்போதும் சுத்த மாகப் புரியாது. இலத்தீனும், சமஸ்கிருதமும் மொழியியலாளர்களுக்கு மட்டும் புரியும். இம்மொழிகள் வழக்கொழிந்து அன்றாடத் தன்மையை இழந்து விட்டன. தமிழில் அப்படியில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதிய சங்கப் பாடல்கள் இப்பொழுது படித்தாலும் ஏறக்குறையப் புரிகிறது.



*நிலத்தினும் பெரியே வானினும் உயர்தன்று*
*நீரினும் ஆரளவு இன்றே*
*சாரல்*
*கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு*
*பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே*

இந்தப் புறநானூற்றுப் பாடலில் ஓரிரு வார்த்தைகளை நவீனமயப்படுத்தி விட்டால் இன்றைய தமிழாகிவிடும். மற்றபடி இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்து முடிந்தாலும், ஓரளவுக்கு புரிந்துகொள்ளக்கூடிய மரபுத் தொடர்ச்சி தமிழுக்கு உள்ளது.

இன்றைய தமிழ், சங்ககாலத் தமிழ் அல்ல. தமிழ் மொழி தன் மரபுத்தொடர்ச்சியைக் கை விடாமல் மாற்றிக் கொண்டும் வந்திருக்கிறது. மெல்ல மெல்ல தன்னை எளிதாக்கிக் கொண்டு வந்திருக்கிறது. மேகத்துக்கு இருபத்தேழு சொற்கள் இருந்தன. இப்போது மேகம், முகில் இரண்டுதான் மிச்சமுள்ளது. கொண்மூ, எழினி எல்லாம் கைவிடப்பட்டுள்ளன. அலங்கல், தெரியல், பிணையல், தார், கண்ணி தொடையல் எல்லாம் வழக்கொழிந்து போய், மலர்மாலை மட்டும் மிச்சமாகவுள்ளது. புதிய வார்த்தைகளையும் தேவைப்பட்ட போது சற்றுத் தயக்கத்துடன் தமிழ் எடுத்துக் கொள்கிறது. இதற்கு இணையம், மென்பொருள், சைக்கிள், ரயில் போன்ற வார்த்தைகள் உதாரணமாகும்.
தமிழ் மொழியின் தொன்மை குறித்து அதிகம் சந்தேகத்துக்கு இடமின்றி, தமிழ்ச் சங்க நூல்களிலேயே இருக்கும் உள்சாட்சியங்கள் (internal evidences) தெளிவாகத் தெரிவிக் கின்றன. இதனால் தமிழ்மொழி கி.மு. 2ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரை பண்பட்ட இலக்கிய நூல்கள் கொண்டதாக உள்ளது என்று தமிழ் மொழி பற்றி உணர்ச்சிவசப்படாத மேல்நாட்டு ஆராய்ச்சியாளர்களே கருதும் அளவுக்குச் சான்றுகள் உள்ளன. இதனால் இதன் பழமையைப் பற்றிக் கருத்து வேறுபாடு எதுவும் எழுதுவற்கு இடம் இல்லை.


தமிழ் மொழியைப்பற்றி பெரிப்ளூஸ், டாலமி, பிளினி போன்றோரும் தம் குறிப்புகளில் சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் விட, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழன் இன்றைய தமிழனோடு பேசினால் ஓரளவு புரியும். உலகின் மற்ற செம்மொழிகளுக்கு இந்தத் தகுதி இல்லை என்பதால் தமிழைச் சிறந்த செம்மொழி என்பேன்.

ஓர் எழுத்தாளன் என்கிற தகுதியில் தமிழுக்குச் செய்ய வேண்டிய காரியங்கள் சில உள்ளன.

1. செம்மொழியின் அத்தனை இலக்கியங்களையும் வகைப்படுத்தி, அவற்றுக்கு ஒரு மித்த எண் அடையாளம் கொடுத்து, பாகுபடுத்தி அனைத்தையும் ஒரு தகவல் தளத்தில் கிடைக்குமாறு செய்யவேண்டும். இந்தத் தகவல் தளத்தில் தமிழ் இலக்கியங்களைக் காலம், பொருள், பாவகை எனப் பல தலைப்புகளின்கீழ் - 'ரிலேஷனல்' தகவல் தளத்தில் அமைத்து, அதில் பல வகையிலான வினாக்களுக்கு விடை கிடைக்குமாறு செய்யவேண்டும். உதாரணமாக, இரண்டாம் நூற்றாண்டில் வெண்பா வடிவத்தில் ஏதாவது பாடல் இருந்ததா? நச்சினார்க்கினியர் எந்தக் காலத்தவர்?' 'முள்ளும் மலரும்' என்ற நாவல் எப்போது எழுதப் பட்டது? முத் தொள்ளாயிரத்தின் காலம் என்ன? கம்பர் எத்தனை நூல்கள் எழுதியுள்ளார்? 'அரை நாள் வாழ்க்கையும் வேண்டலெனயானே' என்கிற வரி எந்த நூலில் உள்ளது? இவ்வாறான கேள்விகளுக்கு எல்லாம் விடை கிடைக்குமாறு, தகவல் தளக் கட்டமைப்பு தேவைப்படுகிறது. இது தற்போதைய சூழ்நிலையில் ஏறக்குறைய இயலாத காரியமாகத் தெரிகிறது. காரணம், தமிழின் எழுத் துருவாக்கத்தில் தரக்கட்டுப்பாடு இன்னும் வராததே! இன்று தமிழ் இலக்கியத்தின் அத்தனை நூல்களும் இணையத்தில் பல்வேறு ஆர்வலர்களால் உள்ளிடப்பட்டிருக்கின்றன. கனடாவில் ஒருவர் திவ்ய பிரபந்தம் அனைத்தையும் உள்ளிட்டிருக்கிறார்.
மதுரை திட்டத்தின் கீழ் திருமறைகள் உள்ளிடப்பட்டுள்ளன. திருக்குறள் பலரால் பல முறை உள்ளிடப்பட்டுள்ளது. சங்க நூல்கள், காப்பியங்கள், கம்பராமாயணம் என..... எல்லாமே இணைய உலகின் ஓர் ஓரத்தில் தனிக் குடித்தனம் நடத்துகின்றன. இவற்றை அணுகி, பயன் படுத்த முக்கியத் தேவை எந்த எழுத்துரு வாக்கத்தில் இவை உள்ளன என்பது தெரிய வேண்டும். டிஸ்கி, டாப், டாம், யூனிகோட் என்று நான்கு வகைகள் உள்ளன.

இது தேவையற்ற குழப்பம். யூனிக்கோட் முறையைத்தான் மைக்ரோ சொஃப்ட், Google போன்றவை பயன்படுத்தியுள்ளன. புகழ்பெற்ற தேடியந்திரங்களைப் பயன்படுத்த வேண்டுமெனில் முதல் தேவை யுனிக்கோடில் உள்ளிட்டிருக்க வேண்டும். இனி வரும் உள்ளீடுகள் எல்லாம் யூனிகோடில் இருந்தாக வேண்டும் என்கிற நியதியை எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும். இன்றைய யதார்த்தங்களில் இது சாத்தியமாகத் தெரியவில்லை. அவரவர் விருப்பப்படி உள்ளிடல் இன்னும் சில வருடங்கள் தொடரும் என்று தோன்றுகிறது. எனவே, இம் மாதிரியான வேறுபாடுகளுடன் சமரசம் செய்து கொள்ளும் வகையில் எந்த எழுத் துருவில் இருந்தாலும், யூனிக்கோட்டுக்கு மாற்றிக்கொண்டு, தேடக்கூடிய ஒரு தேடியந் திரத்தைச் செய்ய சில புத்திசாலிகள் முன் வந்திருக்கிறார்கள். குறிப்பாக, அண்ணா பல்கலைக்கழகத்தில் ஒரு தேடியந்திரம் செய்திருக்கிறார்கள் எனக் கேள்விப்படுகிறேன். இந்த முயற்சிக்கு நிதி வழங்கப்பட வேண்டும். இன்றைய கணிப்பொறி இயலில், இது வேண்டாத வேலையென்றாலும், தொழில்நுட்பப்படி சாத்தியமே! இணையத்தில் தமிழில் ஒரு கேள்வி கேட்கப் பட்டால், அது எந்த இணைய தளத்தில்... எந்த எழுத்துருவில் இருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து எங்கள் உள்ளூர் எழுத்தில் காட்டும் மென்பொருள் ஒன்று தேவை.

(தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# செம்மொழி...

38ஆம் பக்கத்தொடர்ச்சி

என் அனுபவத்தில், நான் கதையோ, கட்டுரையோ எழுதிக் கொண்டிருக்கும் போது இம்மாதிரியான கேள்விகள் எழும். அவற்றுக்குப் பதில் கிடைக்கும்வரை எழுத்து தடைப்படும். முன்பெல்லாம் புத்தகங்களையும், நூலகங்களையும் தேடிப் போவேன். இப்போது இணையத்தில் தேடிக் கண்டுபிடிக்க ஓரள வுக்கு முடிகிறது. தமிழ் இலக்கிய நூல்கள் முழுவதையும் நின்று, நிதானமாகப் பாகு படுத்தி எண்ணிக்கை கொடுத்து, தொடர்புகள் கொடுத்து வடிவமைத்தால் உலகெங்கும் ஒரே தகவல் தளத்தை அணுக, ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தரம் உயரும். யோக்கியமும் கூடும். ஆசியாவில் நிறுவனம், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் போன்றவை இதுவரை செய்த பாகுபாடுகளைக் கருத்தில் கொண்டு ஒருமிப்புக் குழு ஒன்று அமைத்து, அதற்குப் போதிய நிதியுதவி வழங்கி, இந்தக் காரியத்தை நிறைவேற்ற வேண்டும்.

தோமஸ் மோல்ரன் போன்றவர்கள் சங்க இலக்கியங்களை பட்டியல் படுத்தியுள்ளார்கள். எந்த வார்த்தையை உள் ளிட்டாலும் அது சங்க வார்த்தையெனில் எந்த நூலில், எந்தப் பாடலில், எந்த வரியில் வருகிறது என்று இந்தப்பட்டியல் சொல்கிறது. இதைப் போல் தமிழின் மற்றைய இலக்கியங்களுக்கும் தேவைப்படுகிறது. ஐம்பெரும் காப்பியங்கள், இராமாயண, பாரத காவியங்கள், பக்தி இலக்கியங்கள், இடைக்கால உதிரி இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் என அனைத்திற்கும் பட்டியல்கள் தேவைப்படும்.

2. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி நிறைய பேசிவிட்டோம். இதை செம்மொழி ஆராய்ச்சியின் அங்கமாகக் கொள்ளமுடியாது. எழுத்துக்கள் காலப்போக்கில் எவ்வாறு மாறி வந்திருக்கின்றன என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்யலாம். எழுத்தாளனான எனக்கு இனிமேல் எழுத்துச் சீர்திருத்தம் தேவையில்லை. இருக்கிற எழுத்துகளைச் சுருக்காமல் இருந்தால் போதும். புதிய எழுத்துக்கள் தேவையென்றால் அவற்றுக்குத் தன்னிச்சையாக எழுத்துக்கள் தோன்றலாம் அல்லது புதிய ஒலிகளைத் தமிழோசைகளாக மாற்றிக் கொள்ளலாம். உதாரணமாக, ஆங்கில 'ஸர்' என்பது, தமிழில் 'சார்' என்று ஆகிவிட்டது. இதில் நாம் ஜப்பானியர்களின் முறையைக் கடைப்பிடிக்கலாம். ஆங்கில வார்த்தைகளை அவர்கள் தங்கள் நாக்குக்கு சௌகரியமாக ஒலி மாற்றம் செய்து கொள்கிறார்கள். 'பால்' என்பதை, 'பாரு' என்கிறார்கள். 'கம்ப்யூட்டர்' என்பதை 'கம்யுத்தா' என்று மாற்றிக்கொள்கிறார்கள். ல, வ ஓசைகள் அவர்களுக்கு வராது. அதைப்பற்றிக் கவலையே படுவதில்லை. 'ல' ஒலியை, 'ர' ஒலியாக மாற்றிக் கொள்கிறார்கள். 'வ' ஒலியை, 'ப' ஒலியாக பெங்காலிகள் போல, நாம்தான் தூய்மை, தொன்மை என்பதைக் கட்டிக்கொண்டு புதிய வார்த்தைகளைப் பிரயோகிக்க, அல்லது ஒலிமாற்றத் தயங்கி ஒவ்வொரு வார்த்தைக்கும் தமிழ் தேடுகிறோம். இதிலும் ஒரு சிக்கல். புதிய சிக்கல். எத்தனை தமிழார்வலர்கள் உள்ளனரோ அத்தனை மொழி பெயர்ப்புகள் உள்ளன. அயல் வார்த்தைகளை நமதாக நமக்கேற்ப மாற்றிக்கொள்ளலாம் அல்லவா? ஆங்கிலக் கலைச் சொற்களை அப்படியே உபயோகிக்கலாம் என்று சொன்னால், அடிக்க வருவார்கள். மொழிபெயர்ப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. மொழிபெயர்த்த சொற்களில் ஒரு தரநிர்ணயம் கொண்டுவர வேண்டும். கலைச்சொற்களுக்கான ஓர் இணைய தளத்தில் இதுதான் எல்லோரும் பயன்படுத்த வேண்டிய மொழி பெயர்ப்பு என்று ஒப்பந்தம் செய்து கொண்டால், அவற்றைப் பயன்படுத்துவதில் என் போன்ற எழுத்



தாளர்களுக்குத் தயக்கமே இருக்காது. அதைப்பற்றி நான் உணர்ச்சி வசப்பட மாட்டேன். அதன் பொருத்தம் பற்றி கேள்வி கேட்கவும் மாட்டேன்.

எனக்கு இன்னொரு யோசனை தோன்றுகிறது. செம்மொழியின் ஏராளமான வார்த்தைகளை நவீன தமிழ் இழந்துவிட்டது. அந்த வார்த்தைகளை மறுபடி கொண்டு வந்து, நவீன தமிழின் கலைச் சொற்களாகப் பயன்படுத்தலாம். ஆங்கிலத்தில் கலைச் சொற்களுக்கு இலத்தீன், கிரேக்க வார்த்தைகளைப் பயன்படுத்துவதுபோல், நம் மருத்துவம், கணிப்பொறியியல், வேதியியல், இயற்பியல், கணிதம் போன்றவற்றுக்குச் செம்மொழிச் சொற்களை மீளப்பயன்படுத்தலாம். செம்மொழி தமிழுக்கு ஒரு கால வரையறை சொல்ல வேண்டும் என்ற கருத்துள்ளவர்கள் சில அறிஞர்கள். அதாவது, ஆறாம் நூற்றாண்டு வரைதான் செம்மொழி. அதன்பின் வருவது இடைக்காலத் தமிழும், நவீனத்தமிழ் என்று வரையறை செய்ய வேண்டும் என்கிறார்கள். இது பற்றியும் ஒருமித்த கருத்து ஏற்பட்டால் நல்லது. ஆராய்ச்சிப் பல்கலைக் கழகங்களில் தமிழ் நாற்காலிகளில் மட்டும் தான் செம்மொழி இப்போது நிகழ்கிறது.

இன்றைய சராசரித் தமிழனுக்கு இவ்வகை ஆராய்ச்சிகளால் நேரடியாகப் பயன் எதுவும் இருக்காது. மறைமுகமான சில பயன்கள் ஏற்படலாம். தமிழ் ஆராய்ச்சி மாணவர்களுக்கு அதிகப்படியான நிதி கிடைக்கலாம். அவர்கள் வீட்டில் வரவேற்பறையில் திண்டுகள் வைத்து தொலைக்காட்சிப் பெட்டி, குளிர்சாதனப்பெட்டி போன்றவை வாங்கலாம். செம்மொழி ஆராய்ச்சி இவைகளுடன் நின்று விடக்கூடாது. சமூகவியல், பொருளா தாரம், அறிவியல், அரசியல், வேளாண்மை என எல்லாத் துறைகளிலும் செம்மொழி ஆராய்ச்சி நிகழ வேண்டும். எல்லா இயலுக்கும் செம்மொழியில் உதாரணங்களும், சொற்களும் உள்ளன.

3. தமிழ் மொழி ஒன்றில்தான் இணையத்தில் கோப்புகளை அனுப்ப, இன்றைய தேதிக்கு சுமார் 26 முறைகள் உள்ளன. விசைப்பலகை, ஒதுக்கீடு நான்கு உள்ளன. கிரந்த எழுத்துக்களின் இடம்பற்றி தீர்மானமின்மை. தமிழ் எண்கள் குறித்தும். எழுத்துருவில் டாப், டாம், டிஸ்கி, யுனிக்கோல், இன்னும் விட்டுப்போன ஒன்றிரண்டு எத்தனை? எத்தனை இணையம் என்னும் மாளிகையில் நுழைவதற்கு முன்வாசலிலேயே நின்று கொண்டு ஒருவரை ஒருவர் நுழையவிடாமல் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த நிலை மாற செம்மொழித் தமிழுக்கு என்று ஒரே ஒரு விசைப்பலகை ஒதுக்கீடு. ஒரே ஒரு குறியீடு என்றவாறு யுனிகோட் ஒன்றியத்தின் அங்கீகாரத்துடன் நிலைப்படுத்தப்பட வேண்டும். இது செம்மொழியில் செய்யப்படும் ஆராய்ச்சிகள் எல்லோருக்கும் தெரிவதற்கு மிக முக்கியமான செயல்.

4. தமிழின் அகரவரிசை நெடுங்கணக்கு வரிசையை நெறிப்படுத்த வேண்டும்.

5. முனைவர்களுக்கு மட்டுமல்ல அவைருக்கும் செம்மொழி ஆராய்ச்சி உரியது என்பதை அரசு சார்ந்த நிறுவனங்கள் உணர வேண்டும். செம்மொழிக்கு வழங்கப்படும் நிதியுதவி செம்மையான முறையில் பயன்படுத்தப்படு வதை ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தீர்மானிக்கக் கூடாது.

6. தமிழில் எந்த மூலையிலிருந்தாலும் சமர்ப்பிக்கப்படும் ஆராய்ச்சிக் கட்டுரைகளின் நூல் அடைவு அல்லது நூல் விவரப்பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். செம்மொழி என்று அலங்கார ஒப்பனைகள் செய்து... தங்கக் கூண்டில் அடைத்து விடுவார்களோ என்கிற பயம்தான் என் போன்ற எழுத்தாளர்களுக்கு ஏற்படுகிறது.

7. ஆசியவியல் நிறுவனம் மேற்கொண்டிருக்கும் லெக்ஸிக்கன் (Lexicon) விரைவில் முடிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு நிதியுதவி தரவேண்டும். அதேபோல் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமும், தமிழ் இணையப் பல்கலைக்கழகம் செம்மொழி ஆராய்ச்சிக்கு நிதியுதவ வேண்டும். இவை செய்துவரும் பணி இதுவரை கவனிக்கப்படவில்லை. இவை சில மிகச் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளன.

8. ஆராய்ச்சி நூல்களை வெளியிட தனியார் பதிப்பகங்கள் உதவி செய்ய வேண்டும்.

9. அண்ணா பல்கலைக்கழகத்தின் 'களஞ்சியம்' போன்று செம்மொழிக்கான அங்கீகாரம் பெற்ற ஓர் ஆராய்ச்சி இதழ் பதிப்பிக்கப்பட வேண்டும். அதன் ஆசிரியர் குழுவில் பன்னாட்டு அறிஞர்கள் இடம்பெற வேண்டும்.

10. செம்மொழியில் எல்லா இலக்கியங்களுக்கும் திருத்தப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட பதிப்பு கொண்டுவர வேண்டும்.

நன்றி - தமிழ் அன்றும் இன்றும்
- சுஜாதா

## ஆதலால் காதல் செய்வீர்!



காதலுடன் வீரமும் கலந்ததே அக்காலம்
தோதிலாக் காதலால் தொல்லைதருவ திக்காலம்
சாதிமதம் பொருள்பார்த்துச் சாதிக்கும் இளைஞர்காள்
வேதனையாம் பெற்றோர்க்கு வேடிக்கை மற்றோர்க்கு.

கற்கின்ற காலத்தில் கல்விக்கு முன்காதல்
பெற்றவர்க்குத் தொல்லைதந்தே தொடர்கின்ற காதலின்று
சற்றுமே சிந்தியாத சவலைப் பருவமது
உற்றுணர்ந்தே சிந்திப்பீர் உத்தம புத்திரரே.

சிந்தித்துச் செயற்பட்டால் சீரழிவு ஏதுமில்லை
வெந்தபுண்ணில் வேல்பாய்ச்சல் விவேகம் அல்லவே
நிந்தைக்கு உட்பட்டே நீதிமன்றம் செல்லாதீர்!
சந்தி சிரிக்காத சாதனைகள் செய்யாதீர்!.

உள்ளத் துணர்வால் ஊற்றெடுக்கும் காதல்
கள்ளமிலாக் காதல் காலமெலாம் வாழ்காதல்
தெள்ளத் தெளிந்தறிந்தே தேர்ந்து கொண்டால்
வள்ளலாய் வாழ்வதற்கு வாய்ப்பதிகம் உண்டேதான்.

அன்புள்ளங் கொண்டவர்க்கு அகமெங்கும் காதலே
இன்பத்தைத் தேடுமுன் இதயத்தைக் காதல்கொள்வீர்
அன்பான பெற்றோரை அகமகிழ வாழவைத்தால்
இன்பத் துணையாளும் இல்லறத்தை வாழவைப்பாள்.

ஆதலால் காதல்செய்வீர் ஐயமின்றித் தேர்ந்தெடுத்த
சாதனைசெய் மங்கையை சாலச் சிறந்தவளைக்
காதற் கனியாக கைப்பிடித்த நங்கைமேல்
சோதனை செய்திடாதீர் சொந்தமவள் என்பதாலே.

காதலென்னும் பெருநிதியம் கைக்கூலி பெறுனர்க்கு
வேதனைப் பொருளது விலைபேசும் தரகர்க்கு
சாதிமதம் பார்க்கும் சால்பிலாப் பெற்றோரே
போதனைகள் வேண்டாம் போற்றிமகிழ் காதலையே.

காதலர்க்கோர் தினந்தந்த பாதிரியார் இன்றிருந்தால்
தீதென் றுணர்ந்திடுவார் தேர்ந்தறிந்த செய்திகளால்
வீதியெங்கும் வெறியாட்டம் கோட்டலில் களியாட்டம்
வேதனைசேர் விரக்திதானே விளம்பரம் வர்த்தகர்க்கே.

- முருகேசு மயில்வாகனன் -

# விளையாட்டுத் தகவல்கள் 402



- எஸ். கனேஷ் -

நியூசிலாந்திடம் தோற்றது இந்தியா - நியூசிலாந்து அணிக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் அனைத்து போட்டிகளையும் இழந்து அதிர்ச்சி அளித்துள்ளது இந்திய அணி. இந்த தோல்விக்கு என்ன காரணம் என விமர்சகர்கள் பல காரணங்களை அடுக்கி வருகின்றனர். முக்கிய வீரர்கள் காயம், முன்னணி வீரர்கள் சரியாகப் பங்களிக் காமல் ஏமாற்றியது, பந்துவீச்சில் அதிக ஓட்டங்களை கொடுத்த வேகப் பந்து வீச்சாளர் என பல்வேறு காரணங்கள் கூறப்படுகிறது.



ரோஹித் சர்மா, தவான் - ரோஹித் சர்மா, ஷிகர் தவான் இருவரும் நியூசிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரில் காயம் காரணமாக பங்கேற்கவில்லை. அனுபவ தொடக்க வீரர்கள் இல்லாதது இந்திய அணிக்கு பெரும் பின்னடைவாக அமைந்தது. முன்னதாக நடந்த ரி20 தொடரில் ரோஹித் சர்மா மட்டும் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் அந்தத் தொடரில் சிறப்பாக செயல்பட்டார். அதில் இந்தியா 5-0 என வெற்றி பெற்றது.

தொடக்க வீரர்கள் - ரோஹித், தவான் இல்லாத நிலையில், கே.எல் ராகுல் தொடக்க வீரராகக் களமிறக்கப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவரை துடுப்பாட்ட நிரலில் பின்தள்ளி விட்ட அணித்தலைவர் கோலி, மயங்க் அகர்வால், ப்ரித்வி ஷா என இரண்டு அறிமுக வீரர்களை ஒருநாள் தொடரில் களமிறக்கினார். ப்ரித்வி ஷா ஓரளவு ஓட்டங்களை சேர்த்தாலும் அதிகபட்சமாக 40 ஓட்டங்களைதான் எடுத்தார். மயங்க் அகர்வால் இரண்டு போட்டிகளில் ஒற்றை இலக்கத்தில் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

மோசமான வேகப் பந்துவீச்சு - அடுத்து இந்திய அணியின் வேகப் பந்துவீச்சு இந்த தொடரில் படுமோசமாக இருந்தது. முதல் போட்டியில் மட்டுமே ஷமி ஆடினார். ஒருபுறம் ஷர்துல் தாக்குர் ஓட்டங்களை கொடுக்க, மறுபுறம் பும்ரா விக்கெட் வீழ்த்த முடியாமல் திணறினார். சுழற் பந்துவீச்சுத்தான் இரண்டாம் மற்றும் மூன்றாம் போட்டிகளில் அணியை ஓரளவு காப்பாற்றியது. ஆனால், வெற்றிக்கு அது போதவில்லை.

பும்ரா நிலை - பும்ரா இந்த மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஒரு விக்கெட் கூட வீழ்த்தவில்லை. மூன்று போட்டிகளிலும் 10 ஓவர்கள முழுமையாக வீசிய அவர் 53, 64, 50 ஓட்டங்கள் கொடுத்து இருந்தார். முன்னதாக அவுஸ்திரேலிய ஒருநாள் தொடரின் கடைசிப் போட்டியிலும் அவர் விக்கெற் வீழ்த்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வாரி இறைத்த தாக்குர் - ஷர்துல் தாக்குர் மூன்று போட்டிகளிலும் ஓட்டங்களை வாரி இறைத்தார். இரண்டு போட்டிகளில் 80 மற்றும் 87 ஓட்டங்கள் கொடுத்து பெரும் அதிர்ச்சி அளித்தார். ஆனாலும், இவரை விடாமல் அணியில் வைத்திருந்தார் அணித்தலைவர் கோலி. இது தோல்விக்கு மிக முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது. ஷமி எங்கே?

முதல் போட்டியில் ஆடிய ஷமி சுமாராகவே பந்து வீசினார். மூத்த வீரரான அவரை அடுத்த இரு போட்டிகளில் அணியில் தேர்வு செய்யவில்லை அணித்தலைவர் கோலி. ரெஸ்ற் தொடருக்காக அவருக்கு ஓய்வு அளிக்கப்பட்டு இருப்பதாக கூறினார். பும்ரா, தடுமாறிவரும் நிலையில், மூத்த வீரரான ஷமியும் அணியில் இல்லாதது வைட்வாஷ் தோல்விக்கு மற்றொரு முக்கிய காரணம்.

கைவிட்ட கோலி - அணித்தலைவர் கோலி, இந்தத் தொடரில் அரைசதம் அடித்தார். ஆனால், மூன்று போட்டிகளில் மொத்தமாக 75 ஓட்டங்களை மட்டுமே எடுத்தார். அதன் சராசரி 25 ஆகும். கடந்த நான்கு ஆண்டுகளில் ஒருநாள் தொடர் ஒன்றில் கோலியின் மோசமான செயல்பாடு இதுவாகும்.

ஆறாவது பந்துவீச்சாளர் எங்கே? - மூன்று போட்டிகளிலும் இந்திய அணி ஆறாவது பந்துவீச்சாளரை பயன்படுத்தவில்லை. சரியாக ஐந்து பந்துவீச்சாளர்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டனர். அதனால், நியூசிலாந்து வீரர்கள் குறி வைத்து குறிப்பிட்ட பந்துவீச்சாளர்களை தாக்கினர். கோலி ஏன் முதல் இரண்டு போட்டிகளில் ஆறாவது பந்துவீச்சாளராக அணியில் சேர்க்கப்பட்டு இருந்த ஜாதவ்வை ஏன் பயன்படுத்தவில்லை என்ற கேள்வி எழுந்துள்ளது?

தோனி, ரோஹித் உதவி இல்லை - அணித்தலைவர் கோலி அணித் தேர்வில் பல சொதப்பல்களை செய்த நிலையில், தோனி மற்றும் ரோஹித் சர்மா அணியில் இல்லாததுதான் அதற்கு காரணம் என சிலர் கூறுவதையும் மறுக்க முடியவில்லை. அணித்தலைவர் கோலியின் தலைமையில் இது ஒரு மோசமான தொடராக அமைந்து விட்டது என்பதை மறுப்பதற்கில்லை.



# முதல் முறையாக ஜூனியர் கிரிக்கெற் உலகக் கோப்பையை கைப்பற்றியது வங்கதேசம்

19 வயதுக்கு உட்பட்டோருக்கான 13ஆவது உலகக்கோப்பை கிரிக்கெற் தொடர் தென் ஆபிரிக்காவில் நடை பெற்றது. இதில் அரையிறுதிப் போட்டியில் இந்திய அணி, பாகிஸ்தான் அணியையும் வங்கதேச அணி, நியூசிலாந்து அணியை யும் வென்று இறுதிசுற்றுக்கு முன்னேறின. ஜூனியர் உலகக்கோப்பை கிரிக்கெற் இலக்கு 170ஆக நிர்ணயக்கப்பட்டது. மூன்று விக்கெற்றுகள் மிச்சமிருந்த நிலையில் 42.1 ஓவரில் வெற்றி இலக்கை எட்டியது வங்கதேசம்.

இந்தியா மற்றும் வங்கதேசம் ஆகிய இரு அணிகளும் ஏற்கனவே ஜூனியர் உலக கோப்பை போட்டியில் 4 முறை நேருக்கு



தொடரின் இறுதிப்போட்டியில் நாணயச் சுழற்சியை வென்ற வங்கதேச அணி பந்து வீச்சைத் தேர்வு செய்தது. இந்திய அணி 25 ஓவரில் ஒரு விக்கெற்றுக்கு 80 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. இந்திய அணியின் ஜெயிஸ்வால் 44 ஓட்டங்களும், திலக் வர்மா 28 ஓட்டங்களும் எடுத்திருந்தனர். அதன்பிறகு தொடர்ந்து விக்கெற்றுக்களை பறிகொடுத்தது இந்திய அணி. இறுதியாக 47.2 ஓவர்களில் 177 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெற்று களையும் இழந்தது.

178 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வங்க தேசம் விளையாட ஆரம்பித்தது. ஏழு விக்கெற்றுக்களை இழந்து 163 ஓட்டங்களை வங்க தேசம் எடுத்திருந்த நிலையில் மழையால் ஆட்டம் தடைப்பட்டது. இதனால் “டக் வேர்த் லூவிஸ்” முறைப்படி வெற்றி

நேர் சந்தித்துள்ளன. இதில் 3இல் இந்தியாவும், ஒன்றில் வங்கதேசமும் வெற்றி பெற்றுள்ளன. இந்திய ஜூனியர் அணி இதுவரையில் 4 முறை உலகக் கோப்பையை வென்றுள்ளது. இந்தப் போட்டியில் வென்றதன் மூலம் முதல் முதலாக உலகக் கோப்பையை கைப்பற்றி வங்கதேசம் சாதனை படைத்துள்ளது. ஐசிசி தொடரில் இறுதிச் சுற்றுக்கு வங்கதேச அணி முன்னேறியது இதுதான் முதல் முறையாகும். சீனியர், ஜூனியர் என எவ்வித அணியும் இதுவரை இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெறவில்லை. இந்திய அணி தனது ஏழாவது முறையாக இறுதிச் சுற்றுக்குக் களமிறங்கியது. முன்னதாக இந்தியா அணி 2000, 2006, 2008, 2012, 2016, 2018 ஆண்டுகளில் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது. அதில் நான்கு முறை கோப்பை (2000, 2008, 2012, 2018) வென்று சாதித்தது.

## டக்வேர்த் லீவிஸ் முறை

டக்வேர்த் லீவிஸ் முறை (Duckworth–Lewis) என்பது மழை குறுக்கிட்ட கிரிக்கெற் ஆட்டங்களில் மாற்றப்பட்ட இலக்கினை வகுப்பதற்காக கண்டறியப்பட்ட கணித முறையாகும்.

டக்வேர்த் லீவிஸ் முறையில் இன்னும் சில மாற்றங்கள் செய்யப்பட்டு, தற்போது டக்வேர்த் லீவிஸ் ஸ்டெர்ன் (Duckworth–Lewis–Stern method (DLS) முறை பயன்படுத்தப்படுகிறது.

இம்முறையைப் பார்ப்பதற்குமுன் அதற்குமுன் பயன்படுத்தப்பட்ட இருமுறைகள் பயன்படுத்தப்பட்டன.
1.சராசரி ஓட்ட விகித முறை:(Average Run rate method):
2. Mean productive over என்ற முறையினைப் பின்பற்றினர். இம்முறைகள் ஆடும் அணிக்குச் சாதகமாக இருந்ததால் சர்ச்சைகளை உண்டாக்கின. அது டக்வேர்த் லீவிஸ் முறைக்கு வழிகோலியது. டக்வேர்த் லீவிஸ் முறை புள்ளியியல் முறைகளை பயன்படுத்துவர். இது ஓர் அணிக்கு மீதமிருக்கும் வளங்களைப் பொறுத்து, வென்றதா தோற்றதா என்பதற்கும், இலக்கை மாற்றியமைப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

இங்கு வளங்கள் (resources) என்பது ஓவர்களையும், விக்கெற்றுக்களையும் குறிக்கும். ஒரு அணி ஆடத்தொடங்கும்போது, அதனிடம் 100% வளங்கள் இருக்கும். அதாவது பத்து விக்கெற்றுக்கள், 50 ஓவர்கள் என்பதுதான் 100% வளங்கள். மழை குறுக்கிடும்போது, இந்த அளவுகோலைப் பின்பற்றித்தான் இலக்கை மாற்றியமைப்பர்.

# மூத்த இனிய செம்மொழி




வாசகர்களும் மக்களும் அகத்தியரும்
எழுதுகோலும் புத்திஜீவிகளும்
ஆழமாக அறவழியில் தேவை உணர்ந்து
மனச்சாட்சிகொண்டு சிந்திக்கின்றனர்;

தொன்மைத் தமிழ் மொழியின் ஒலியில்
சிதைவுகள் நிகழ்வதை உணரும்போதெல்லாம்
இதயம் அதிர்ந்து வலி எடுக்கின்றது

அழகிய தமிழ்ப் பெயர்கள் கவலையுற
அந்நிய மொழிக் கவர்ச்சி கலந்து பெயர் அடையாளம்
சூடிக்கொள்வதன் காரணம் புரியவில்லை

தமிழ் இதழ்களிலும் ஏனைய படைப்புகள்
தமிழ் ஆக்கங்களிலும் கஞ்சியில் பயறுபோல்
பிறமொழிக் கலப்புகள் செருகப்படுவது வேதனை தருகின்றது

தொலைக்காட்சி அலைவரிசைகளிலும்
வானொலிகளில் தொழில்நுட்ப சாதனங்களிலும்

கலப்படமற்ற தமிழ் பேசுவதில் எழுதுவதில்
இடர்பாடுகள் தெளிவின்மைகள் தெரிகின்றன

வணிகவேக விளம்பர வகையறாக்களிலும்
பிறமொழிகளின்
சொல்லாடல்கள் பல வழிகளில் புகுத்தப்படுகின்றன

பண்டைய வாழ்வியல் வரலாற்று யுகத்தில்
எழுதிய தமிழ் ஏட்டு எழுத்துச் செல்வங்களைத்
தீயிலும்;ஆற்றிலும்; வீசும்படியாகத்
தூண்டிவிட்ட செய்திகளைப்
பழைய இலக்கியச் சொற்களில்
சுழியோடித் தடவிப்பார்த்து ஆய்வாளர் அறிந்துகொள்வர்.

செம்மொழியாம்
தமிழ்மொழியில்
கலப்படம் நடைபெறுவது பற்றிய காத்திரமான
தேடல்கள் அக்கறைகள் உறுதிப்பாடுகள்
அறிஞர்களின்
ஆழ்ந்த சிந்தனை வெளியில் தோன்றுவது
மொழியின் அழகியலை நிலைநாட்டும் முயற்சியெனப்
பனை ஓலையும் எழுத்தாணியும் நம்புகின்றன.



முத்துராஜா


# தொடர் கட்டுரை வெளியீடு!

'விளம்பரம்' இதழின் வாசகர்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாக 'ஆழியவளை' ஆய்வு நூல் தொடர்ச்சியாக வெளிவரவுள்ளது. கந்தசாமி முத்துராஜா அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட இந்நூலுக்கு இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சால் விருது வழங்கப்பட்டது.

புத்தகத்தின் முன்னட்டைப் படமும் சுருக்கமான குறிப்பும் அறிமுகமாக இங்கே தரப்படுகின்றன. அடுத்த வெளியீட்டில் இருந்து கட்டுரைத்தொடர் வெளியாகும்.

யாழ்ப்பாணக் கடலோரக் கிராமம் ஒன்றினது வாழ்க்கை மரபுகளையும் மாற்றங்களையும் நேர்மை உணர்வுடனும் உன்னிப்புடனும் விபரிக்கும் இந்நூல் ஆழியவளைக் கிராமம் பற்றிய ஒரு சமூக மானிடவியல் விவரணமாக அமைகின்றது. வடமராட்சி கிழக்கின் ஏனைய கடலோரக் கிராமங்களுக்கும் பெரும்பாலும் இந்நூல் பொருந்தும்.

இந்நூலாசிரியர் தான் பிறந்து வளர்ந்த இக்கிராமத்து மரபு மாற்றங்களை விபரிப்பதற்கு ஏறத்தாழ 1950_2020வரை ஒரு பிரிகோடாகக்கொண்டு 1950க்கு




முன்னர் இருந்த நிலைமைகளையும் 1960களிலிருந்து ஏற்பட்டுவரும் மாற்றங்களையும் ஏறத்தாழ ஒரு தினக் குறிப்பு விவரணம்போலக் கூறிச் செல்கின்றார்.

யாழ்ப்பாணத்தின் சமூக யதார்த்தங்களை உள்ளது உள்ளவாறே ஆனால் எவரது மனமும் புண்படாமல் எடுத்துக்கூறிச் செல்லும் இந்நூலாசிரியரின் இந்த ஆக்கம் யாழ்ப்பாணப் பண்பாட்டையும் வாழ்வையும் ஆதர்சமயப்படுத்தும் (உன்னதமாகக் கூறும்) போக்கிலிருந்துவேறுபட்டு நிற்கின்றது. இத்தகைய நூல்கள்தான் யாழ்ப்பாணத்தின் உண்மையான சமூக வரலாறு எழுதப்படுவதற்குத் தளமாக அமையப்போகின்ற ஆவணங்களாகும்.

யாழ்ப்பாணச் சமூகத்தில் படிப்படியாக ஆனால் நிச்சயமாக ஏற்பட்டுவரும் நவீன மயப்பாட்டையும் சனநாயக மயப்பாட்டினையும் உய்த்தறிந்து கொள்வதற்கும் இந்நூல் உதவுகின்றது. ஏறத்தாழ முப்பது ஆண்டு காலம் உள்நாட்டு யுத்தத்தினால் நிலைகுலைந்திருந்த யாழ்ப்பாணத்துச் சமூக மரபுகளிற் சிலவற்றை அறிந்து கொள்வதற்கும் இந்நூல் பெரிதும் உதவுகின்றது.

கந்தசாமி முத்துராஜா தமிழியலில் (M.A) முதுமாணி நிறைவு செய்தவர். ஆய்வு நூல், நாவல், கவிதைத் தொகுப்பு முதலிய ஆக்கங்களை வெளியிட்டவர்.

## நெல்லியடி சமூக அறக்கொடை அமைப்பின் விசேட பரிசளிப்பு நிகழ்வு!

நெல்லியடி சமூக அறக்கொடை அமைப்பின் (NCC) புலமைப் பரிசில் திட்டத்தில் இணைந்துள்ள மாணவர்களுக்கான விசேட பரிசளிப்பு நிகழ்வும், வருடாந்த ஒன்றுகூடலும் பெப்ரவரி 08, 2020 சனிக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி கலையரங்கில் சிறப்புற நடைபெற்றது.





தெல்லிப்பளை பிரதேச செயலர் திரு. ச. சிவசிறி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் திரு.இ. இளங்கோவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.யோ.ரவீந்திரன், ஓய்வு நிலை அதிபர் கலாநிதி செ.சேதுராஜா, நெல்லியடி கொமர்சல் வங்கி முகாமையாளர் திருமதி தபோதினி கஜரூபன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் திரு. க.கிருஷ்ணகுமாரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகியுள்ள வசதி குறைந்த மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கி வைக்கப்பட்டன. மற்றும் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சைக்கிள்கள், பணம் என்பனவும் நிகழ்வின்போது வழங்கப்பட்டன.

புலம்பெயர்ந்து வாழும் உறவுகளின் நிதிப் பங்களிப்பில் இயங்கும் நெல்லியடி சமூக அறக்கொடை அமைப்பு வசதி குறைந்த மாணவர்களுக்கு ஊர், பிரதேசம் கடந்து அதன் சேவையை மேற்கொண்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## கோபுரமேறிக் குளிர் நீராட்டிய தமிழ்!



வஞ்சி யெந்தமிழ் அன்னை யோதுவார்
நாவில் நர்த்தன மாடிட
விஞ்சு மோவட வேத மந்திர
மென்று யாவரும் கூறிட
மஞ்சு ளாவிய கலச கோபுரம்
மங்க லப்பொலி வேறிடத்
தஞ்சை மண்மிசை தமிழொ லித்திடத்
தலைநி மிர்ந்தது காணடா!

நாம மைத்தபொற் கோபு ரங்களை
நாஞ்செ துக்கிய சிலைகளை
நாம்வ ணங்கிடும் நம்பிரான்தனை
நற்ற மிழ்தனிற் போற்றவும்
தேம்பொ ழில்மலர் தூவிப் பன்னிரு
திரும றைகளை யோதவும்
தீந்த மிழ்உணர் வோடு தஞ்சையில்
திரண்டெ ழுந்தனர் காணடா!

சோழ மன்னவன் ராச ராசனின்
சுவடு சொல்லிடும் சிற்பமே
வாழும் செந்தமிழ் மொழியி லக்கண
வடிவம் கொண்டபொற் கோயிலே
சூழும் பண்ணொலி யோடு பூசனை
செய்வ தேமுறை யாகுமே
மீளெ ழுச்சியோ டாள வேண்டிய
மாற்ற மொன்றினி வேண்டுமே!

கவிஞர் மாவிலி மைந்தன் சி.சண்முகராஜா




# “முத்தமிழால் மூவுலகும் நிறைந்த தமிழ்”

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
கவினுடன் முன்தோன்றி மூத்ததமிழ்
பல்லோரும் புகழாரம் சூட்டிவாழ்த்த
பகலவன்போல் சுடர்விட்டொ ளிர்ந்த தமிழ்
அல்லும் பகலும் நல்லடியார்க்கருளும்
ஆதிசிவன் பெற்றெடுத்த அமுதத்தமிழ்
நெல்லுயரக் குடியுயரும், குடியுயர
நெடும் புகழொடு கோனுயர்வானென் றுரைத்ததமிழ்!

சேர, சோழ பாண்டியர் காலத்தே
செந்தமிழுக்காய் முச்சங்க மமைத்து
தாராள சிந்தையுடன் போற்றி வளர்க்க
தடையற கலை இலக்கியமாய் மலர்ந்த தமிழ்
ஏரோடிய கிராமத்து மண்களிலும்
எளிய நாட்டுப் பாடல்களாய் ஜனித்த தமிழ்
பா ரோர் போற்றிய புலவர்களால்
வெண்பா, விருத்தம், செய்யுளாயுரு வானதமிழ்!



கம்பனும், காளிதாசனும் காதலித்த தமிழ்
கண்ணகியை கற்புக்கரசியாய் காட்டிய தமிழ்
எம்பெருமானை குற்றவாளியாய் நிறுத்திய
எளிய நக்கீரனால் உயர்ந்த தமிழ்
செம்மாதுளையின் முத்துக்களாய் இனித்து
செகமெலாம் இன்பத்தைத் தந்ததமிழ்
கொம்பர்களும் கொடியோரும் தீண்டமுடியா
கோபுரமாய் நிற்கும் கொஞ்சு தமிழ்!

எத்தனை மொழிகள்தான் கற்றாலும்
எண்ணிய நொடியினில் இனிக்கும் தமிழ்
எத்தனை மொழிகள்தான் இருந்தாலும்
செம் மொழியாம் தமிழுக்கிணை உண்டாமோ?
வித்தகராம் பாரதியால் வீரம்தந்ததமிழ்
விடுதலைக் கீதங்களால் நிலைத்ததமிழ்
முத்தமிழால் மூவுலகும் நிறைந்த தமிழ்
முடிவுறா ஆயுளுடன் வாழும்தமிழ்!



கவிஞர் புரட்சிபாலன்
வன்சுவர்

# திகிலும்...

27ஆம் பக்கத்தொடர்ச்சி

இயற்கை ஆர்வலர்கள் கூடப் பயந்து நடுக்கும் இந்தத் தீவில் இதுவரை 21 வகை பறவைகள் இருப்பதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தீவிலுள்ள கலங்கரை விளக்கக் காப்பாளர் பாம்புகளால் தாக்கப்பட்டு இறந்தார். அதன் பிற்பாடு தானியங்கியாக்கப்பட்டுள்ளது. பிரேசில் அரசாங்கம் அங்கு பார்வையாளர்கள் செல்வதைத் தடை விதித்துள்ளது என அறிகிறோம்.

**மார்ஷல் தீவுக்கூட்டங்கள்** (The Marshall Islands): அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் அழகிய மார்ஷல் தீவுக்கூட்டங்கள் என்ற குட்டி நாடு உள்ளது. இது பசிபிக் கடல்



பிராந்தியத்தில் உள்ளது. இங்கு கடந்த 1946 மற்றும் 1958ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா அணு குண்டுளை வெடிக்க வைத்து சோதனைகள் நடத்தியுள்ளது. 67 தடவை இந்தப் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

அது ஜப்பானின் ஹிரோஷிமாவில் வீசிய அணுகுண்டைவிட 1000 மடங்குக்கு மேல் சக்தி வாய்ந்தவை. அங்கு அணுகுண்டு வீசப்பட்டதால் மார்ஷல் தீவுகளும் அதை சுற்றியுள்ள பகுதிகளும் கதிர்வீச்சு அபாயத்தால் பாதிக்கப்பட்டது. எனவே, பிகினி அடோல் தீவு மற்றும் அதைச் சுற்றித் தங்கியிருந்த மக்கள் வெளியேறினர். குண்டுவீச்சு நடத்திய 3 ஆண்டுகளுக்கு பிறகு அதாவது 1957ஆம் ஆண்டு அங்கு சென்று குடியேறினர். இன்னும் அப்பகுதியில் கதிர்வீச்சு உள்ளது.

பின்னர் 1985ஆம் ஆண்டு அங்கிருந்து வெளியேறி வேறு பகுதிகளில் தங்கி வாழ்ந்து வருகின்றனர். அதனால் தங்களது வாழ்வும், சந்ததியினரின் எதிர்காலமும் பாதிக்கப்படும் என அஞ்சுகின்றனர். கதிர்வீச்சுப் பாதிப்பு இன்னும் இருந்து வருகிறது. அணுகுண்டு சோதனை நடத்தியதால் ஏற்பட்ட கதிர் வீச்சுப் பாதிப்புக்காக மார்ஷல் தீவுக்கு அமெரிக்கா 150 மில்லியன் டொலர் நஷ்டஈடாக வழங்கியது.

இங்கு அணுகுண்டு சோதனை நடத்தி 60 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அது பற்றிய நினைவுதினம் மார்ஷல் தீவின் தலைநகர் மஜுரோவில் கடைபிடிக்கப்பட்டது. இருந்தும் இன்னும் அங்கு கதிர் வீச்சு அபாயம் இருப்பதாக மக்கள் அஞ்சுகின்றனர். மார்ஷல் தீவுகள் ஒரு வெப்பமண்டல சொர்க்கம் போல தோன்றுகின்றன. சில சுற்றுலாப் பயணிகள் அடிப்படை வசதிகளுடன் கடல் வாழ் இனங்களையும் மற்றும் பவளப்பாறைகளையும் மற்றும் பரந்த கடற்கரைகளையும் சென்று அனுபவிக்கின்றனர்.



# MORTGAGE SOLUTIONS

SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING

$2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Kapital Care Mortgage Inc. Lic#12623

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

## GET APPROVED WITHIN 24 HOURS


# 416.298.2777

$375 Mo.

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5



BUYING OR SELLING
Indra Michael Xavier
Sales Representative
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
905-201-9977


we always care at . . .
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
( close to Warden and Finch , in the TD BANK PLAZA)


வீடு வாங்க,விற்க,வாடகைக்கு பெற்றிட...
வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதிக்கும்...
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
416.670.7436
✓ Buy/Sell/ Lease
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
VJS Financial Services
We ease your cost of living
5215 Finch Ave East. Unit 202 Toronto ON M1S 0C2


PLUS YOU
DRIVING SCHOOL
CERTIFIED ROAD SAFETY INSTRUCTOR
NOW HIRING
DRIVING INSTRUCTORS
Training will be provided
For more Info:
Balan 416.999.7727



வீடு வாடகைக்கு...
வாங்க...
விற்க...
Vasanta Raviendren
Realtor/Financial Advisor
Cell: 416-716-1540
Life Insurance
Non Medical
Super Visa
RESP
Mega Financial Group
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2


IT'S YOUR MOVE...
Let me help you make the right one.
Century 21
Titans Realty Inc.,
Brokerage.
Sudharshan
Broker
Direct: 416.567.6209
Residential / Commercial • Purchase • Sale • Investment • Leasing


வீடு வாங்க, விற்க நட்பான சேவை
Ponnambalam Mahalingam
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/ Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr, Suite 205 Markham ON L3S 4N8   Bus: 905.201.9977
வருமான வரி சேவை   Income Tax e-File
416.288.1548 / 416.729.0955


HOMES & CONDOS FOR SALE
Brock/Rossland - Whitby
$499,000
Gas Station
York St/Bremner St - Toronto
$749,900
Condo Apt - 2BR/1WR
Cambray Rd/North St - Kawartha
$369,900
Bungalow -2BR/1WR
1st & 2nd Mortgage available upto 1Million
A.ANTON JEEVA,FRI
Broker
Dir: 416.575.5055
RE/MAX
anton.jeeva@gmail.com
www.getanton.com
ROYAL PROPERTIES INC
Phone: (416) 321-0110


• Employment Law
• Wrongful Dismissal
• Severance Packages
• Human Rights
• Landlord and Tenant Law
• Employment Standards
Aravinth Jegatheesan
Barrister and Solicitor
437.229.9643
email: ara@aravinthlaw.ca   www.aravinthlaw.ca
ARAVINTH LAW 920 Yonge St, Suite 510 Toronto, ON, M4W 3C7


ATSEY
FINANCIAL GROUP LTD
MORTGAGE STRESS?
WORK WITH ALL MAJOR LENDERS
2nd and private financing available.
Call 416.333.9393
MORTGAGE ALLIANCE
PURCHASE • REFINANCE • INVESTMENT PROPERTIES


ROYAL MEDICAL AND
PROFESSIONAL CENTRE
2225 Markham Road, Scarborough
UNITS AVAILABLE FOR SALE
Amalraj Joseph
Sales Representative
416.300.8294
amalraj.joseph@gmail.com
HomeLife/GTA Realty Inc. Brokerage*


B.J டெய்லரிங் அன் ஜுவலரி
TAILORING & JEWELLERY CLASSES
We provide training in
Jewellery making and Tailoring
தையல் பயிற்சி மற்றும் ஜுவலரி செய்யும் முறைகள்
கற்றுக் கொடுக்கப்படும்
தொடர்புகளுக்கு: 416-720-4472
email: jegathees2007@gmail.com


Coaching • Yoga • Meditation • Healing • Astro Guidance
S&S EVOLVE
Varany Sivathasan
Life Coach • Healer
Yoga & Meditation Instructor
416.875.0553
Info@ssevolve.com
Unit 8, 151 Nashdene Court, Scarborough,ON M1V 2T3